சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
20 செப்டம்பர் 2025
சென்னை
14 பக்கங்கள் ரூ.9




# எம்.பி. தொகுதி நிதி: ரூ.10 கோடியாக உயர்த்த வேண்டும்

## மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

**சென்னை, செப். 19:** நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.10 கோடியாக உயர்த்த வேண்டுமென மத்திய அரசை முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய அரசு அளிக்கும் அந்த நிதி இப்போது ரூ.5 கோடியாக உள்ளது.

மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஐந்தாவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடு 1989-இல் தொடங்கப்பட்டது. கிராமப்புறங்களில் 3.38 லட்சம் குழுக்களும், நகர்ப்புறங்களில் 1.41 லட்சம் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களில் 55.12 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர்.

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டு வருவதுடன், இதுவரையில் ரூ.1.25 லட்சம் கோடி வங்கிக் கடன் இணைப்பாக அளிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கான அடையாள அட்டைகள் முழுவீச்சில் விரைவில் வழங்கப்படும்.

**ரூ.10 கோடியாக உயர்த்துங்கள்:** நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2021-22-ஆம் ஆண்டுமுதல் 2025-26 வரை ரூ.1,274 கோடி ஒதுக்கீடு வரப்பெற்றது. இதில் 12,045 பணிகள் எடுக்கப்பட்டு இதுவரை 9,755 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2,290 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாட்டில் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக மாநில அரசு சார்பில் தலா ரூ.3 கோடி வழங்கப்பட்டு, ஆண்டுக்கு ரூ.702 கோடியில் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படுகின்றன.




சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு தொகுதி நிதியாக தலா ரூ.3 கோடி வழங்கப்படும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.10 கோடியாக மத்திய அரசு உயர்த்த வேண்டும். இக் கோரிக்கையை இந்தக் கூட்டத்தின் வாயிலாக தீர்மானமாக நிறைவேற்றி பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் பணிகளின் சுருக்க அறிக்கையை நேரடியாகப் பதிவிறக்கம் செய்யும் வகையில் இ-சாக்‌ஷி போர்ட்டலை மேம்படுத்தவும், பணி ஒப்புதல் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க, அந்தப் பொறுப்பை மாநில நோடல் ஏஜென்சிக்கு வழங்கவும் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

**பெண்கள்-குழந்தைகள் நலன்:** ஊட்டச்சத்து குறைபாடில்லாத குழந்தைகள் நிறைந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவது அரசின் முக்கிய நோக்கமாகும். இதைக் கருத்தில்கொண்டு 6 வயது வரையிலான சுமார் 22 லட்சம் குழந்தைகளுக்கு சத்துமாவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 5.50 லட்சம் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துமாவு வழங்கப்படுகிறது.

'ஊட்டச்சத்தை உறுதி செய்' எனும் திட்டப்படி, முதல்கட்டமாக 1.07 லட்சம் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளில் 77.3 சதவீதம் பேர் இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளனர்.

அரசின் அனைத்துத் திட்டங்களும் கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடையும் நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் அனைத்துத் திட்டங்களிலும் மாநில அரசின் பங்குத் தொகை எந்தவித கால தாமதமும் இல்லாமல் விடுவிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, மத்திய அரசும் தனது நிதியைச் சரியான நேரத்தில் மாநில அரசுக்கு வழங்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

**எம்.பி.க்கள் பங்கேற்பு:** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைகளின் செயலர்கள் தங்களது துறைவாரியான திட்டங்கள் தொடர்பாக கருத்துகளைத் தெரிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, தொல்.திருமாவளவன், கே.சுப்பராயன், மாணிக்கம் தாகூர், சு.வெங்கடேசன், துரை வைகோ, நவாஸ் கனி ஆகியோர் பங்கேற்று தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் நா.எழிலன், வி.ஜி.ராஜேந்திரன், நீலமேகம், தன்னார்வலர்கள் தீபிகா, கருணாகரன் ஆகியோரும் தங்களது கருத்துகளைக் கூறினர்.

## விஜய் சுற்றுப்பயணம்: தொண்டர்களுக்கு கட்டுப்பாடு




**சென்னை, செப். 19:** தவெக தலைவர் விஜய்யின் சுற்றுப்பயணத்தை முன்னிட்டு, அந்தக் கட்சி சார்பில் தொண்டர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

(விரிவான செய்தி உள்ளே)

## வால்பாறை செல்ல நவ.1 முதல் இ-பாஸ்

### உயர்நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, செப். 19:** கோவை மாவட்டம் வால்பாறைக்கு செல்ல வரும் நவ.1-ஆம் தேதிமுதல் இ-பாஸ் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

வனம், சுற்றுச்சூழல், வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறது.

இந்த அமர்வின் உத்தரவுப்படி, உதகை மற்றும் கொடைக்கானலுக்குச் செல்ல இ-பாஸ் நடைமுறையை அரசு அமல்படுத்தி வருகிறது. மேலும், உதகை, கொடைக்கானலுக்கு எத்தனை சுற்றுலா வாகனங்களை அனுமதிக்கலாம் என்பது குறித்து முடிவு செய்ய சென்னை ஐஐடி மற்றும் பெங்களூரு ஐஐஎம் நிறுவனங்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஐஐடி மற்றும் ஐஐஎம் நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதில், உதகைக்குச் செல்லும் சுற்றுலா வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அரசுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், இது குறித்த இறுதி அறிக்கை டிசம்பர் மாதத்துக்குள் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், ஐஐடி மற்றும் ஐஐஎம் நிபுணர்கள் குழுக்களுக்குத் தேவையான தகவல் மற்றும் ஆலோசனைகளை வழங்க தலைமைச் செயலர் தலைமையில் விரைவில் கூட்டம் நடத்த வேண்டும் எனக் கூறி விசாரணையை அக். 31-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

அப்போது உதகை மற்றும் கொடைக்கானல் செல்ல இ-பாஸ் நடைமுறை இருப்பதால், தற்போது அதிகமான சுற்றுலாப் பயணிகள் வால்பாறைக்குச் செல்வதாக வழக்குரைஞர்கள் தரப்பில் கூறப்பட்டது.

இதையடுத்து, 'வால்பாறை, டாப் சிலிப், ஆனைமலை புலிகள் காப்பகம் ஆகிய வனப் பகுதிகளின் சுற்றுச்சூழல் தீவிரமாக பாதுகாக்கப்பட வேண்டியதாகும். எனவே, வால்பாறை செல்லும் அனைத்து வழிகளிலும் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த வேண்டும். வால்பாறை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இ-பாஸ் வழங்கும் நடைமுறைகளை வரும் நவ. 1-ஆம் தேதிமுதல் அமல்படுத்த வேண்டும்.

வால்பாறைக்குச் செல்லும் வாகனங்களில் நெகிழிப் பொருள்கள் எடுத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இதற்கான சோதனைகளை நடத்த வேண்டும்' என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## மணிப்பூர்: துப்பாக்கிச்சூட்டில் 2 வீரர்கள் உயிரிழப்பு

**இம்பால், செப். 19:** மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் மத்திய துணை ராணுவப் படைகளில் ஒன்றான அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையினர் மீது ஆயுதமேந்திய கும்பல் வெள்ளிக்கிழமை துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் இரண்டு வீரர்கள் உயிரிழந்தனர். மேலும், 5 பேர் காயமடைந்தனர்.

மணிப்பூரில் அண்மைக்காலமாக தாக்குதல் எதுவும் நிகழாமலிருந்த நிலையில், இச்சம்பவம் நடந்துள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், 'பிஷ்ணுபூர் மாவட்டத்தின் நம்போல் சபல் லேகாய் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இத்தாக்குதல் நிகழ்ந்தது.

தலைநகர் இம்பாலில் இருந்து பிஷ்ணுபூர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையினர் மீது ஆயுதமேந்திய ஒரு கும்பல் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் இரண்டு வீரர்கள் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர். காவல் துறையினர் மற்றும் உள்ளூர் மக்கள் உதவியுடன் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்திய கும்பலை அடையாளம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்றனர்.

மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையிலான மோதலால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூருக்கு பிரதமர் மோடி அண்மையில் பயணம் மேற்கொண்டு, இருதரப்பு மக்களையும் சந்தித்துப் பேசியதுடன், ரூ.8,000 கோடிக்கு அதிக மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

அனைத்துக் குழுக்களும் வன்முறையைக் கைவிட்டு, அமைதிப் பாதையில் பயணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர், மத்திய அரசின் சீரிய முயற்சிகளால் மாநிலத்தில் விரைவில் இயல்புநிலை திரும்பும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இந்தச் சூழலில், பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மணிப்பூரில் கடந்த 2023-இல் இனமோதல் தொடங்கிய நிலையில், வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வீடுகளைவிட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கானோர் இரண்டரை ஆண்டுகளாக அரசின் நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.



# மயிலாப்பூரில் மாபெரும் கொலுவுடன் செப்.22 முதல் நவராத்திரி விழா

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு



**சென்னை, செப். 19:** அறநிலையத் துறையின் திருக்கோயில்கள் சார்பில் சென்னை மயிலாப்பூரில் மாபெரும் கொலுவுடன் நவராத்திரி பெருவிழா செப்.22 முதல் நடைபெறும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கடந்தாண்டு 9 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழாவும், கடந்த 3 ஆண்டுகளாக சென்னை மயிலாப்பூரில் நவராத்திரி பெருவிழாவும் பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது.

உலகில் தீமைகளை அழித்து தர்மத்தை நிலை நாட்டும் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற தொடர்நிகழ்வாகக் கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழாவானது திருக்கோயில்கள் சார்பில் சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் மாபெரும் கொலுவுடன் செப்.22 முதல் அக்.1 வரை 10 நாள்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

ஒவ்வொரு நாளும் மாலையில் சிறப்பு வழிபாடும், இசை மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

நவராத்திரி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக செப்.22-ஆம் தேதி விநாயகர் அகவல், அபிராமி அந்தாதியுடன் சுசித்ரா பாலசுப்பிரமணியத்தின் பக்தி இசை நிகழ்ச்சியுடன் தொடங்கி, தினந்தோறும் ஒரு வழிபாட்டுடன் ஹெச்.சூரியநாராயணன், அருணா மற்றும் அன்பு குழுவினரின் பக்தி இசை, மாலதி, முத்துசிற்பி மற்றும் கீர்த்தனாஸ் குழுவினரின் பக்தி இசை, ஆர். காஷ்யபமகேஷ் குழுவினரின் பக்தி இசை, உமா தினேஷ் சாய் முத்ரா நடன குழுவினரின் பரத நாட்டியம், ரிஷிப்ரியா குருபிரசாத் குழுவினரின் பக்தி இசை, தேச மங்கையர்க்கரசியின் ஆன்மிக சொற்பொழிவு, நிருத்ய நாட்டியாலயா மற்றும் ஸ்ரீஞானமுத்ரா அகாதெமி குழுவினரின் பரதம், சியாமளா, செல்வி சஜினி மற்றும் ரிதம் குழுவினரின் பக்தி இசை, வேல்முருகன் மற்றும் சுமதிஸ்ரீ ஆகியோரின் பக்தி களஞ்சியம், விநாயகா நாட்டியாலயாவின் பரதம், கோபிகா வர்மாவின் மோகினி ஆட்டம், வீரமணி ராஜு குழுவினரின் பக்தி இசை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

திருக்கோயில்கள் சார்பில் கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா நிகழ்ச்சிகளில் ஆதீனப் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் சமய சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏழுமலையான் தரிசனம்: 20 மணிநேரம் காத்திருப்பு

**திருப்பதி, செப். 19:** திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 20 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 31 அறைகளும் நிறைந்து வெளியே உள்ள தரிசன வரிசையில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர். ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கு 3 முதல் 4 மணி நேரம் ஆனது. ஏழுமலையானை வியாழக்கிழமை முழுவதும் 68,095 பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

## தொடரும் மழை...



சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் இரவில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை பெய்த மழையால், அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதி சாலையில் பெருக்கெடுத்து ஓடிய தண்ணீர்.

# கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனை: 217 பணியிடங்கள் நீட்டிப்பு

**சென்னை, செப். 19:** கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் தற்காலிக அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள 217 பணியிடங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கான பணிக் காலம் 2 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கிண்டியில் கிங் ஆய்வக வளாகத்தில் 1,000 படுக்கைகளுடன் அமைக்கப்பட்ட உயர் சிறப்பு மருத்துவமனை, கடந்த 2023 ஜூன் 15-ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடக்கி வைக்கப்பட்டது.

அங்கு இயக்குநர், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசியர்கள், செவிலியர்கள் உள்பட 217 பணியிடங்கள் தற்காலிகமாக உருவாக்கப்பட்டன. அந்தப் பணியிடங்களில் தகுதியானவர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்கள் வாயிலாக மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், விதிகளின் படி, அந்தப் பணியிடங்களுக்கான காலம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து அதை நீட்டிக்குமாறு மருத்துவக் கல்வி இயக்குநரகம் சார்பில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு பரிந்துரைக்கப்பட்டது.

அதைப் பரிசீலித்த மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் ப.செந்தில்குமார், அதற்கு ஒப்புதல் அளித்து அரசாணை பிறப்பித்துள்ளார்.

அதன்படி, வரும் 2027 ஜூன் 8-ஆம் தேதி வரை அந்தப் பணியிடங்களுக்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

# வெடிகுண்டு மிரட்டல்: சென்னையில் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்

**சென்னை, செப். 19:** வெடிகுண்டு மிரட்டல் காரணமாக வானில் பறந்து கொண்டிருந்த மும்பை-தாய்லாந்து இடையே செல்லும் இண்டிகோ விமானம் சென்னையில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மும்பை-தாய்லாந்து இடையே செல்லும் இண்டிகோ விமானம் 176 பயணிகளுடன் வெள்ளிக்கிழமை மாலை மும்பையிலிருந்து புறப்பட்டது. இதற்கிடையே மும்பை விமான நிலையத்துக்கு வந்த ஒரு மர்ம தொலைபேசி அழைப்பில், விமானத்தின் கழிப்பறைக்குள் வெடிகுண்டு மறைத்து வைத்திருப்பதாகவும், நடுவானில் அது வெடிக்க உள்ளதாகவும் கூறிவிட்டு இணைப்பு துண்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து நடுவானில் பறந்துகொண்டிருந்த விமானம் சென்னைக்கு திருப்பிவிடப்பட்டு இரவு 7.20 மணியளவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. தொடர்ந்து அனைவரும் கீழே இறக்கப்பட்டு விமான நிலைய ஓய்வறைகளில் தங்க வைக்கப்பட்டனர். தொடர்ந்து, விமானத்தில் வெடிகுண்டு நிபுணர்கள், அதிரடி படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். ஆனால், விமானத்துக்குள் சந்தேகப்படும்படியான பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை. விமானத்தை முழுமையாக பரிசோதித்த பின்னர், சென்னையில் இருந்து தாய்லாந்துக்கு மீண்டும் புறப்பட்டு செல்லும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 40 கோடி ஆவணங்களைப் பாதுகாக்க ஜப்பான் திசு முறை

## அமைச்சர் கோவி. செழியன் தகவல்

**சென்னை, செப். 19:** தமிழக ஆவணக் காப்பகத்தில் உள்ள 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சுமார் 40 கோடி ஆவணங்களை, படிப்படியாக ஜப்பான் திசு முறையில் பாதுகாக்கும் பணிகள் நடைபெறுவதாக தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

இந்திய தேசிய ஆவணக்காப்பகமும், தமிழக ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையும் இணைந்து 50-ஆவது தேசிய ஆவணக் காப்பாளர்கள் குழு விழாவை சென்னையில் நடத்தினர்.

இருநாள்கள் நடைபெற்ற இவ்விழாவை, அமைச்சர் கோவி.செழியன் வியாழக்கிழமை தொடங்கி வைத்துப் பேசியதாவது:

வரலாற்றை எண்ணி செயல்படும் நாடே உலகில் உயர்ந்து நிற்கும். புதியவற்றை மட்டும் நினைத்து முன்னேறினால் பெருமையில்லை. தமிழக ஆவணக் காப்பகம் பழைமையானது. கடந்த 1805-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. அனைத்துத் துறை அரசு ஆவணங்களும் முறையாக அட்டவணைகளாகத் தயாரிக்கப்பட்டு, உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சுமார் 40 கோடி ஆவணங்கள் தமிழகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. கோடிக்கணக்கான இந்த பழைய ஆவணங்களை நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்வதற்காக ஜப்பான் திசு முறையை பயன்படுத்தி பாதுகாக்கப்படுகிறது. மேலும் செப்பனிடும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக ரூ. 10 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 கோடி நிதி வழங்கப்படும்.



சென்னை உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று ஆராய்ச்சி மையமாக தமிழக ஆவணக் காப்பகம் திகழ்கிறது.

இங்குள்ள ஆவணங்களைக்கொண்டு வரலாற்று அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் ஆய்வு செய்து, நூற்றுக்கணக்கான நூல்களையும் உலகப்புகழ் பெற்ற நூல்களையும் வெளியிட்டுள்ளனர்.

இதை மேலும் ஊக்குவிக்க 1972-இல் உருவாக்கப்பட்ட வரலாற்று ஆராய்ச்சி மன்றம் தற்போது மீள் உருவாக்கம் செய்யப்பட்டது.

தற்போது தமிழக வரலாற்று ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 25,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கை வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டுள்ள இரண்டு நூல்களுக்கும் 1700 முதல் 1805 வரையிலான முதன்மை ஆவணங்களை ஆராய்ந்து பேராசிரியர் கே. ராசையனால் எழுதப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் கோவி. செழியன்.

இந்த நிகழ்வில் தேசிய ஆவணக் காப்பகத் தலைமை இயக்குநர் சஞ்சய் ரஸ்தோகி, தமிழக உயர்கல்வித் துறைச் செயலர் பி.சங்கர், ஆவணக் காப்பக ஆணையர் ஹர் சஹாய் மீனா உள்ளிட்டோர் பேசினர்.

தமிழக ஆவணக் காப்பகத்தின் இணைய தளத்தை (www.digitamilnaduarchives.gov.in) அமைச்சர் தொடங்கி வைத்தார். பொதுமக்கள், ஆய்வாளர்கள் ஆவணங்களை எளிதில் பெறும் வகையில் 1.5 கோடி பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் இதில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதில் 15 மாநிலங்கள், 5 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த ஆவணக்காப்பக தலைமை அதிகாரிகள், வரலாற்று வல்லுநர்கள் மற்றும் தேசிய ஆவணக் காப்பக உயர் அலுவலர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.


**அடையாள சுவாதீன அறிவிப்பு**

**ICICI Bank** கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட். 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஓசூர் பிரதான சாலை, பெங்களூரு - 560068.

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகளின் விதி 3-இன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாள்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரினார்.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளின் விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI வங்கி லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

| வ. எண். | கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண் | சொத்து விவரம் / அடையாள சுவாதீன நாள் | கோரிக்கை அறிவிப்பு நாள் / கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூ.) | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | கோமதி & இளையராஜா / பிளாட் எண். 140/141, குமரன் நகர், 8 வது குறுக்கு சாலை, V1 எக்ஸ்டென்சன், 370 சென்னை - 600067 / LBCHE00005693477 | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, சோழவரம் கிராமம், பழைய சர்வே எண். 370/2a, பட்டா எண். 8212 படி புதிய சர்வே எண். 370/160 ல் அமையப்பெற்ற C.M.D.A. அங்கீகார எண். P.P.D.A.O.NO. 569/2018 ன் படி அங்கீகரிக்கப்பட்ட "குமரன் நகர் பகுதி IV ஸ்ரீதர் அவென்யூ எக்ஸ்டென்சன்" ல் உள்ள 1350 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண். 140 ன் மேற்கு புறம் உள்ள 450 சதுர அடி மற்றும் 1350 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண். 141 ன் கிழக்கு புறம் உள்ள 450 சதுர அடி கொண்ட குடியிருப்புக்கான காலி பிளாட் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். ... / அடையாள சுவாதீன நாள் : 15.09.2025. | 21.03.2025 ரூ. 19,35,157.09/- | சென்னை |

கடன்தாரர்(களுக்கும்) / ஜாமீன்தாரர்(களுக்கும்) மேற்படி கடன் பாக்கியை செலுத்துமாறு 30 நாள் அறிவிப்பு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. செலுத்தத் தவறினால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8 & 9-ன் கீழான ஷரத்துகள்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாள்கள் முடிந்த பின் மேற்படி அடமான சொத்துகள் விற்கப்படும்.

தேதி: 20.09.2025
இடம்: சென்னை

உண்மையுள்ள அதிகாரப்பூர்வ அலுவலர், ICICI வங்கி லிட்-க்காக



**HDFC BANK** We understand your world

**ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்**
கிளை: முதல் தளம், ஐ.டி.சி சென்டர், எண்.760, அண்ணாசாலை, சென்னை 600002.
CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com.

**சொத்தினை கையகப்படுத்துதல் அறிவிப்பு**

2002ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் 2002ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3ன் கீழ் ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட் (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT-மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட் ஹெச்.டி.எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச்.டி.எஃப்.சி.) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப்பட்டவர், கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு(கள்) / சட்டப் பிரதிநிதி(கள்) க்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கடன் ஒப்பந்தத்தில் கண்டுள்ள வட்டி விகிதத்தில் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார்.

| வ. எண். | கடனாளர் பெயர் (கள்)/ சட்டப்படியான வாரிசு (கள்) சட்டப்படியான பிரதிநிதி (கள்) பெயர்கள் | மொத்த கடன் நிலுவைத் தொகை | ஈடு பெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து) (1 ச.மீ என்பது 10.76 ச.அடிக்கு சமமானது) |
|---|---|---|---|
| 1. | கடன்தாரர் : திருமதி. குமாரி.S | 31-03-2023 வரை ரூ.29,01,248/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 17.04.2023 | தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார் பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், சுந்தரசோழபுரம் கிராமத்தின் சர்வே எண்கள். 50/1B1, 50/3A1, 50/3B, 50/2C, 50/2D இல் அடங்கிய திவ்யா நகர் மனைப்பிரிவு (அங்கீகார எண், PPD/Lo.No.13/2008) மனை எண்.7இல் உள்ள 1560 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 384 சதுர அடி அதனுடன் "BHUJAYS BHAVAN" என அறியப்பட்ட கட்டிடத்தில் உள்ள ஒரு கார் நிறுத்துமிடம், 784 சதுர அடி அளவில் (பொதுப்பரப்பு உள்ளிட்ட) முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் எண். A2, சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்:வடக்கில் 16 அடி சாலை, தெற்கில் மனை எண்.9, கிழக்கில்:மனை எண்.8, மேற்கில்: மனை எண்.6 மற்றும் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வடக்குப்புறம் 30 அடி; கிழக்கு மேற்காக தெற்குப்புறம் 30 அடி, வடக்கு தெற்காக கிழக்குபுறம் 52 அடி, வடக்கு தெற்காக மேற்குப்புறம் 52 அடி. ஆக மொத்த விஸ்தீரணம் 1560 சதுர அடி. **சொத்தினை கையகப்படுத்திய தேதி : 16-09-2025 மற்றும் வகை: அடையாளபூர்வ சுவாதீனம் (Symbolic)** |
| 2. | கடன்தாரர் : திரு. ஸ்ரீனிவாஸ் ரகுபதி | 31-07-2024 வரை ரூ.18,12,462/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 13.11.2024 | தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பல்லாவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், ஜமீன் பல்லாவரம் கிராமத்தின் பழைய சர்வே எண். 257/1, புதிய சர்வே எண்.257/2B, இல் அடங்கிய 2,70,468 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 308 சதுர அடி நிலம் அதனுடன் "Nimbus Block" என பெயரிடப்பட்ட பிளாக்கில் உள்ள ஒரு கார் நிறுத்துமிடம் மற்றும் 1120 சதுர அடி சூப்பர் கட்டிடபரப்பில் வேது தளத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் எண்.6-G, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **சொத்தினை கையகப்படுத்திய தேதி : 16-09-2025 மற்றும் வகை: அடையாளபூர்வ சுவாதீனம் (Symbolic)** |
| 3. | கடன்தாரர் : திருமதி. மாலா.S இணை-கடன்தாரர்கள்: திரு. சிவசக்தி.R & M/s.Image Tailors | 30-11-2023 வரை ரூ.21,02,819/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 22.01.2024 | தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அடையார் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாவட்டம், மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி வட்டம், தற்போது கிண்டி வட்டம், கோட்டூர் கிராமத்தின் T.சர்வே எண்கள்.20 & 31 (பழைய சர்வே எண்கள்.136/1E, 139/2 மற்றும் 137/1A1, பட்டா C.A. எண்.652/2001, இன்படி சர்வே எண்கள்.139/2 பகுதி, 137/1A1A பகுதி, 136/1AE பகுதி), புதிய T.சர்வே எண்.31 இல் அடங்கிய சென்னை - 600113, தரமணி, ஸ்ரீராம் நகர், முதல் தெரு, கதவு எண்.9 இல் அமைந்துள்ள மொத்தப் பரப்பளவு 213.75 சதுர மீட்டர் அல்லது 2300 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 29.37 சதுர மீட்டர் அல்லது 320 சதுர அடி நிலம் அதனுடன் அதில் பூபதி அப்பார்ட்மென்ட்ஸ் என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின், பிளாக்-12, தரை தளத்தில் பரப்பளவு 54.83 சதுர மீட்டர் அல்லது 590 சதுர அடி கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.G1 கொண்ட சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில் – T.சர்வே எண்.20 இன் நிலம், தெற்கில் – ஸ்ரீராம் நகர் முதல் தெரு, கிழக்கில் - T.சர்வே எண்.30 இன் நிலம் மற்றும் மேற்கில் – T.சர்வே எண்.31 இன் நிலம் மற்றும் பஜனை கோயில் தெரு. **சொத்தினை கையகப்படுத்திய தேதி : 16-09-2025 மற்றும் வகை: அடையாளபூர்வ சுவாதீனம் (Symbolic)** |
| 4. | கடன்தாரர் : திரு. அரவிந்தன்.L | 30-04-2024 வரை ரூ.19,44,975/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 25.05.2024 | தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பல்லாவரம் சார்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், நெமிலிச்சேரி கிராமத்தின் பழைய சர்வே எண். 72/1A6 T சர்வே எண்.13/2, இல் அடங்கிய பிளாக் எண்.20, வார்டு எண். G, பட்டா சர்வே பதிவேட்டின் படி 8A எண்.260/1420, பல்லாவரம் நகராட்சியின் நகர நில அளவை பதிவேட்டின் படி சர்வே எண்.72 பகுதி, புதிய சர்வே எண்.72/1Aஇல் மனை எண்.7, நாகப்பன் தெரு, மொத்தமுள்ள 1224.5 சதுர அடி அல்லது 113.80 சதுர மீட்டரில் பிரிக்கப்படாத பங்கு 221 சதுர அடி அல்லது 20.53 சதுர மீட்டர், அதனுடன் இரண்டாவது தளத்தில் 484சதுர அடி அல்லது 44.98 சதுர மீட்டர் கட்டிடப்பரப்பில் கட்டப்பட்டுள்ள சொத்து ஃபிளாட் எண். S2 மற்றும் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **சொத்தினை கையகப்படுத்திய தேதி : 16-09-2025 மற்றும் வகை: அடையாளபூர்வ சுவாதீனம் (Symbolic)** |

•திரும்ப செலுத்தும் நாள்/சொத்தினை பணமாக்கும் வரையில் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.

கடனாளர்(கள்)/சட்டப்படியான வாரிசு (கள்) /சட்டப் பிரதிநிதி (கள்) கேட்புத் தொகையினைச் செலுத்தத் தவறியதால் இச்சட்டப்பிரிவு 13 (4) மற்றும் மேற்படி ரூல்சின், விதி 8ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அடிப்படையில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கையகப்படுத்தி சுவாதீனம் பெற்றார் என்று கடனாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே இதில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சம்பந்தமாக, குறிப்பாக கடனாளர் (கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்)-ளும், மற்றும் பொதுமக்களும் எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்படுவதோடு அப்படி ஈடுபடும் விவகாரங்களானவை ஹெச்.டி.எஃப்.சி.யிடம் உள்ள அடமானம் மற்றும் அவருக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கும் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் உட்பட்டதாகும்.

சட்டத்தின் பிரிவு 13ன் உட் பிரிவு (8) ன் படி அடமானம் பெற்ற கடனாளர் சொத்தினை மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடன் பெற்றவர்கள் / சட்டப்படியான வாரிசு(கள்) / சட்டப் பிரதிநிதிகள் பஞ்சனாமா (Panchnama) வில் வரையறுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் குறிப்பு நகல்களை (பொருந்தக்கூடிய இடங்களில்) அதிகாரம்பெற்ற அதிகாரியிடம் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தேதி: 20.09.2025
இடம்: சென்னை

பதிவு அலுவலகம்: HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை 400013

ஒப்பம்/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, HDFC பேங்க் லிமிடெட்







# இஎஸ்ஐ மருத்துவமனையில் 'ஆரோக்கிய பெண்கள்' திட்டம்

**சென்னை, செப். 19:** கே.கே. நகர் இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'ஆரோக்கியமான பெண்கள், வலுவான குடும்பம்' திட்டம் அண்மையில் தொடங்கப்பட்டது.

மகளிருக்கான ஊட்டச்சத்து மற்றும் உடல் நலனை உறுதி செய்யும் நோக்கில் பிரதமர் மோடி தேசிய அளவில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன்படி, சென்னை மற்றும் பிற பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை கே.கே. நகர் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் (இஎஸ்ஐசி) மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தொடங்கியுள்ளது.

முன்னதாக, மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இதற்கான தொடக்க நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி முதல்வர் செளமியா சம்பத், மண்டல உணவுப் பாதுகாப்பு அலுவலர் சுந்தர மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஊட்டச்சத்து, உணவு பாதுகாப்பு, மாதவிடாய் தூய்மை, நோய்த் தடுப்பு நடைமுறைகள் போன்றவற்றில் விழிப்புணர்வை உருவாக்குவது குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

நிகழ்வின் ஒரு பகுதியாக அடையாறில் ரத்த தான முகாம் நடைபெற்றது. அக்டோபர் 2-ஆம் தேதி வரை குடியிருப்புகள், தொழிற்சாலைப் பகுதிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும் என்றும், வீடுதோறும் மருத்துவப் பரிசோதனை நடத்தப்படும் என்றும் இஎஸ்ஐ நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் முதல்வர் ஆய்வு

**சென்னை, செப். 19:** 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்களில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைக் கடந்தும் அளிக்கப்படும் மனுக்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

சென்னை தியாகராய நகரில் 133-ஆவது வட்டத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற முகாமை முதல்வர் மு.க.ஸ்டாலின், பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் முகாமில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

முகாமில், பிறப்புச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக சான்றிதழ் வழங்கப்பட்டு வருவதையும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அட்டைகள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு வழங்குவதையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டினார்.



தியாகராய நகரில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், சட்டப்பேரவை உறுப்பினர் ஜெ.கருணாநிதி, முதல்வரின் முகவரித் துறை கூடுதல் தலைமைச் செயலர் பெ.அமுதா உள்ளிட்டோர்.

மேலும், வங்கிக் கணக்கு தொடங்குவதற்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருவதையும் அவர் ஊக்குவித்தார்.

முகாமில் மனுக்கள் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைக் கடந்து வரும் மக்களின் மனுக்களையும் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பட்டா மாறுதல், சொத்து வரி போன்றவை குறித்து பெறப்படும் மனுக்களுக்கு தீர்வுகாண முன்னுரிமை அளிக்கவும் கேட்டுக் கொண்டார்.

ஆய்வின்போது, சட்டப்பேரவை உறுப்பினர் ஜெ.கருணாநிதி, முதல்வரின் முகவரித் துறையின் சிறப்பு அலுவலரும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலருமான பெ.அமுதா, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


**தேவைகளைத் தீர்த்து வையுங்கள்: முதல்வர் உத்தரவு**

மக்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவு: பல்வேறு அரசுத் துறை சார்ந்த கோரிக்கைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வுகாண முடிவதாக, தியாகராய நகர் முகாமில் மக்கள் வெளிப்படுத்திய மனநிறைவே 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களின் வெற்றியைச் சொல்கிறது. நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களை ஆய்வு செய்து, மக்களின் தேவைகளைத் தீர்த்துவைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றார்.

# நாகேஸ்வர ராவ் பூங்காவில் ரூ.12.22 கோடியில் மேம்பாட்டுப் பணிகள்

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்



மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்காவில் ரூ.12.22 கோடியில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டுப் பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கிவைத்த அமைச்சர் கே.என்.நேரு. உடன், மேயர் ஆர்.பிரியா, எம்பி தமிழச்சி தங்கபாண்டியன், எம்எல்ஏ த.வேலு, துணை மேயர் மு.மகேஷ்குமார். (இடது) மேம்படுத்தப்படவுள்ள மயிலாப்பூர் நாகேஸ்வர ராவ் பூங்காவின் நீர்நிலை கட்டமைப்பு, பூப்பந்தாட்ட மாதிரி வடிவங்கள்.

**சென்னை, செப். 19:** சென்னை மயிலாப்பூரில் உள்ள நாகேஸ்வர ராவ் பூங்காவை ரூ.12.22 கோடியில் மேம்படுத்தும் பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலத்துக்குட்பட்ட 123-ஆவது வார்டில் உள்ள மயிலாப்பூர் நாகேஸ்வர ராவ் பூங்கவில், நுழைவு வளாகம், கலந்துரையாடல் இடம், நீரூற்றுடன் கூடிய இருக்கைகள், டென்சைஸ் கூரையுடன் அமருமிடம், அறிவிப்புப் பலகைகள், ஒலி அமைப்பு, ஒப்பனை அறை என ரூ.12.22 கோடியில் பல்வேறு புதிய அம்சங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

இதற்கான பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால் பணிகள் திட்டமிட்டபடி முடிக்கப்படும். மழைநீர் தேங்குமிடங்கள் அடையாளம் காணப்பட்டு வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதிக மழை பொழிவு இருந்தாலும், அதைச் சமாளிக்கும் வகையில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மழையை எதிர்கொள்ள மாநகராட்சி தயாராக உள்ளது.

தூய்மைப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்படும் ஊதியம் வழங்கப்படுவதுடன், பல நலத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. மாநகராட்சியில் காலிப் பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்படும் என்றார்.

நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர்.பிரியா, மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், மயிலாப்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் த.வேலு, மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விமானங்களில் உள்ள அதிநவீன வசதிகளுடன் சென்னையில் தயாரான 'வந்தே ப்ரைட்' ரயில்கள்

## வரும் நவம்பரில் இயக்கத் திட்டம்

**சென்னை, செப். 19:** விமானங்களில் உள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய 2 'வந்தே ப்ரைட்' ரயில் தயாரிக்கும் பணி நிறைவடைந்துள்ளதை அடுத்து வரும் நவம்பரில் இயக்க திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் ஐசிஎஃப்-இல் ஆண்டுக்கு சுமார் 4,000-க்கும் அதிகமான ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதிநவீன வசதிகளுடன், அதிவேகமாக செல்லும் ரயில் என்ஜின்கள் மற்றும் ரயில் பெட்டிகளை ஐசிஎஃப் தயாரித்து வருகிறது.

அந்த வரிசையில் நாட்டிலேயே முதல் முறையாக விமானங்களில் சரக்குகளை ஏற்றுவதற்கான வசதிகளை உள்ளடக்கிய சரக்கு ரயில் பெட்டிகளுடன் கூடிய 2 சரக்கு ரயில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த 2018 -ஆம் ஆண்டு 'வந்தே பாரத்' சரக்கு ரயில் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது அவை முழுமையாக நிறைவடைந்துள்ளன.

ஒவ்வொரு சரக்கு ரயிலும் தலா 16 சரக்குப் பெட்டிகளைக் கொண்டுள்ளன. உள்ளே சரக்குகள் அடங்கிய ரேக்குகளை எளிதில் இயக்கி நிறுத்தும் வகையில் சக்கரங்களுக்கான வழிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குளிர்சாதன வசதியுடன், இரு ரயில்களும் மணிக்கு சுமார் 90 கி.மீ. முதல் 160 கி.மீ. வேகம் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும், பெட்டிக்கு சுமார் 260 டன் பொருள்களை ஏற்றலாம் எனவும் ரயில்வே பொறியாளர்கள் தெரிவித்தனர். இந்த ரயில்களின் சோதனை ஓட்டம் நடைபெறும். இதையடுத்து வரும் நவம்பரில் சரக்குப் போக்குவரத்து அதிகமுள்ள நிலையங்களில் இயக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

# திருவல்லிக்கேணி அஹோபில மடத்தில் ஸ்ரீமத் ஆதிவண்சடகோப ஸ்வாமி உற்சவம்

**சென்னை, செப். 19:** ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பிருந்தாரண்ய க்ஷேத்திரமான திருவல்லிக்கேணி அஹோபில மடத்தில், ஸ்ரீமத் ஆதிவண்சடகோப ஸ்வாமி உற்சவம் வெள்ளிக்கிழமை தொடங்கியது. இந்த உற்சவம் செப்.28-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.


முக்கிய நிகழ்வாக செப்.27-ஆம் தேதி திருத்தேர் உற்சவம் நடைபெறவுள்ளது. புதிய திருத்தேரை, ஜீயர் ஸ்ரீமத் அழகிய சிங்கர் சுவாமிகள் வடம்பிடித்து தொடக்கி வைக்கவுள்ளார்.

# பிஎஸ்என்எல் ஒப்பந்த தொழிலாளர்கள் தர்னா

**சென்னை, செப். 19:** கோரிக்கைகளை வலியுறுத்தி பிஎஸ்என்எல் ஒப்பந்தத் தொழிலாளர்கள் சென்னையில் வெள்ளிக்கிழமை தர்னாவில் ஈடுபட்டனர்.

சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள பிஎஸ்என்எல் தலைமைப் பொது மேலாளர் அலுவலகத்தில், தமிழ்நாடு பிஎஸ்என்எல் ஊழியர் சங்கம் மற்றும் சென்னை தொலைபேசி தொலைத்தொடர்பு ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம் சார்பில் இப்போராட்டம் நடத்தப்பட்டது.

அப்போது சேவை அடிப்படை ஒப்பந்த முறையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்யக் கூடாது. பணி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கு மாற்றுப் பணியிடங்களில் வேலை வழங்க வேண்டும் என பல உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.






## ஆன்மிக சிந்தனை

ஞானத்தை அறிந்ததாலேயே முனிவர்கள் எல்லோரும் உன்னதமான பக்குவத்தை அடைந்தனர்.

– பகவத் கீதை

பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

சங்கீதம் 91:10

இன்னும் (இறைநம்பிக்கையாளர்களான அவர்கள் எத்தகையவர்கள் எனில்), ஜகாத் எனும் கட்டாய தர்மத்தை அதன் நெறி முறைப்படி செயல்படுத்தக் கூடியவராய் இருக்கின்றார்கள்.

(அல்குர்ஆன் 23.4)

## இன்றும் நாளையும்

### சனிக்கிழமை

(20–9–2025)

**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–4**

**பிறை:** தேய்பிறை

| | |
|---|---|
| **திதி** | : சதுர்த்தசி நள்ளிரவு 1.02 வரை பிறகு அமாவாசை. |
| **நட்சத்திரம்** | : மகம் காலை 9.57 வரை பிறகு பூரம் |
| **யோகம்** | : அமிர்த / சித்தயோகம் |
| **ராகுகாலம்** | : காலை 9.00 – 10.30 மணி. |
| **எமகண்டம்** | : நண்பகல் 1.30 – 3.00 மணி. |
| **சூலம்** | : கிழக்கு. |
| **நல்ல நேரம்** | : காலை 7 – 8 மணி. மாலை 5 – 6 மணி |

**இன்றைய விசேஷம்:** மாத சிவாராத்திரி. ஸஸ்திரஹத பிதுர் மஹாளயம். குச்சனூர் ஸ்ரீ சனிபகவான் அலங்கார திருமஞ்சன சேவை. ஸ்ரீவில்லிபுத்தூர் சமீபம் திருவண்ணாமலை ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் கருட வாகனத்தில் புறப்பாடு. அருணந்தி சிவாச்சாரியார் குரு பூஜை. மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி, திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் தலங்களில் ஸ்ரீ வரதராஜ மூலவருக்கு திருமஞ்சன சேவை. உப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் ஸ்திர வார திருமஞ்சன சேவை. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி, திருவட்டாறு ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தலங்களில் திருமஞ்சன சேவை. திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரெங்கராஜர் புறப்பாடு. திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் புறப்பாடு. ஸ்ரீரங்கம் ஸ்ரீ நம்பெருமாள், திருவள்ளூர் ஸ்ரீ வைத்ய வீரராகவப் பெருமாள் தலங்களில் திருமஞ்சன சேவை.

| | |
|---|---|
| **மேஷம்** | கவனம் |
| **ரிஷபம்** | உண்மை |
| **மிதுனம்** | யோகம் |
| **கடகம்** | விருத்தி |
| **சிம்மம்** | கட்டுப்பாடு |
| **கன்னி** | நற்செயல் |
| **துலாம்** | பயணம் |
| **விருச்சிகம்** | கடமை |
| **தனுசு** | பாராட்டு |
| **மகரம்** | பொறுமை |
| **கும்பம்** | வெற்றி |
| **மீனம்** | நிறைவு |

### ஞாயிற்றுக்கிழமை

(21–9–2025)

**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–5**

**பிறை:** தேய்பிறை

| | |
|---|---|
| **திதி** | : அமாவாசை நள்ளிரவு 1.42 வரை பிறகு பிரதமை. |
| **நட்சத்திரம்** | : பூரம் காலை 10.56 வரை பிறகு உத்திரம் |
| **யோகம்** | : சித்த / அமிர்தயோகம் |
| **ராகுகாலம்** | : மாலை 4.30 – 6.00 மணி. |
| **எமகண்டம்** | : நண்பகல் 12.00 – 1.30 மணி. |
| **சூலம்** | : மேற்கு. |
| **நல்ல நேரம்** | : காலை 7 – 8 மணி. மாலை 3 – 4 மணி |

**இன்றைய விசேஷம்:** சர்வ மஹாளய அமாவாசை. (இராமேஸ்வரம், வேதாரண்யம், திலகைப்பதி, திருவெண்காடு, திருவள்ளூர் தலங்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய நன்று). திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் ஸ்ரீ விபீஷணாழ்வாருக்கு நடையழகு சேவை காண்பித்தருளல். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில் குளக்கரை ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு திருமஞ்சனம். திருத்தணி ஸ்ரீ முருகப் பெருமான் பால் அபிஷேகம். இராமேஸ்வரம் ஸ்ரீ பர்வத வர்த்தினியம்மன் ஊஞ்சலில் காட்சி. காஞ்சி ஸ்ரீ காமாட்சியம்மன், இருக்கன்குடி ஸ்ரீ மாரியம்மன், சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் தலங்களில் காலை பால் அபிஷேகம். சாத்தூர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் புறப்பாடு. வைத்தீஸ்வரன் கோவில் ஸ்ரீ அங்காரகருக்கும், ஸ்ரீ செல்வமுத்துக் குமார சுவாமிக்கும் அபிஷேகம். ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி புறப்பாடு.

| | |
|---|---|
| **மேஷம்** | அமைதி |
| **ரிஷபம்** | நட்பு |
| **மிதுனம்** | நம்பிக்கை |
| **கடகம்** | நன்மை |
| **சிம்மம்** | வெற்றி |
| **கன்னி** | ஆதாயம் |
| **துலாம்** | பக்தி |
| **விருச்சிகம்** | பாசம் |
| **தனுசு** | நற்செய்தி |
| **மகரம்** | ஓய்வு |
| **கும்பம்** | வெற்றி |
| **மீனம்** | சிறப்பு |

## ஏரியில் மூழ்கி 2 மாணவர்கள் உயிரிழப்பு

**தாம்பரம், செப். 19:** சிட்லப்பாக்கத்தில் உள்ள ஏரியில் குளிக்கச் சென்ற 2 பள்ளி மாணவர்கள் தண்ணீர் மூழ்கி உயிரிழந்தனர்.

தாம்பரத்தை அடுத்த சிட்லப்பாக்கம் ஏரியில் இரு பள்ளி மாணவர்களின் சடலங்கள் மிதப்பதைப் பார்த்த கண்ட அந்தப் பகுதி மக்கள், சிட்லப்பாக்கம் போலீஸாருக்கு வெள்ளிக்கிழமை தகவல் அளித்தனர்.

இதையடுத்து, அங்கு சென்ற போலீஸார் சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



ஏரியில் மூழ்கி உயிரிழந்த பள்ளி மாணவர்கள் சஞ்சய், லோகேஷ்.

விசாரணையில், நீரில் மூழ்கி இறந்த பள்ளி மாணவர்கள் சேலையூர் தாங்கல் கரையைச் சேர்ந்த லோகேஷ் (13), கண்ணப்பன் தெருவைச் சேர்ந்த சஞ்சய் (12) எனவும், சேலையூர் அரசுப் பள்ளியில் 8–ஆம் வகுப்பு படித்து வந்ததும் தெரியவந்தது.

வியாழக்கிழமை சிட்லப்பாக்கம் ஏரியில் குளிக்க சென்றபோது, நீரில் மூழ்கி உயிரிழந்ததும் தெரியவந்தது.

## இன்றைய நிகழ்ச்சிகள்

**'ஃபிட் இந்தியா'– விழிப்புணர்வு மாரத்தான்:** ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்பு, ஆல்காட் நினைவு மேல்நிலைப் பள்ளி, பெசன்ட் நகர், காலை 5.30.

**'பாரதத்திற்காக புதுமைகளை உருவாக்குங்கள்–உலகை வழி நடத்துங்கள்' –தலைப்பில் மாநாடு:** ஆளுநர் ஆர்.என். ரவி பங்கேற்பு, சென்னை ஐஐடி, கிண்டி, காலை 10.

**பள்ளிக் கல்வித் துறை–முப்பெரும் விழா:** முதல்வர் மு.க.ஸ்டாலின், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை செயலர் சந்தரமோகன் உள்ளிட்டோர் பங்கேற்பு, ஜவாஹர்லால் உள்விளையாட்டு அரங்கம், காலை 10.30.

**செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம்:** முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு, செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையம், பூந்தமல்லி, காலை 11.

**சர்வதேச கடற்கரை தூய்மை தினம்–மெரீனா கடற்கரையை தூய்மைப்படுத்துதல்:** இந்திய கடலோரக் காவல் படை கிழக்கு மண்டல தளபதி டி.எஸ்.ஷைனி பங்கேற்பு, மெரீனா கடற்கரை நீச்சல் குளம் அருகே, காலை 5.45.

**'எஸ்பிஐ–நம்ம ட்ரீம் ஹோம் எக்ஸ்போ 4.0':** தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத் தலைவர் சிவ்தாஸ் மீனா, கிரெடாய் சென்னை தலைவர் அ.முகமது அலி, நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன், முன்னாள் தலைவர் எஸ்.சிவகுருநாதன், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா சென்னை வட்ட தலைமைப் பொது மேலாளர் விவேகானந்த் சௌபே, உள்ளூர் தலைமை அலுவலகப் பொது மேலாளர் முரளி கிருஷ்ணா உள்ளிட்டோர் பங்கேற்பு, சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், காலை 10.30.

**சிந்தனைச் சாரல்– 'பெரியார் அன்றும் இன்றும்' தலைப்பில் சிறப்புரை:** ஐக்கிய நாடுகள் சபை முன்னாள் அதிகாரி இரா.கண்ணன் பங்கேற்பு, அரசு கிளை நூலகம் (சண்முகனார் பூங்கா அருகில்), திருவொற்றியூர், மாலை 5.

**மயிலாப்பூர் ஆர்ட்ஸ் அகாதெமி–'அன்னியல்' என்ற தலைப்பில் நாடகம்:** பாரதிய வித்யா பவன், மயிலாப்பூர், மாலை 6.30.

## பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை: அமைச்சர்கள் திறந்து வைத்தனர்

**தாம்பரம், செப். 19:** ஜமீன் பல்லாவரம் தாம்பரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ரூ.92 லட்சத்தில் அமைக்கப்பட்ட மெய்நிகர் தொழில்நுட்ப ஸ்மார்ட் வகுப்பறையை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

செங்கல்பட்டு மாவட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் ரூ.6.88 கோடியில் நிறைவு பெற்ற 11 திட்டப் பணிகளை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். ரூ.68.58 கோடியில் 23 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



தாம்பரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ரூ.92 லட்சத்தில் ஸ்மார்ட் வகுப்பறையைத் திறந்து வைத்த அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், எம்எல்ஏ இ.கருணாநிதி உள்ளிட்டோர்.

தாம்பரம் சானடோரியம் ஜிஎஸ்டி சாலையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் தாம்பரம் மாநகராட்சி அலுவலகக் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் கே.என்.நேரு, பணிகளை விரைவில் நிறைவு செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வர அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, தாம்பரம் மாநகராட்சி எம்.ஜி.ஆர். நகரில் ஸ்கேட்டிங் பூங்கா, மைதானம், பல்லாவரம் பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, வினோபா நகர், மாடம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் ரூ.4.76 கோடியில் புதிதாகக் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

நிகழ்வில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் இ.கருணாநிதி (பல்லாவரம்) எஸ். ஆர்.ராஜா (தாம்பரம்) மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதனன் ரெட்டி, செங்கல்பட்டு ஆட்சியர் தி.சினேகா, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர் மண்டலக் குழு தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, காமராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வருமான வரித் துறை அனுப்பிய நோட்டீஸை எதிர்த்து ஜெ.தீபா தொடர்ந்த வழக்கு தள்ளுபடி

**சென்னை, செப். 19:** மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா செலுத்த வேண்டிய வருமான வரி நிலுவைத் தொகை ரூ.36 கோடியை செலுத்தக்கோரி வருமான வரித் துறை அனுப்பிய நோட்டீஸை எதிர்த்து ஜெ.தீபா தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கித் தொகையான ரூ.36 கோடியை செலுத்தும்படி, வருமான வரித் துறை ஜெயலலிதாவின் சட்டபூர்வ வாரிசான ஜெ.தீபாவுக்கு நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீஸை எதிர்த்து ஜெ.தீபா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், நோட்டீஸுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி சி.சரவணன் முன் விசாரணைக்கு வந்தபோது, வருமான வரித் துறை தரப்பில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் வருமான வரி பாக்கித் தொகை தொடர்பாக தீபாவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அந்த நோட்டீஸ் தற்போது திரும்பப் பெறப்பட்டு விட்டது.

மேலும், வரி பாக்கித் தொகையான ரூ.36 கோடியை, ரூ.13 கோடியாக குறைத்து திருத்தி அமைக்கப்பட்ட நோட்டீஸ் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, ரூ.36 கோடி செலுத்தும்படி அனுப்பிய நோட்டீஸை வருமான வரித் துறை திரும்பப் பெற்றுவிட்டதால், நோட்டீஸை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

மேலும், ரூ.13 கோடியைச் செலுத்தக் கோரி அனுப்பியுள்ள நோட்டீஸை எதிர்த்து தீபா சட்டப்படி நிவாரணம் கோர உரிமை உள்ளது என்று நீதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான வழக்கு: அக்.13–இல் இறுதி விசாரணை

**சென்னை, செப். 19:** முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான ஒப்பந்தப் புள்ளி முறைகேடு வழக்கில், அறப்போர் இயக்கம் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு மனு மீது இறுதி விசாரணையை அக். 13–ஆம் தேதிக்கு சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

கடந்த அதிமுக ஆட்சியில் அமைச்சராக எஸ்.பி.வேலுமணி இருந்தபோது, சென்னை, கோவை உள்ளிட்ட மாநகராட்சிகளில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. இதில், ரூ.98.25 கோடி அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாக அறப்போர் இயக்கம் குற்றம்சாட்டியது.

இதையடுத்து, எஸ்.பி.வேலுமணி, ஒப்பந்த நிறுவனங்கள் மீது லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். பின்னர், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, வழக்கில் இருந்து எஸ்.பி.வேலுமணியின் பெயர் நீக்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட தனியார் ஒப்பந்த நிறுவனங்கள் வழக்கை ரத்து செய்யக் கோரி வழக்குத் தொடுத்தன.

இந்த வழக்கை ரத்து செய்த உயர்நீதிமன்றம், வழக்கை விரைவாக விசாரித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவை போலீஸார் அமல்படுத்தவில்லை எனக் கூறி அறப்போர் இயக்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது போலீஸார் தரப்பில் கூடுதல் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், ஒப்பந்தப் புள்ளி முறைகேடு வழக்கில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் பெயர் மீண்டும் சேர்க்கப்பட்டது. இரு ஐஏஎஸ் அதிகாரிகள் மீது வழக்குத் தொடர மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, அறப்போர் இயக்கம் தரப்பில் கூடுதல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக யாரிடம் அனுமதி கேட்கப்பட்டது? எப்போது கோரிக்கை மனு அளிக்கப்பட்டது என்ற விவரங்கள் எதுவும் போலீஸார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனுவில் இல்லை.

அந்த விவரங்கள் இருந்தால்தான் காலதாமதம் செய்த அதிகாரி யார் என்பது தெரியவரும். அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். கோவை மாநகராட்சி அதிகாரியாக பணியாற்றிய காந்திமதி மாநில அரசு அதிகாரி.

அவர் மீது வழக்குப் பதிவு செய்ய தமிழக அரசின் அனுமதி பெறவே போலீஸார் நீண்டகாலம் எடுத்துள்ளனர். இந்த வழக்கில் போலீஸார் இதுவரை 2 குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர். 3–ஆவது குற்றப்பத்திரிகை எப்போது தாக்கல் செய்யப்படும் என்று தெரியவில்லை.

எனவே, இந்த விவகாரத்தில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுக்கு போலீஸார் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு, இறுதி விசாரணைக்காக அக். 13–ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## மேலும் இரு வழக்குகளில் பயங்கரவாதி அபுபக்கர் சித்திக் கைது

**சென்னை,செப்.19:** சென்னையில் மேலும் இரு வழக்குகளில் பயங்கரவாதி அபுபக்கர் சித்திக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரைச் சேர்ந்த அல்– உம்மா அமைப்பு பயங்கரவாதி அபுபக்கர் சித்திக் (60) கடந்த 30 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தார்.

வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்ற அபுபக்கர் சித்திக் மீது கடந்த 1995–ஆம் ஆண்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இந்து முன்னணி அலுவலகத்துக்கு வெடிகுண்டு வைத்த வழக்கு, நாகூர் இந்து முன்னணி பிரமுகர் தங்கமுத்து கிருஷ்ணன் வீட்டுக்கு புத்தக வடிவிலான வெடிகுண்டை அனுப்பி அவர் மனைவி தங்கத்தைக் கொலை செய்த வழக்கு,1999–ஆம் ஆண்டு சென்னை காவல் ஆணையர் அலுவலகம், திருச்சி, கோவை, கேரளம் ஆகிய இடங்களில் வெடிகுண்டு வைத்த வழக்கு, 2011–ஆம் ஆண்டு மதுரை திருமங்கலம் அருகே பாஜக தலைவர் எல்.கே.அத்வானி ரத யாத்திரையைக் குறிவைத்து பைப் வெடிகுண்டு வைத்த வழக்கு, 2012–ஆம் ஆண்டு வேலூரில் மருத்துவர் அரவிந்த் ரெட்டி கொலை செய்யப்பட்ட வழக்கு, 2013–ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் பெங்களூரு பாஜக அலுவலகம் முன் வெடிகுண்டு வைத்த வழக்கு ஆகியவை உள்ளன.

இந்த நிலையில் 30 ஆண்டுகள் தலைமைறைவாக இருந்த அபுபக்கர் சித்திக்கை, ஆந்திர மாநிலம் அன்னமய்யா பகுதியில் தமிழக தீவிரவாத தடுப்புப் படையினர் கடந்த ஜூலை மாதம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அப்போது அவரிடம் நடத்திய விசாரணையில் வேலூரில் இந்து முன்னணி நிர்வாகி வெள்ளையப்பன், சேலத்தில் பாஜக மூத்த நிர்வாகி ஆடிட்டர் ரமேஷ் ஆகியோர் கடந்த 2013–ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட வழக்குகளில், அபுக்கர் சித்திக்குக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து இந்த இரு வழக்குகளிலும் அபுபக்கர் சித்திக்கை எதிரியாக தீவிரவாத தடுப்பு படையினர் சேர்த்தனர். மேலும் இவ் வழக்குகள் தொடர்பாக புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அபுபக்கர் சித்திக்கிடம் கைது செய்யப்பட்டதற்கான உத்தரவு வழங்கப்பட்டதாக தீவிரவாத தடுப்புப் படையினர் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

இந்த வழக்குகள் தொடர்பாக அபுபக்கர் சித்திக்கை விரைவில் தங்களது காவலில் எடுத்து விசாரிக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

### கண்டனப் பேரணி...




காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலை நிறுத்த வலியுறுத்தி சென்னை புதுப்பேட்டையில் முஸ்லிம் அமைப்புகள், பெரியாரிய உணர்வாளர்கள் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பேரணி.

## உயர்நீதிமன்றம், சுங்கத் துறை அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, செப்.19:** சென்னை உயர்நீதிமன்றம், சுங்கத் துறை அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

சென்னை பாரிமுனை ராஜாஜி சாலையில் உள்ள சுங்கத் துறை அலுவலகத்துக்கு வெள்ளிக்கிழமை வந்த மின்னஞ்சலில், 'உங்கள் அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. அது சற்று நேரத்தில் வெடிக்கும்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுகுறித்த தகவலின்பேரில், கடற்கரை காவல் நிலைய போலீஸார், வெடிகுண்டுகளை கண்டறியும் நிபுணர்கள் சென்று சோதனை செய்தனர். சுமார் 4 மணி நேரம் நடைபெற்ற சோதனையில், அங்கிருந்து எந்த வெடிப் பொருளும் கண்டெடுக்கப்படவில்லை.

முன்னதாக,வெடிகுண்டுமிரட்டல் காரணமாக சுங்கத் துறை அதிகாரிகள், ஊழியர்கள், பணியாளர்கள் என அனைவரும் சுங்கத் துறை அலுவலகத்தை விட்டு வெளியேறினர். மேலும், நண்பகலுக்கு பின்னர் அலுவலகத்துக்கு விடுமுறையும் விடப்பட்டது.

**உயர்நீதிமன்றத்தில்...** இதே போல, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிபிஐ சிறப்பு நீதிமன்றத்துக்கும் மின்னஞ்சலில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

தகவலறிந்த போலீஸாரும், வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்களும் நீதிமன்றத்துக்கு சென்று தீவிர சோதனை நடத்தினர். அங்கும் சந்தேகப்படும்படி எந்தப் பொருள்களும் கண்டெடுக்கப்படவில்லை.

எனவே, வதந்தியை பரப்பும் வகையில் அந்த மின்னஞ்சல் வந்திருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக சைபர் குற்றப்பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

## 'அனைவருக்கும் உலகத் தர மருத்துவ சேவை'

**சென்னை, செப். 19:** உலகத் தரம் வாய்ந்த மருத்துவ சேவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே தங்களுடைய இலக்கு என்று அப்பல்லோ மருத்துவக் குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி தெரிவித்தார்.

அப்பல்லோ மருத்துவமனையின் 42–ஆவது ஆண்டு விழா சென்னையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், பங்கேற்று பிரதாப் ரெட்டி பேசியதாவது:

கடந்த 1983–ஆம் ஆண்டு அப்பல்லோ மருத்துவமனை தொடங்கப்பட்டதில் இருந்து தற்போது வரை மருத்துவத் துறையில் பல்வேறு மைல்கல்களை எட்டியதுடன் புதிய தொழில்நுட்பங்களையும் சேவைகளையும் மக்களுக்கு அளித்து வருகிறோம்.

அதன்படி, கடந்த 42 ஆண்டுகளில் 20 கோடிக்கும் மேற்பட்ட மருத்துவ சிகிச்சைகளை வழங்கியுள்ளோம்.

51 லட்சம் அறுவை சிகிச்சைகளையும் 27,000 உறுப்பு மாற்று சிகிச்சைகளையும் மேற்கொண்டிருக்கிறோம்.

அனைத்து மக்களுக்கும் சர்வதேசத் தரத்திலான மருத்துவ வசதிகள் சென்றடைய வேண்டும் என்பதே எங்களது நோக்கம் என்றார் அவர்.

இந்த நிகழ்வில், அப்பல்லோ துணைத் தலைவர் பிரித்தா ரெட்டி, மேலாண் இயக்குநர் சுனிதா ரெட்டி, இணை மேலாண் இயக்குநர் சங்கீதா ரெட்டி, மருத்துவமனை நிர்வாகிகள், மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

## வழக்குரைஞர்கள் கைது விவகாரம்: ஒரு நபர் ஆணைய விசாரணைக்கு அச்சம் ஏன்?

### தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் கேள்வி

**சென்னை,செப்.19:** தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த வழக்குரைஞர்கள் கைது சம்பவம் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள ஒரு நபர் ஆணைய விசாரணைக்கு அச்சப்படுவது ஏன் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த வழக்குரைஞர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டதாகக் கூறி, சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த கைது சம்பவம் தொடர்பாக விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி வி.பார்த்திபன் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை அமைத்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து காவல்துறை தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதேபோல், போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்களை அப்புறப்படுத்தும்போது போலீஸார் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும், பெண் தூய்மைப் பணியாளர்களுக்கு பாலியல் தொல்லைக் கொடுத்ததாகவும் கூறி பெண் தூய்மைப் பணியாளர்கள் 12 பேர் ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்குரைஞர்கள் தரப்பில், தங்களது தரப்புக்கு நோட்டீஸ் கொடுக்காமல் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைத்த உத்தரவை நிறுத்தி வைத்தது சரியல்ல, என்று வாதிடப்பட்டது.

அரசுத் தரப்பில் ஆஜரான கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் ஜெ.ரவீந்திரன், மனுதாரர் தரப்பில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கவில்லை. அரசுத் தரப்பு வாதத்தைக் கேட்காமல் ஒருநபர் ஆணையத்தை அமைத்து இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டுள்ளது. எனவே, இந்த உத்தரவு நியாயமானது அல்ல என்று வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதிகள், கைது சமயத்தில் நிகழ்ந்த சம்பவம் குறித்து இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி இருக்கின்றனர். எனவே, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைத்து இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டுள்ளது. இதற்காக ஏன் அரசு அச்சப்படுகிறது? என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு அரசுத் தரப்பில், விசாரணைக்கு அச்சப்படவில்லை என்றும் ஒரு நபர் ஆணைய உத்தரவை உறுதி செய்வதாக இருந்தால் வேறு ஒரு நீதிபதியை ஒரு நபர் ஆணைய தலைவராக நியமிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த நீதிபதிகள், ஓய்வுபெற்ற நீதிபதி வி.பார்த்திபன் தனது விசாரணையைத் தொடங்கலாம். காவல்துறை தங்களது தரப்பில் உள்ள ஆதாரங்களை ஒரு நபர் ஆணையத் தலைவரிடம் ஒப்படைக்கலாம், என உத்தரவிட்டு விசாரணையை அக்.10–ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# தகவல் தரவு மையம்: முதல்வர் திறந்து வைத்தார்



**சென்னை, செப். 19:** சென்னையை அடுத்த சிறுசேரியில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தரவு மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி வழியாக இந்த மையம் திறக்கப்பட்டது.

இது குறித்து, தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட ஈக்வினிக்ஸ் நிறுவனம், உலகளாவிய வணிகங்களுக்கான சர்வதேச தீர்வுகள் அளித்திடும் நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. பல்வேறு நாடுகளில் தரவு மையங்களை அந்த நிறுவனம் நிறுவி செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிய தலைமுறை தொழில்நுட்பங்களுக்கு உகந்த உள்கட்டமைப்பை வழங்கும் நோக்கில் இந்த நிறுவனம், சிறுசேரி சிப்காட்டில் நவீன தகவல் தரவு மையத்தை உருவாக்கியுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூலையில் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினமே திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, சிறுசேரி தொழில்நுட்பப் பூங்காவில் தகவல் தரவு மையத்தை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் நா.முருகானந்தம், தொழில் துறை செயலர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் பு.அலர்மேல் மங்கை, ஈக்வினிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மனோஜ் பால் உள்பட பலர் பங்கேற்றனர்.

# எடப்பாடி பழனிசாமி பிரசார பயணத்தில் மாற்றம்

**சென்னை, செப்.19:** அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி, நாமக்கல் மாவட்டத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (செப்.20, 21) நடைபெறவிருந்த சுற்றுப்பயணம் அக்.4, 5-ஆம் தேதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதிமுக தலைமை அலுவலகம் சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை:

அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பிரசார பயணத்தை கடந்த ஜூலை 7 முதல் பேரவைத் தொகுதி வாரியாக மேற்கொண்டு வருகிறார். அதன்படி, செப்.29-ஆம் தேதி வரையிலான சுற்றுப்பயண விவரம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், சென்னை வானிலை ஆய்வு மையம் கனமழை பெய்யக்கூடும் என்று அறிவித்துள்ளதால், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (செப். 20, 21) நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளவிருந்த சுற்றுப்பயணம் அக்.4, 5-ஆம் தேதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, நாமக்கல், பரமத்திவேலூர் தொகுதிகளில் அக்.4-ஆம் தேதி, திருச்செங்கோடு, குமாரபாளையம் தொகுதிகளில் அக்.5-ஆம் தேதி எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு

## எடப்பாடி கே.பழனிசாமி குற்றச்சாட்டு



நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அருகே உள்ள அக்கியம்பட்டியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பேசிய அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி.

**நாமக்கல், செப். 19:** தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி குற்றஞ்சாட்டினார்.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பில் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, அக்கியம்பட்டியில் வெள்ளிக்கிழமை அவர் பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. 2026 தேர்தலுக்குப் பின் தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி அமையும். போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். திமுக ஆட்சியில் ரூ. 5.35 லட்சம் கோடி கடன் சுமை உள்ளது. அந்தக் கடனை வரிகளாக நம் தலையில் விதிக்கின்றனர். ஊழல்மிகுந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. திமுக ஆட்சியை அகற்ற அனைவரும் அதிமுகவுக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

இந்தப் பிரசாரத்தின்போது, முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி, பாஜக மாநில துணைத் தலைவர் கே.பி. ராமலிங்கம், சேந்தமங்கலம் முன்னாள் எம்எல்ஏ சி.சந்திரசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**ராசிபுரத்தில்...** ராசிபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில், எடப்பாடி கே.பழனிசாமி பேசியதாவது:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் எனக் கூறுகிறார். திமுக ஆட்சியில் ஊழல் நடக்காத துறையே கிடையாது. தமிழகத்தில் சுகாதாரத் துறை சீர்கெட்டுள்ளது. ஏழை மக்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை கிடைப்பதில்லை.

எனது எழுச்சிப் பயணம் தொடங்கியதிலிருந்து மு.க. ஸ்டாலினுக்கு தூக்கம் போய்விட்டது. உதயநிதி ஸ்டாலின் பேசும்போது, பிங்க் கலர் பேருந்தை பயன்படுத்தி எனது பேருந்தை முந்திப் போவதாகக் கூறியுள்ளார். எங்கள் பேருந்து ஜெட் வேகத்தில் செல்கிறது.

திமுக ஆட்சிக்கு வந்தவுடன் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. நகராட்சி வீட்டுவரி 100 சதவீதம் உயர்ந்துவிட்டது. காஞ்சிபுரம், திருநெல்வேலி, கோவை போன்ற மாநகராட்சிகளில் வரிவசூலில் ஊழல் நடந்துள்ளது என்றார்.

# விஜய் சுற்றுப்பயணம்: தொண்டர்களுக்கு கட்டுப்பாடு



**சென்னை, செப். 19:** தவெக தலைவர் விஜய்யின் சுற்றுப்பயணத்தை முன்னிட்டு, அந்தக் கட்சி சார்பில் தொண்டர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

தவெக தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு பிரசாரத்தை கடந்த செப். 13-ஆம் தேதி திருச்சியில் தொடங்கினார். தொடர்ந்து வாரந்தோறும் சனிக்கிழமைகளில் மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். அதன்படி, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூரில் சனிக்கிழமை (செப். 20) பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

இதனிடையே, விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி அளிக்க உத்தரவிடக் கோரிய வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, அவரது திருச்சி பிரசாரத்தில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல், தொண்டர்கள் உயரமான கட்டடங்களில் ஏறி நின்றது குறித்து உயர்நீதிமன்றம் பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதுபோன்ற நிகழ்வுகளில் தொண்டர்கள் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து கட்சித் தலைவர் சொல்லித்தர வேண்டும் என அறிவுறுத்தியது.

இதையடுத்து, தவெக தொண்டர்களுக்கு கட்சியின் பொதுச் செயலர் என்.ஆனந்த் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

இது குறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தவெக தலைவர் விஜய், மக்கள் சந்திப்பு பிரசாரத்துக்கு வரும்போதும், நிகழ்ச்சியை முடித்துவிட்டுச் செல்லும்போதும் அவரது வாகனத்தை யாரும் பின்தொடரக் கூடாது. மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், மரங்கள், மின்கம்பங்கள், கொடிக்கம்பங்கள், சாலைத் தடுப்புகளில் ஏறக் கூடாது.

கர்ப்பிணிகள், கைக்குழந்தையுடன் இருப்பவர்கள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பள்ளி மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும்.

விஜய்யின் மக்கள் சந்திப்பின்போது, அந்தப் பகுதியில் செல்லும் ஆம்புலன்ஸ், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோருக்கு எவ்விதப் போக்குவரத்து இடையூறும் ஏற்படாத வகையில் தொண்டர்கள் நடத்துகொள்ள வேண்டும்.

போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக வாகனங்களை நிறுத்தக் கூடாது.

காவல் துறையின் அறிவுறுத்தலின்படி, பட்டாசு வெடிப்பது உள்ளிட்ட அனைத்து வகையான வரவேற்பு நடவடிக்கைகளையும் தொண்டர்கள் தவிர்க்க வேண்டும். நிகழ்ச்சிக்கு வரும் தொண்டர்கள் சட்டம்-ஒழுங்கு நடவடிக்கைகளைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும்.

சாலைகளின் இருபுறங்களிலும் பதாகைகள், அலங்கார வளைவுகள், கொடிக்கம்பங்கள் ஆகியவற்றை அனுமதி பெறாமல் வைக்கக் கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# விஜய் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர்

**சென்னை, செப்.19:** சென்னை நீலாங்கரையில் உள்ள தவெக தலைவர் விஜய் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர் குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

தவெக தலைவர் விஜய் நீலாங்கரை கேசுவரினா அவென்யுவில் உள்ள பங்களாவில் வசித்து வருகிறார். அவருக்கு மத்திய அரசு 'ஒய்' பிரிவு பாதுகாப்பு வழங்கியுள்ளது.

இந்த நிலையில், விஜய் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர், அவரது வீட்டின் மொட்டை மாடியில் பதுங்கியிருந்தார். புதன்கிழமை மாலை மொட்டை மாடிக்கு நடைப்பயிற்சியில் ஈடுபட வந்த நடிகர் விஜய்யை, அந்த இளைஞர் கட்டிப்பிடிக்க முயன்றதாகக் கூறப்படுகிறது. இதைப் பார்த்த விஜய்யும், அவரது பாதுகாவலர்களும் அந்த இளைஞரைப் பிடித்து நீலாங்கரை காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் அளித்தனர்.

விசாரணையில் அவர் மதுராந்தகத்தைச் சேர்ந்த அருண் (24) என்பதும், 4 ஆண்டுகளாக சற்று மனநலம் பாதிக்கப்பட்டிருப்பதும், வேளச்சேரியில் உள்ள உறவினர் வீட்டில் வசிப்பதும் தெரியவந்தது. இதையடுத்து போலீஸார் அருணை கீழ்ப்பாக்கம் அரசு மனநல காப்பகத்தில் சேர்த்தனர்.

இதனிடையே விஜய்யின் 'ஒய்' பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளின் பரிந்துரையின் அடிப்படையில், சென்னை காவல் துறையின் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் வெள்ளிக்கிழமை சோதனை செய்தனர்.

அங்கு சுமார் 2 மணி நேரம் சோதனை நடைபெற்றது. ஆனால் விஜய் வீட்டில் இருந்து சந்தேகத்துக்குரிய வகையில் எந்தப் பொருளும் கண்டெடுக்கப்படவில்லை.

# மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு குறைப்பு

**மேட்டூர், செப். 19:** மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு வெள்ளிக்கிழமை விநாடிக்கு 9,000 கனஅடியாகக் குறைக்கப்பட்டது.

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக பாசனத்திற்கான நீர்த் தேவை குறைந்துள்ளது. இதையடுத்து வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு விநாடிக்கு 13,000 கனஅடியிலிருந்து 9,000 கனஅடியாகக் குறைக்கப்பட்டது.

அணையின் நீர் இருப்பு 91டி.எம்.சி.யாக உள்ளது.


இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
அறிவிப்பு
ஒப்பந்த குறிப்பு எண்: IOB/IRC/01/2025-26 தேதி: 19.09.2025
... www.iob.bank.in & https://iobtenders.auctiontiger.net/EPROC/
ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் 13.10.2025 மாலை 4 மணி வரை.
இடம்: சென்னை
தேதி: 19.09.2025
துணை பொது மேலாளர்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சொத்து வசூல் நிர்வாக கிளை
மூன்றாவது தளம், மத்திய அலுவலக வளாகம், 763, அண்ணா சாலை, சென்னை-600 002, Ph: 044-28519453 Email: iob1535@iob.in
பொது அறிவிப்பு
... 28.08.2025 தேதியிட்ட விற்பனை அறிவிப்பு படி 20.09.2025 அன்று நடத்தப்படவிருக்கும் இ-ஏலம் நிர்வாக காரணங்களால் விலக்கி கொள்ளப்படுகிறது.
M/s.யூனிக் வீடர் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் சொத்திற்கான இ- ஏலத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.
முதன்மை மேலாளர்

F.No. A-12035/01/2023/Admn.(e-3013116)
இந்திய அரசு
ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம்
நிலவளங்கள் துறை
நிலவளங்கள் துறை ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கிறது.

| வ.எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை | ஆட்சேர்ப்பு முறை |
|---|---|---|---|
| 1 | இளம் தொழிலாளுநர் (சட்டம்) | ஒன்று | ஒப்பந்தமுறை |

தகுதி அளவுகோல்களுக்கு, அஃதாவது கல்வித் தகுதி, அனுபவம், பயோ-டேட்டா படிவம் போன்றவைக்கு விண்ணப்பதாரர்கள் இந்தத் துறையின் அதிகாரப்பூர்வ வலைத்தளமான https://dolr.gov.in ஐப் பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தை முறையாக கையொப்பமிட்டு (ஸ்கேன் செய்யப்பட்ட /PDF) மின்னஞ்சல் மூலம் மட்டுமே (i) usadmn-dolr@gov.in மற்றும் (ii) th.lianboi@nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசி நாள் இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15வது நாள் ஆகும்.
இந்திய அரசின் நேருதவிச் செயலாளர் 011-24364635
CBC 35201/11/0005/2526

ICICI Bank
பொது அறிவிப்பு - கடனீட்டுச் சொத்து விற்பனைக்கான டெண்டருடன் கூடிய மின்-ஏலம்
[பார்க்க விதி 8(6) க்கான விதிமுறைகள்]
அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

கோயம்புத்தூர் மாநகராட்சி
முன் மொழிவு அறிக்கை (RFP)
விருப்பு கேட்பு அறிக்கை எண்.RFP-4/2025 நாள்: 18.09.2025
மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். www.tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் -1 தொலைபேசி எண். 0422 -2396026. Email : commr.coimbatore@tn.gov.in
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
செ.ம.தொ.இ./5258/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
இராஜபாளையம் நகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 16.09.2025
ஆணையாளர், இராஜபாளையம் நகராட்சி

பல்கலைக்கழக மானியக் குழு
(கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
பகதூர் ஷா ஜாபர் மார்க், புது தில்லி - 110002
தொலைபேசி: 011-23604200, 011-23604508
விளம்பர எண். 41/2025
கல்வித் தொடர்பாடலுக்கான கூட்டமைப்பு (CEC), புது தில்லி-க்கு இயக்குனர் பதவிக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி தேதி நீட்டிப்பு
புது தில்லியில் உள்ள கல்வித் தொடர்பாடலுக்கான கூட்டமைப்பு (CEC) இயக்குநர் பதவிக்கு, ரூ.11,250/- மாதாந்திர சிறப்புப் படியுடன் (இதனுடன் சேர்த்து அவ்வப்போது பொருந்தக்கூடிய வழக்கமான படி) மாதத்துக்கு ரூ.2,10,000/- (நிலையானது) சம்பளம் என்ற ஊதிய விகிதத்தில் ஆன்லைன் விண்ணப்பங்களை UGC வரவேற்று இருந்தது. இப்பதவி ஒரு மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு இணையானதாகும். இதற்கான இணையவழி விண்ணப்பங்களை நிரப்புவதற்கான கடைசி தேதி 18.08.2025 ஆக இருந்தது.
விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி இப்போது 30.09.2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்பது இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்கள் UGC இணையதளமான www.ugc.ac.in/jobs இல் கிடைக்கின்றன.
CBC21205/12/0008/2526 செயலாளர், UGC

கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-Tendering)
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்
பதிவு அலுவலகம்: மனை எண் 59 & 60-23, 22-வது குறுக்கு, 29-வது மெயின் BTM 2-வது நிலை, பெங்களூரு-560076. www.vistaarfinance.com
பிற்சேர்க்கை IV [பார்க்க விதி 8 (1)]
சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)

பஞ்சாப் நேஷனல் வங்கி
சுவாதீன அறிவிப்பு
அதிகாரப்பூர்வ அதிகாரி & முதன்மை மேலாளர், பஞ்சாப் நேஷனல் வங்கி

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்
அலெக்சாண்டர் சதுக்கம், எண்.2, (பழைய எண்.34 & 35), 3வது தளம், சர்தார் படேல் ரோடு, கிண்டி, சென்னை-600032 Ph: (044)-4210 6650
பொது அறிவிப்பு Sale Under SARFAESI Act
... விற்பனை தேதி: 14.10.2025 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை. விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்க கடைசி தேதி: 13.10.2025 மாலை 4 மணி வரை. மற்ற விவரங்களில் எந்தவித மாற்றமும் இல்லை.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

வரி விளம்பரம்
PUBLIC NOTICE
CHANGE OF NAME

பெயர் மாற்றம்
சென்னை மாவட்டம், A3, ஊ பேலஸ் அபார்ட்மெண்ட், எண்.24, 3வது குறுக்கு தெரு, ஓர்ம்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600010 என்ற முகவரியில் வசிக்கும் ஹி.மஹிரா (H.Mahira), த/பெ.ஹிமான்ஷு பி ஷா (பிறந்த தேதி : 26.09.2008) என்பவர் இனிமேல் மஹிரா (MAHIRA) என்று அழைக்கப்படுவார்.
ஹி.மஹிரா
சென்னை 18.09.2025

பெயர் மாற்றம்
நான், சித்ரா R சந்திரன், மற்றொரு பெயர் R சித்ரா அல்லது சித்ரா R, 64/பெண், W/o. A P ராமச்சந்திரன், பிளாட் 4AB, பிளாக் 2, சித்தார்த் ஹைட்ஸ், 55 ஆற்காடு ரோடு, சாலிகிராமம், சென்னை-600093-ல் வசித்து வருகிறேன். இனி முதல் நான் சித்ரா ராமச்சந்திரன் என்று அழைக்கப்படுவேன்.
சித்ரா R சந்திரன்

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

பாங்க் ஆஃப் பரோடா बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda
**சைதாப்பேட்டை கிளை**
AGS டவர்ஸ், முதல் தளம், எண்.2, நம்பெருமாள் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை – 600015
தொலைபேசி : 044 23454396

## பாதுகாப்பு பெட்டகங்களின் வாடகைதாரர்களுக்கான அறிவிப்பு (பெட்டகங்களுக்கான வாடகை செலுத்தாதவர்கள்)

கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயருக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள எண்ணைக் கொண்ட பாதுகாப்பு பெட்டகத்தை வாடகைக்கு எடுத்துள்ள வாடகைதாரருக்கு தெரிவிக்கப்படும் விவரம் என்னவெனில், அறிவிப்புகள், நினைவூட்டல்களுக்கும் பிறகும் கூட இந்தப் பெட்டகத்திற்கான வருடாந்திர வாடகை கட்டணத்தை செலுத்த அவர் தவறியுள்ளார் என்பதாகும். இந்திய ரிசர்வ் வங்கி/ எமது வங்கி ஆகியவற்றின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க இந்த வாடகைதாரருக்கு அவரது பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிவிப்புகள் அந்த நபர்/ முகவரிதாரர் காணப்படவில்லை அல்லது அங்கிருந்து சென்று விட்டார் என்ற குறிப்புடன் வழங்கப்படாமல் திரும்பப் பெறப்பட்டுள்ளன. இந்தப் பெட்டகத்தை வைத்திருப்போரை அவர் பதிவு செய்துள்ள முகவரியில் நேரடியாகச் சென்று தொடர்பு கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை. அவரின் தற்போதைய முகவரியையும் அறிந்து கொள்ள இயலவில்லை. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் இந்தப் பெட்டகங்களுக்கான வங்கிக்குச் சேர வேண்டிய வாடகைத் தொகை செலுத்தப்படவில்லையெனில், குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிமுறையை எமது வங்கி பயன்படுத்திக் கொண்டு வாடகைதாரர் செலவின் அடிப்படையில் 14.10.2025 காலை 11.00 மணியளவில் பாதுகாப்பு பெட்டகங்கள் உடைத்துத் திறக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | பாதுகாப்புப் பெட்டக எண் | பாதுகாப்புப் பெட்டகத்தை வைத்திருப்போரின் பெயரும் முகவரியும் | வாடகை பாக்கி தேதி | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 4483AX0051 | செல்வி ரோஸி, 54 நாமல் நகர், லிட்டில் மவுண்ட், சைதாப்பேட்டை, சென்னை-600015. | 06.11.2021 | ரூ. 15,694/- |

இடம்: சென்னை
தேதி: 18.09.2025
முதன்மை மேலாளர் பாங்க் ஆஃப் பரோடா சைதாப்பேட்டை கிளை

AUXILO The next level beckons
**ஆக்சிலோ ஃபின்செர்வ் பிரைவேட் லிட்.**
அலுவலக எண். 63, 6வது தளம், கல்பதரு சுதக்ஸ், கொண்டிவிட்டா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை 400059 - மகாராஷ்டிரா.

## அடையாள சுவாதீன அறிவிப்பு

[illegible]

அசையாச் சொத்து விவரம்

[illegible]

நாள்: 16.09.2025
இடம்: காஞ்சிபுரம்
ஒப்பம்/- K
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஆக்சிலோ ஃபின்செர்வ் பிரைவேட் லிட்.

**பாரத ஸ்டேட் வங்கி**
வீட்டுக் கடன் மையம்
(HLC - OMR), புதிய எண்.4/952 & 4/952A, 3வது தளம், ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி, சென்னை - 600 096. போன்:22250031

## மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடன்தாரரின் பெயர் : திரு. K.K. காளிசரண்
வாகன பதிவு எண் : TN 95 K 4443
தயாரிப்பு/மாடல் : JEEP CAMPUS
குறைந்த பட்ச விலை:ரூ.14,20,000/- (GST @ 18% applicable) டேவணித்தொகை:ரூ.1,42,000/-

**விற்பனை விபரம்:**

| | |
|---|---|
| மின்னணு ஏலம் நடைபெறும் நாள் & நேரம்: | 29.09.2025 காலை 10.30 மணி முதல் 11.30 மணிவரை; [illegible] |
| டேவணித் தொகை செலுத்தும் முறை: | EMD-ஐ டிமாண்ட் டிராப்ட் மூலமாக State Bank of India, HLC-OMR என்ற பெயரில் செலுத்த வேண்டும். |
| விலைக் குறிப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கோரும் அளவு | ரூ.5,000/- |
| வாகனங்களை பார்வையிடும் தேதி: | 25.09.2025 - காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை; |
| டேவணித்தொகையுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க: | 26.09.2025 மாலை 04.00 மணி வரை |

RC இல்லை.
விற்பனை தொகையில் GST (18%)-யினை வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளரே ஏற்கவேண்டும்.
மேலும் வாகனத்தினை பார்வையிடும் நேரம் / இ-ஏலம் மற்றும் இதர விவரங்களையும் நிபந்தனைகளையும் அறிய விரும்பும் விலைக் குறிப்பீட்டாளர்கள், மந்த்ரா ஏஜென்சி - 70925 64564 அவர்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவரான M/s.C1 India Pvt. Ltd. (தொடர்பு கொள்ளவேண்டிய நபர்-திரு.பிரபாகரன்- 7418281709) வலைத்தளம்: www.bankeauctions.com; மின்னஞ்சல்: tn@c1india.com (அல்லது) முதன்மை மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, HLC-OMR, 4/952 & 4/952A, 3வது தளம், ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி, சென்னை-600 096, போன்:044-2225 0031, 94458 61199 என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்

இடம்: சென்னை.
தேதி: 19.09.2025
அதிகாரப்பூர்வ அதிகாரி,
பாரத ஸ்டேட் வங்கி, HLC-OMR, சென்னை.

EXH எண்.: 169

# மும்பை கடன் வசூல் தீர்ப்பாயம் எண். 1

(இந்திய அரசு, நிதி அமைச்சகம்)
2 வது தளம், டெலிபோன் பவன், ஸ்ட்ராண்ட் சினிமா அருகில், கொலாபா மார்க்கெட், கொலாபா, மும்பை-400 005.

## திருத்தம் / கூடுதல்சேர்க்கை / பொது அறிவிப்பு
## வசூல் நடவடிக்கை.எண். 767/2016

ஆர்சில் ...வாதி
-எதிர் -
M/s. சாரதா ஷக்தி கார்ப்பரேஷன் மற்றும் பிறர் ... பிரதிவாதி

26.09.2025 நாளன்று நடக்கவுள்ள மின் ஏலத்துக்கான பொது அறிவிப்பை வழங்க மும்பை, கோழிக்கோடு மற்றும் சென்னையில் உள்ள செய்தித்தாள்களில் 27.08.2025 அன்று பிசினஸ் ஸ்டாண்டர்டு & நவ் சக்தி (மும்பை பதிப்பு), தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் & கேரளா கௌமுதி (கோழிக்கோடு பதிப்பு) மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் & தினமணி (சென்னை பதிப்பு) ஆகியவற்றில் வெளியான 20.08.2025 தேதியிட்ட விற்பனை பிரகடனத்தில் அடிப்படை விலை, டேவணித் தொகை மற்றும் விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை குறிப்பிடப்பட்டு இருந்தன, இரண்டு லாட்கள் சொத்துக்களுக்கான மேற்சொன்ன விஷயத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தம் பின்வருமாறு:

| இவற்றுக்குப் பதிலாக | | | | இப்படி திருத்தி வாசிக்கவும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| லாட்கள் எண். | அடிப்படை விலை | டேவணித் தொகை | விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | லாட்கள் எண். | அடிப்படை விலை | டேவணித் தொகை | விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை |
| 1 | 8.10 லட்சம் | 81,000/- | 10,000/- | 1 | 81.00 லட்சம் | 8.10 லட்சம் | 1.00 லட்சம் |
| 2 | 27.00 லட்சம் | 2.70 லட்சம் | 50,000/- | 2 | 2.70 கோடி | 27.00 லட்சம் | 2.50 லட்சம். |

மேற்சொன்ன விற்பனைக்கான 27.08.2025 அன்று வெளியிடப்பட்ட 20.08.2025 தேதியிட்ட விற்பனை பிரகடனத்தின் [illegible] எந்த மாற்றமும் இல்லை.
2025 செப்டம்பர் 18 ம் தேதியன்று முத்திரையிடப்பட்டு என்னால் வழங்கப்பட்டது.

SEAL
ஒப்பம்/-
(மகேஷ் குமார்)
வசூல் அலுவலர்,
மும்பை கடன் வசூல் தீர்ப்பாயம் - I, மும்பை

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
தேனாம்பேட்டை கிளை: தரைத்தளம், தொழிலாளர் நல வாரிய கட்டிடம் DMS கேம்பஸ், சென்னை - 600 006 Ph: 044 24335069 Mob: 89259 50698 Email:iob0698@iob.in
Appendix-IV **அசையா சொத்துக்கள் சுவாதீன அறிவிப்பு** {Rule 8(1)}

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (Second) Act, 2002 (Act 54 of 2002)-ன் கீழ் [illegible] (Demand Notice) [illegible]

வ.எண்.1: கடன்தாரர்: Mr.P.மூர்த்தி [illegible] கோரிக்கை அறிவிப்பு தேதி: 10.06.2025; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 31.05.2025 அன்றுள்ளபடி ₹ 44,58,158.05 [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 15.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

வ.எண்.2: கடன்தாரர்: Mr.J.நிர்மல் குமார் [illegible] கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.05.2025; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 07.05.2025 அன்றுள்ளபடி ₹ 67,39,682.27 [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 17.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

வ.எண்.3: கடன்தாரர்: Mr.G.ராஜேஷ் குமார் [illegible] கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.05.2025 [illegible] 30.04.2025 அன்றுள்ளபடி ₹ 1,20,09,740/- [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 17.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

வ.எண்.4: கடன்தாரர்: Mr.V.சந்திர குமார் [illegible] கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.05.2025 [illegible] 30.04.2025 அன்றுள்ளபடி ₹ 73,36,721.31 [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 17.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

வ.எண்.5: கடன்தாரர்: Mr.S.கார்த்திக் [illegible] கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.05.2025 [illegible] ₹ 1,77,56,202/- [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 19.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

வ.எண்.6: கடன்தாரர்: Mr.M.கண்ணன் [illegible] 30.04.2025 அன்றுள்ளபடி ₹ 1,15,50,178/- [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 19.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

வ.எண்.7: கடன்தாரர்: Mr.S.சீனிவாசன் [illegible] 30.04.2025 அன்றுள்ளபடி ₹ 80,29,733/- [illegible] சுவாதீனம் எடுத்த தேதி: 19.09.2025
அசையா சொத்து விவரம் [illegible]

தேதி: 15.09.2025 / 17.09.2025 / 19.09.2025
இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

பாங்க் ஆஃப் பரோடா बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda
**SIET கல்லூரி கிளை**
எண்.54, பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 தொலைபேசி: 044 23454304/23454305
மின்னஞ்சல் : Colmad@bankofbaroda.com

## சுவாதீன அறிவிப்பு

[illegible]

அசையா சொத்து விவரம்

[illegible]

தேதி : 15.09.2025
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் பாங்க் ஆஃப் பரோடா

பாங்க் ஆஃப் பரோடா बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda
**SIET கல்லூரி கிளை**
எண்.54, பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 தொலைபேசி: 044 23454304/23454305
மின்னஞ்சல் : Colmad@bankofbaroda.com

## கடன் பெற்றவருக்கு வழங்கப்படும் அறிவிக்கை

[illegible]

| வ | பெற்றுள்ள கடன் வசதியின் தன்மை மற்றும் கணக்கு எண் | அளவு (ரூபாயில்) | வட்டி விகிதம் | 31.08.2025 தேதிய நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கடன் கணக்கு 05310500000083 | ரூ.56,00,000/- | 8.90% | ரூ. 55,99,704.53 |
| | மொத்தம் | | | ரூ.55,99,704.53 |

[illegible]

இடம் : SIET கல்லூரி, தேதி : 01.09.2025
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், பாங்க் ஆஃப் பரோடா

கனரா வங்கி
**துலாசபுரம் கிளை**
#134, ரைஸ் மில் தெரு, இடையாப்பாக்கம் அஞ்சல், துளசபுரம்- 631553

## தங்க நகை மின்னணு-ஏல விற்பனை அறிவிப்பு

[illegible] 25.09.2025 [illegible] 26.09.2025 [illegible]

| வ. எண் | கடன் தேதி | கடன் கணக்கு எண் | கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி | நிலுவைத் தொகை தேதி (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 10.07.2022 | 180089534635 | பாலு, த/பெ.சடகோபன், பெருமாள் கோயில் தெரு, பிச்சிவாக்கம், கிராமம் (போஸ்ட்), இடையாப்பாக்கம் (வழியாக), தமிழ்நாடு - 631553 | ரூ.1,46,190.70 |
| 2 | 01.07.2022 | 180089534342 | பாலு, த/பெ.சடகோபன், பெருமாள் கோயில் தெரு, பிச்சிவாக்கம், கிராமம் (போஸ்ட்), இடையாப்பாக்கம் (வழியாக), தமிழ்நாடு - 631553 | ரூ.2,04,573.56 |

டேவணித்தொகை : ரூ. 25,000/-

[illegible]

**மின் ஏல நாள் மற்றும் நேரம்: 26.09.2025 பிற்பகல் 12.30 முதல் மாலை 03:00 மணி (கணக்கில்லா 5 நிமிட கால நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை)**
டேவணித்தொகை : 25.09.2025 [illegible]
மின்னஞ்சல் போர்டல்: https://egold.auctiontiger.net/EPROC/
நாள் : 19.09.2025, இடம் : துளசாபுரம்
கிளை மேலாளர், கனரா வங்கி

AUXILO The next level beckons
**ஆக்சிலோ ஃபின்செர்வ் பிரைவேட் லிட்.**
அலுவலக எண். 63, 6வது தளம், கல்பதரு சுதக்ஸ், கொண்டிவிட்டா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை 400059 - மகாராஷ்டிரா.

## அடையாள சுவாதீன அறிவிப்பு

[illegible]

அசையாச் சொத்து விவரம்

[illegible]

நாள்: 16.09.2025
இடம்: காஞ்சிபுரம்
ஒப்பம்/- K
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஆக்சிலோ ஃபின்செர்வ் பிரைவேட் லிட்.

Chola Enter a better life
# சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: ASV அதர்ஷ் டவர், 719, பதாரி சாலை, அண்ணா சாலை பின்புறம் சென்னை, தமிழ்நாடு - 600 002
தொடர்புக்கு: திரு.தியாகராஜன் கைபேசி: 9940516215 & திரு. சிவசண்முகம் - கைபேசி : 9962614785

## அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9 (1)-ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர் / இணை கடன்தாரர் / அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு, M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் (இது முதல் M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-என்று அழைக்கப்படும்) அடையாளப்பூர்வ / அசல் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளன. அந்த ஜாமீன் சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், நாங்கள் பொது மின்னணு ஏலத்தை https://bankauctions.in/ என்ற வலைதளம் மூலம் நடத்த உள்ளோம்.

| கணக்கு எண். மற்றும் கடன்தாரர் / இணை கடன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் | தேதி & பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின்படி தொகை | சொத்துக்களின் விபரம் | குறைந்தபட்ச விலை டேவணித்தொகை ஏல உயர்வு தொகை |
|---|---|---|---|
| கடன் கணக்கு எண்: HE01ZPQ00000073680 1. S.தமிழ்செல்வி 2. ஸ்டீபன் தமிழரசு N இருவரின் முகவரி: எண்.5, வெற்றிவேலன் நகர், VTC நெடும்பரம், நெடும்பரம் அஞ்சல், திருவள்ளூர் - 631204. மேலும் : மனை எண்.3, கதவு எண்.57, லட்சுமிபுரம், புங்கத்தூர், திருவள்ளூர் - 602001. 3. M/s. ஆல்னு (Aalnu) டெய்ரி ஃபார்ம் எண்.5, வெற்றிவேலன் நகர், VTC நெடும்பரம், நெடும்பரம் அஞ்சல், திருவள்ளூர் - 631204. | 08.01.2025 & 08.01.2025 அன்று வரை ரூ. 1,58,26,982/- | சொத்து-1: திரு.ஸ்டீபன் தமிழரசன் (இணை விண்ணப்பதாரர்) அவர்களுக்கு சொந்தமான சொத்து. வடசென்னை பதிவு மாவட்டம், திருவள்ளூர் இணை I துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, புங்கத்தூர் கிராமத்தில், வார்டு எண். B, பிளாக் எண்.15, பழைய சர்வே எண்.584/3, பட்டாவின் படி பழைய சர்வே எண்.584/3A4, டவுன் சர்வே எண். 8/7-ன் படி மனை எண்.3-ல் உள்ள 2400 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் கீழ் கண்ட எல்லைகளுக்குட்பட்டது. வடக்கில்: 20 அடி சாலை, தெற்கில்: மனை எண்.9, கிழக்கில்: மனை எண். 4, மேற்கில்: மனை எண்.2. அளவுகள்: வடக்கு பகுதியில்: 40 அடி, தெற்கு பகுதியில்: 40 அடி, கிழக்கு பகுதியில்: 60 அடி, மேற்கு பகுதியில்: 60 அடி. மொத்தம் 2400 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ. 69,00,000/- ரூ. 6,90,000/- ரூ. 1,00,000/- |
| | | சொத்து-2: திருமதி.S.தமிழ்செல்வி (விண்ணப்பதாரர்) அவர்களுக்கு சொந்தமான சொத்து. வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவாலங்காடு துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, பட்டறைபெரும்புதூர் கிராமத்தில், பழைய சர்வே எண்.467/2A, பட்டாவின் படி புதிய சர்வே எண்.467/2A2-ன் படி 0.20 சென்ட் பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் கீழ் கண்ட எல்லைகளுக்குட்பட்டது. வடக்கில்: பழைய நெடுஞ்சாலை சாலை, தெற்கில்: N.H.205 நெடுஞ்சாலை சாலை, கிழக்கில்: சர்வே எண்.467/2A மற்றும் இளவழகன் அவர்களின் ஏக்கர் 0.20 சென்ட் நிலம், மேற்கில்: சர்வே எண்.466, மொத்தம் 0.20 சென்ட் காலி நிலம். (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ. 1,20,00,000/- ரூ. 12,00,000/- ரூ. 1,00,000/- |
| கடன் கணக்கு எண்: HE01CHF00000014197 1. கருணாகரன் லாரன்ஸ் குமார் 2. பக்கிரிசாம் விக்னேஸ்வரி, இருவரின் முகவரி : எண்.5, வீராசாமி பிரதான தெரு, அயனாவரம், சென்னை, தமிழ்நாடு - 600 023. 3. Z டோட்டல் செக்யூரிட்டி சிஸ்டம்ஸ், எண்.73/7, 5வது பிரதான சாலை, Y-பிளாக், அண்ணாநகர், சென்னை, தமிழ்நாடு - 600 040. | 12.08.2024 & 12.08.2024 அன்று வரை ரூ. 20,16,569/- | மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அண்ணா நகர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட அயனாவரம் தாலுகா, அயனாவரம் கிராமத்தில் கதவு எண்.5, புதிய எண்.7, வீராசாமி பிரதான தெரு, (பட்டாவின் படி வீராசாமி பிரதான தெரு) அயனாவரம், சென்னை - 600 023 என்ற முகவரியில் பிளாக் எண். 14, டைமாஷ் எண். 1026, 29.06.1998 தேதியிட்ட SD/TR. எண்.723/98-99, பட்டாவின் படி டவுன் சர்வே எண்.131 மற்றும் 132-ன் படி மொத்தமுள்ள 3091.5 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 375 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் 850 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள ஃப்ளாட் எண். S-2, அதனுடன் பொது பகுதிகள் மற்றும் வசதிகள் உட்பட, மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.வீராசாமி பிரதான சாலை, தெற்கில்: திருமதி.ஜெயந்தி அவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: திரு.M.சுவாமிநாதன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, மேற்கில்: திரு.ராகவன் அவர்களுக்கு சொந்தமான சொத்து. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 82 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 82 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 37.5 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 37.5 அடி. (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ. 41,00,000/- ரூ. 4,10,000/- ரூ. 50,000/- |
| கடன் கணக்கு எண்கள்: HE01TVT00000025611 & HE01TVT00000038473 1. சுகன்யா ராஜன் 2. சிவலிங்கராஜன் ராஜன் இருவரின் முகவரி : எண்.319/1A, மனை எண்.6, 5வது பிரதான தெரு, வள்ளலார் நகர், பட்டாபிராம், சென்னை, திருவள்ளூர், தமிழ்நாடு - 600 072. மேலும் : கதவு எண்.9, 6வது பிரதான தெரு, வள்ளலார் நகர், பட்டாபிராம், சென்னை - 600 072. 3. ரஞ்சனா பார்மசி A3, 498/285, முத்துகிருஷ்ணன் காம்ப்ளக்ஸ், C.T.H. சாலை, திருநின்றவூர், திருவள்ளூர், தமிழ்நாடு - 602 024. | 07.10.2024 & 07.10.2024 அன்று வரை & ரூ. 40,12,191/- | சொத்து-1: திருவள்ளூர் பதிவு மாவட்டம், ஆவடி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட கதவு எண்.9, வள்ளலார் நகர் 6வது பிரதான தெரு, தண்டுரை கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் பிளாக் எண்.58, வார்டு எண்.E, சர்வே எண்.320/2, TSLR-ன்படி புதிய டவுன் சர்வே எண்.342/84-ன்படி கிழக்கு பகுதியில் மனை எண்.5ல் உள்ள 1220 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.4, தெற்கில்: 16 அடி சாலை, கிழக்கில் : சேகர் அவர்களின் சொத்து, மேற்கில்: முருகன் அவர்களின் சொத்து. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 28 ¾ அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 29 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 42 ¼ அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 42 ¼ அடி. மொத்த பரப்பளவு - 1220 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ. 41,00,000/- ரூ. 4,10,000/- ரூ. 50,000/- |
| | | சொத்து-2: திருவள்ளூர் பதிவு மாவட்டம், ஆவடி துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட வள்ளலார் நகர் 5வது தெரு, தண்டுரை கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரியில் பிளாக் எண்.58, வார்டு எண்.E, பழைய சர்வே எண்.319/1A1 மற்றும் 319/1A, பட்டா எண்.85, பட்டாவின்படி புதிய சர்வே எண்.84/6ன்படி மனை எண்.5 மற்றும் 6 பகுதி-ல் மொத்தமுள்ள 3084 சதுர அடி நிலத்தில் 1040 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : அருள்பிரகாசம் அவர்களின் சொத்து, தெற்கில் : சோபியா.BB அவர்களின் சொத்து, கிழக்கில் : 5வது பிரதான சாலை, மேற்கில் : ராஜன் அவர்களின் சொத்து. அளவுகள் : வடக்கு பகுதியில் - 52 அடி, தெற்கு பகுதியில் - 52 அடி, கிழக்கு பகுதியில் - 20 அடி, மேற்கு பகுதியில் - 20 அடி. மொத்த பரப்பளவு - 1040 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ. 50,00,000/- ரூ. 5,00,000/- ரூ. 1,00,000/- |
| கடன் கணக்கு எண்கள்: ML01CZH00000072350 1. கோவிந்தசாமி, த/பெ. சங்கரலிங்கம் 2. சுபா கோவிந்தசாமி 3. M/s. வேலன் கேம்ப்ஸ் அனைவரின் முகவரி : எண்.5, F3, ஸ்ரீ சக்தி நிவாஸ், 2வது பிரதான சாலை, பாலாஜி நகர், அனகாபுத்தூர், காஞ்சிபுரம் - 600070. | 13-11-2024 & 13-11-2024 அன்று வரை ரூ. 26,28,888/- | திரு.கோவிந்தசாமி (விண்ணப்பதாரர்) அவர்களுக்கு சொந்தமான சொத்து : தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் பம்மல் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் தாலுகா, பாலாஜி நகர், 2வது பிரதான சாலை, அனகாபுத்தூர் கிராமத்தில், பழைய சர்வே எண்.158/3 & 159/1, பட்டாவின் படி புதிய சர்வே எண். 159/1B & 158/3C -ன் படி மனை எண்.5-ல் மொத்தமுள்ள 2883 சதுர அடியில் 360 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் ஸ்ரீ சக்தி நிவாஸ் என பெயரிடப்பட்டுள்ள கட்டிடத்தில் முதல் தளத்தில் 819 சதுர அடி கட்டுமான பரப்பளவு கொண்ட (பொது பகுதி உட்பட) அடுக்குமாடி குடியிருப்பு ஃப்ளாட் எண். F3, அதனுடன் F-3 என பெயரிடப்பட்டுள்ள அட்ஜஸ்டபுள் மூடிய கார் பார்க்கிங் உட்பட, மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: 20 அடி அகல சாலை, தெற்கில்: 20 அடி அகல சாலை, மேற்கில்: மனை எண்.6, மேற்கில் : சர்வே எண்.163-ல் உள்ள நிலம். மொத்தம் 2883 சதுர அடி. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 44 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 64 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 61½ அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 9 அடி + 40 ½ அடி + 21 அடி. (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ.33,00,000/- ரூ.3,30,000/- ரூ.50,000/- |
| கடன் கணக்கு எண்: ML01TRM00000031857 1.லேட். நீலகண்டன் கந்தசாமி அவர்களின் அனைத்து சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள், எண்.248/3, பயோனீர் காலனி, அண்ணா நகர் மேற்கு விரிவு-600101. 2. நீலகண்டன் தெய்வமலர், எண்.248/3, பயோனீர் காலனி, அண்ணா நகர் மேற்கு விரிவு - 600101. 3. அபி அசோசியேட்ஸ், எண்.51, பஜனை கோயில் தெரு, மேல்நடுவங்கரை, அண்ணா நகர், சென்னை - 600 040. | 16.08.2023 & 16.08.2023 அன்று வரை ரூ. 28,17,797/- | மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அண்ணா நகர் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட சென்னை மாவட்டம், எழும்பூர்-நுங்கம்பாக்கம் தாலுக்கா, தற்போது அமைந்தகரை தாலுக்கா, மேற்கு நடுவங்கரை கிராமத்தில், கதவு எண்.51, (கதவு எண்.51-ன் பகுதி), பஜனை கோயில் தெரு என்ற முகவரியில் உள்ள 589 சதுர அடி நிலம் (அடிப்படையில் அசல் அளவின் படி மொத்தமுள்ள 1222 சதுர அடியில் 589 சதுர அடி) மற்றும் அங்குள்ள வீடு. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : E. சிவபாதம், ரத்தினம்மாள் ஆகியோர்களின் மீதமுள்ள நிலம், தெற்கில் : பஜனை கோயில் தெரு, கிழக்கில் : வழி (சந்து), மேற்கில்: M.தமிழரசன் அவர்களின் வீடு. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 19 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 19 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் : 31 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் : 31 அடி. (அசல் சுவாதீனம்) | ரூ.32,00,000/- ரூ.3,20,000/- ரூ.50,000/- |
| கடன் கணக்கு எண்: ML01CHE00000064882 1. பிரபாகர் M 2. பிரபாகர் சத்யா 3. M/s. முத்து விக்னேஷ் எண்டர்பிரைசஸ் 4. M/s. பிரபாகர் மில்க் அண்டு மீனட் கட்டர் மெஷின், அனைவரின் முகவரி : எண் 8, பிரதான சாலை, அட்டுப்பட்டுக் கோட்டை புஞ்சை, அச்சரப்பாக்கம், காஞ்சிபுரம் - 603 301. | 21-02-2025 & 21-02-2025 அன்று வரை ரூ. 29,01,576/- | (திரு.பிரபாகர் அவர்களுக்கு சொந்தமான சொத்து (விண்ணப்பதாரர்): செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலுகா, அட்டுப்பட்டுக்கோட்டை கிராமம், தமிழ்நாடு - 603 301 என்ற முகவரியில் சர்வே எண்.29, 30/1, 31/1-ன் படி 57 செண்ட் + 14 செண்ட் + 91 செண்ட் மொத்தம் சேர்த்து 162 செண்ட் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் எல்லைகள்: வடக்கில்: கயப்பாக்கம் செல்லும் சாலை மற்றும் தார் சாலை, தெற்கில்: சாலை மற்றும் சாலை, கிழக்கில்: கால்வாய் ஏரி மற்றும் கால்வாய், மேற்கில்: பிள்ளையார்கோவில் மற்றும் காலி நிலம் மற்றும் சர்வே எண்.28/2. (அடையாளப்பூர்வ சுவாதீனம்) | ரூ. 1,40,00,000/- ரூ. 14,00,000/- ரூ. 1,00,000/- |

**மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 09-10-2025 (ஒவ்வொன்றும் 3 நிமிடம் வரம்பற்ற நீட்டிப்புடன்) காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை, டேவணித்தொகை சமர்பிக்க கடைசி தேதி: 08-10-2025 அன்று மாலை 5.30 மணி வரை சொத்துகளை பார்வையிடும் தேதி : 06-10-2025 மற்றும் 07-10-2025 (காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை)**

1) விருப்பமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் வலைதளம் https://bankauctions.in & www.cholamandalam.com/ news/auction-notices-யை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விபரங்களுக்கும், உதவிக்கும் மற்றும் மின்னணு ஏலத்துக்கான உத்தேச ஏலதாரர்கள் திரு.முஹம்மத் ரஹீஸ் - 81240 00030 / 6374845616, மின் ஏல பயிற்சிக்கு மட்டும் Ms.4 Closure -ன் ரேகா அவர்களை தொலைபேசி எண் - 8142000062-ல் அணுகவும். மின்னஞ்சல் முகவரி : CholaAuctionLAP@chola.murugappa.com-ல் தொடர்பு கொள்ளலாம்.
2) விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தேவைப்படும் மேல் விபரங்களுக்கும் மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கும்: https://bankauctions.in & www.cholamandalam.com/ news/auction-notices-என்ற வலைதளத்தை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

**இவ்வறிவிப்பு, சட்டபூர்வமான பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9 (1)-ன் கீழான 15 நாட்கள் கெடு அறிவிப்புமாகும்.**

தேதி : 20.09.2025
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

# ஜி.எஸ்.டி. சீரமைப்பு மூலம் நாடகமாட வேண்டிய அவசியமில்லை

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

**மதுரை, செப். 19:** சரக்கு, சேவை வரி (ஜி.எஸ்.டி.) சீரமைப்பு மூலம் நாடகமாட வேண்டிய அவசியம் தங்களுக்கு இல்லை என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மதுரையில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கத்தின் 80-ஆவது ஆண்டு விழாவில் அவர் மேலும் பேசியதாவது:

கடந்த 2017-இல் 5, 12, 18, 28 சதவீதம் என நான்கு விகிதங்களாக இருந்த ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை, தற்போது இரண்டு விகிதங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், சுமார் ரூ. 2 லட்சம் கோடி மதிப்பிலான பயன்களை பொதுமக்கள் பெறுவர்.

ஜி.எஸ்.டி. விதிப்பு நான்கு விகிதங்களாக இருந்ததற்கு பிரதமர் நரேந்திர மோடியோ, அப்போதைய நிதியமைச்சர் அருண் ஜேட்லியோ காரணமல்ல. ஒரு பொருளுக்கு வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு சதவீதங்களில் வரி விதிக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தையும் கூட்டி, அதிலிருந்து சராசரியைக் கணக்கிட்டு, அந்த சராசரி எந்த வரி விகிதத்துக்கு நெருக்கமாக இருந்ததோ அதுவேவரியாக அப்போது நிர்ணயிக்கப்பட்டது. இது, அனைத்து மாநில நிதி அமைச்சர்களின் ஒருமித்த ஆலோசனை, கருத்தால் மட்டுமே முடிவு செய்யப்பட்டது.

பிறகு, இந்த ஜி.எஸ்.டி. விதிப்பில் திருத்தம் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, கரானோ பொது முடக்கத்தால் இந்த முயற்சிகள் தாமதப்பட்டன. இதையடுத்து, வரி விதிப்பில் திருத்தம் மேற்கொள்ள சரியான தருணத்துக்காகக் காத்திருந்தோம். இதுவே சரியான தருணம் எனக் கண்டறியப்பட்டவுடன் ஜி.எஸ்.டி. குறைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஜி.எஸ்.டி.யை தொடக்கத்திலேயே உயர்த்தி வசூலித்துவிட்டு, இப்போது குறைத்து நாடகமாடுவதாக விமர்சிக்கப்படுகிறது. ஜிஎஸ்டி சீரமைப்பு மூலம் நாடகமாட வேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு இல்லை.

2017-இல் ஜி.எஸ்.டி.-யில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 65 லட்சமாக இருந்தது. தற்போது இந்த எண்ணிக்கை 1.51 கோடியாக உயர்ந்துள்ளது. 2017-இல் ஜி.எஸ்.டி. மூலம் ஆண்டுக்கு ரூ. 7.19 லட்சம் கோடியாக இருந்த வரி வருவாய், தற்போது ரூ. 22.08 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

தற்போதைய வரிச் சீர்திருத்தம் மூலம் உற்பத்தி பெருகும், வேலை வாய்ப்பு அதிகமாகும், தனிநபர் வருவாய் உயரும், வரி வருவாய் பெருகும். இந்தச் சுழற்சி திட்டமிட்டப்படி சிறப்பான பயனை அளிக்கும்பட்சத்தில், தற்போது 2 விகிதங்களில் உள்ள ஜி.எஸ்.டி. வரி விதிப்பு முறை, வரும் காலத்தில் ஒரே வரியாக மாற வாய்ப்புள்ளது. ஆனால், இதற்கு கால அவகாசம் தேவைப்படும்.

தொழில் வர்த்தகத் துறையினர் வருகிற 2047-இல் நாட்டின் வளர்ச்சிக்காக சில திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும். வருகிற 2047-இல் வர்த்தகம் முழுமையாக எண்ம முறையிலானதாக மாறலாம். இணையம் வழியாக வாங்கும் பொருளின் சேவையில் குறையிருந்தால் தொடர்புடைய வாடிக்கையாளர், அந்தப் பொருளின் உற்பத்தியாளரைத் தொடர்புகொள்ளும் வகையிலான வர்த்தகச் சங்கிலி அவசியமானது.

மேலும், சிறு, குறு தொழில் நிறுவனங்கள் உள்பட அனைத்து நிறுவனங்களும் உள்நாட்டுத் தேவைக்கு முக்கியவத்துவம் அளிக்க வேண்டியதும் அவசியமானது. இதற்கு வியாபாரிகள் தற்போதே தயாராக வேண்டும். வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்குக்கு வணிகர்கள் தங்களது பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும் என்றார் அவர்.

பாஜக மாநிலப் பொதுச் செயலர் ராம. சீனிவாசன், தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.வி.எஸ்.எஸ். வேல்சங்கர், கௌரவ ஆலோசகர் எஸ்.பி. ஜெயபிரகாசம், கௌரவ செயலர் எஸ். சாய் சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பேசினர்.



மதுரையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்க 80-ஆவது ஆண்டு விழா மலரின் முதல் பிரதியை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட, அதைப் பெற்றுக் கொண்ட இதயம் எண்ணெய் நிறுவன இயக்குநர் ஆர்.வி. முத்து. உடன் சக்தி மசாலா நிறுவன இயக்குநர் சாந்தி துரைசாமி, பி.சி. துரைசாமி, உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.வி.எஸ்.எஸ். வேல்சங்கர், கௌரவ ஆலோசகர் எஸ்.பி. ஜெயபிரகாசம், பாஜக மாநிலப் பொதுச் செயலர் ராம. சீனிவாசன், வணிக வரி ஆலோசகர் ஆர். தியாகராஜன், உணவு விஞ்ஞானி வி. பசுபதி, அணில் மார்க்கெட்டிங் நிறுவன இயக்குநர் என். சுகுமார்.

# ரெளடி வரிச்சியூர் செல்வம் கைது

**திண்டுக்கல், செப். 19:** 2012-ஆம் ஆண்டு நடைபெற்ற 'என்கவுன்ட்டர்' வழக்கில், நீதிமன்ற பிடி ஆணையின்படி ரெளடி வரிச்சியூர் செல்வம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

மதுரை மாவட்டம், சிலைமான் காவல் நிலையத்தில் ரெளடி வரிச்சியூர் செல்வம் உள்ளிட்டோர் மீது கடந்த 2012-ஆம் ஆண்டில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதனிடையே, திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகேயுள்ள தனியார் விடுதியில், வரிச்சியூர் செல்வம், கேரளத்தைச் சேர்ந்த சினோஜ், அஜிஸ், வரிஸ் ஆகியோர் மறைவாக தங்கியிருந்தனர்.

தகவலறிந்த சிலைமான் போலீஸார் 2012, மார்ச் 12-ஆம் தேதி திண்டுக்கல் வந்தபோது ஏற்பட்ட மோதலில், சினோஜ் என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை திண்டுக்கல் 2-ஆவது குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணைக்கு, வரிச்சியூர் செல்வம் தொடர்ச்சியாக ஆஜராகவில்லை. இதையடுத்து, திண்டுக்கல் நீதிமன்றம் அவருக்கு எதிராக பிடி ஆணை பிறப்பித்தது.

இந்நிலையில், திண்டுக்கல் வடக்கு காவல் நிலைய போலீஸார், வத்தலகுண்டு பகுதியில் வரிச்சியூர் செல்வத்தை வெள்ளிக்கிழமை கைது செய்தனர். அவர், விசாரணைக்கு பிறகு திண்டுக்கல் 2-ஆவது நீதித்துறை நடுவர்மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் மதுரை மத்திய சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

# இருப்பில் உள்ள மருந்துகளையும் 5% வரியில் வாங்கலாம்

## மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் தகவல்

**சென்னை, செப். 19:** மருந்துக் கடைகளில் ஏற்கெனவே இருப்பில் உள்ள மருந்துகளையும் 5 சதவீத வரியின்கீழ் குறைந்த விலைக்கு வரும் திங்கள்கிழமை முதல் வாங்கிக் கொள்ளலாம் என்று இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற 56-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஜிஎஸ்டி வரி விதிப்பு வரம்புகள் மாற்றியமைக்கப்பட்டன. அதன்படி மருந்துகளுக்கு அதிகபட்சமாக 5 சதவீத வரியும், உயிர்காக்கும் 33 மருந்துகளுக்கு வரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

அந்த நடைமுறை வரும் திங்கள்கிழமை (செப்.22) முதல் நடைமுறைக்கு வருகிறது. அதன்படி புதிய விலையில் மருந்துகளை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் வகையில் திருத்தப்பட்ட லேபிள்களை அச்சிடுமாறு மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு அரசு சார்பில் அறிவுறுத்தப்பட்டது. அதற்கான தடையில்லா சான்றுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக விளக்கமளித்துள்ள தேசிய மருந்து விலை நிர்ணய அமைப்பு (என்பிபிஏ), ஏற்கெனவே சந்தையில் உள்ள மருந்துகளை திரும்பப் பெற வேண்டியதில்லை எனத் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், செப்டம்பர் 22-க்கு பிறகு உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுக்கும், விநியோகிக்கப்படும் மருந்துகளுக்கும் புதிய ஜிஎஸ்டி வரிவிதிப்பின் கீழ் விலை நிர்ணயிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக இந்திய மருந்து உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஜெ.ஜெயசீலன் கூறியதாவது:

மக்கள் வாங்கும் அனைத்து மருந்துகளும் தற்போது 5 சதவீத வரிவிதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டன. ஏற்கெனவே விலை அச்சிடப்பட்ட மருந்து அட்டைகளில் மீண்டும் புதிய விலையை ஒட்டுவது என்பது இயலாத காரியம். ஆனால், அந்த மருந்துகளை புதிய வரிவிதிப்பின் படி குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க முடியும்.

அதனை எவ்வாறு செயல்படுத்துவது, ஏற்கெனவே உள்ள வரி நடைமுறையில் கொள்முதல் செய்த மருந்துகளை குறைந்த விலையில் விற்றால் அதனால் ஏற்படும் இழப்பை எவ்வாறு ஈடுகட்டுவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. மக்களுக்கு வரும் திங்கள்கிழமை முதல் வரிச் சலுகை பலன்கள் கிடைப்பதில் எந்தத் தடையும் இருக்காது. இருப்பில் உள்ள மருந்துகளை வாங்கினாலும், அதனை 5 சதவீத வரியின் கீழ் வழங்குமாறு வாடிக்கையாளர்கள் உரிமையுடன் கேட்கலாம்.

அதனால், ஏற்படும் இழப்பை, மருந்தக உரிமையாளர்களும், மருந்து விநியோகஸ்தர்களும் ஜிஎஸ்டி வரி தாக்கல் செய்யும் போது ஈடு செய்து கொள்ளலாம். அடுத்த மூன்று மாதங்களுக்குள் புதிய விலை அச்சிடப்பட்ட மருந்துகள் அனைத்து பகுதிகளிலும் சென்றடைந்துவிடும். அதன் பின்னர் இதில் குழப்பம் ஏற்படாது என்றார் அவர்.

# ரேபிஸ் தடுப்பு சிகிச்சை: மருத்துவர்களுக்கு பயிற்சியளிக்க என்எம்சி உத்தரவு

**சென்னை, செப். 19:** ரேபிஸ் தடுப்பு சிகிச்சைகள் குறித்து அனைத்து மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிக்குமாறு மருத்துவக் கல்லூரி நிர்வாகங்களுக்கு, தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக என்எம்சி செயலர் டாக்டர் ராகவ் லங்கர் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

வரும் 2030-க்குள் ரேபிஸ் தொற்றை முழுமையாக ஒழிப்பதற்கான தேசிய திட்டத்தை மத்திய சுகாதார அமைச்சகமும், கால்நடை அமைச்சகமும் ஒருங்கிணைந்து முன்னெடுத்துள்ளன. அதைச் சாத்தியமாக்குவதற்கு மருத்துவக் கல்லூரிகளின் பங்களிப்பு முக்கியமானது. அதன்படி, விலங்கு கடிக்கு அளிக்க வேண்டிய சிகிச்சைகள் குறித்து மருத்துவ அலுவலர்கள், இளநிலை உறைவிட மருத்துவர்கள், முதுநிலை உறைவிட மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

தேசிய வழிகாட்டுதல்களின்படி, நோய்த் தடுப்பு மற்றும் மருத்துவக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் அவர்களுக்கு விளக்கமளித்தல் வேண்டும்.

மேலும், போதிய எண்ணிக்கையில் ரேபிஸ் தடுப்பூசிகள், ரேபிஸ் எதிர்ப்பாற்றல் தடுப்பூசிகள் இருப்பதை உறுதி செய்தல் அவசியம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு விலங்குக் கடி பாதிப்புகளுக்காக சிகிச்சைக்கு வருவோரின் விவரங்கள் அடங்கிய பதிவேட்டை பராமரிக்க வேண்டும்.

அது தொடர்பான தரவுகளை ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளத்தில் (ஐஹெச்ஐபி) பதிவேற்றுவதும் கட்டாயம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அதைச் சார்ந்த மருத்துவமனைகளில் செயல்படும் புறநோயாளிகள் பிரிவிலும், பிற முக்கிய இடங்களிலும் ரேபிஸ் தடுப்பு விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் III, சென்னை**
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், ஹாடோஸ் சாலை, சாஸ்திரி பவன், நுங்கம்பாக்கம், சென்னை - 600006.
**DRC எண்.85/2025**
யூனியன் பேங்க் ஆப் இந்தியா, கீழ்பாக்கம் கிளை, (முன்னர் கார்ப்பரேசன் வங்கி) ...சான்றிதழ் வைத்திருப்பவர்
-எதிர்-
திரு. R.விவேகானந்தன் & 2 பிறநபர்கள் ...சான்றிதழ் கடன்தாரர்கள்
**கோரிக்கை அறிவிப்பு**
வருமான வரிச்சட்டம் 1961ன் இரண்டாவது அட்டவணையின் விதி 2 மற்றும் (அவ்வப்போது திருத்தப்பட்டதன்படி) கடன்கள் மீட்பு மற்றும் திவால் நிலை சட்டம் 1993ன் 25 முதல் 28 வரை பிரிவுகளின் கீழ் அறிவிப்பு
பெறுநர்:
(1) **திரு.R.விவேகானந்தன்**, த/பெ.திரு.R.ராமன், B-30 &31, கிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ், ஆபீசர் காலனி, முகப்பேர், சென்னை-600 050 மற்றும் **திரு.R.விவேகானந்தன்**, த/பெ.திரு.R.ராமன், பிளாட் எண்.AG-1, தரை தளம், மனை எண். 1, சத்தியவதி நகர், பாடி, சென்னை-600 050.
(2) **திரு.R.குப்புராஜ்**, த/பெ.திரு.R.ராமன், B-30 &31, கிருஷ்ணா அபார்ட்மெண்ட்ஸ், ஆபீசர் காலனி, முகப்பேர், சென்னை-600 050 மற்றும் திரு.ஆர்.குப்புராஜ், த/பெ.திரு.R. ராமன், பிளாட் எண்.AG-1, தரை தளம், மனை எண். 1, சத்தியவதி நகர், பாடி, சென்னை-600 050.
(3) **திரு.K.ஞானகிராமன்**, த/பெ.திரு.கிருஷ்ணமூர்த்தி, எண்.36, செல்வம் நகர், R.C.என்கிளேவ், மாதவரம், சென்னை-600 110.
1) கடன்கள் மீட்பு மற்றும் திவால் நிலை சட்டம் 1993 (அவ்வப்போது திருத்தப்பட்டபடி) பிரிவு 19ன் துணைப்பிரிவு 7&22ன் கீழ் **30/06/2005** தேதியிட்ட **OA எண்.74/2019** உத்தரவுகளின் அடிப்படையில் மாண்புமிகு தலைமை அலுவலர் கடன்கள் மீட்பு தீர்ப்பாயம்-3, சென்னை அவர்கள், உங்களிடமிருந்து நிலுவை / வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகையான **ரூ.10,87,763/- (ரூபாய் பத்து இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எழுநூற்று அறுபத்து மூன்று மட்டும்)** மேலும் மொத்த தொகையும் செலுத்தும் தேதி வரையிலான **14.05.2018** முதல் ஆண்டிற்கு **14%** மாதாந்திர அடிப்படையிலான எதிர்கால வட்டி, இதர கட்டணங்கள், DRC விதிகளின் படி தங்களிடமிருந்து மீட்கப்பட வேண்டிய கட்டணங்களை குறிப்பிட்டு **04/08/2025** தேதியிட்ட **DRC எண்.85/2025** மீட்பு சான்றிதழ் வழங்கியுள்ளார்.
2) மேற்கூறிய தொகையை இந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சான்றிதழ் வைத்திருப்பவர் வங்கிக்கு செலுத்துமாறு இதன் மூலம் தாங்கள் அறிவுறுத்தப்படுகிறீர்கள், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
3) சான்றிதழ் கடன்தாரர் எண்.1 முதல் 3 வரை-க்கு கோரிக்கை அறிவிப்பினை அனுப்பப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டது.
4) எனவே **24/10/2025** அன்று காலை **11.30** மணிக்கு தாங்கள் ஆஜராகுவதற்காக மாற்று சேவையின் மூலம் இச்சேவை நிறைவு பெற, கோரிக்கை அறிவிப்பினை ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்தித்தாளில் ஒரு நாள் பதிப்பில் பிரசுரிக்கும்படி தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது.
18/09/2025 அன்று தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் எனது கையொப்பத்துடன் வழங்கப்பட்டது.
(P.பிரேம்குமார்) கடன் மீட்பு அதிகாரி



**விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்**
பிரிவேர்க்கை IV [பார்க்க விதி 8 (1)]
**சுவாதீன அறிவிப்பு** (அசையாச் சொத்துக்களானது)



**SBI பாரத ஸ்டேட் வங்கி**
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II
எண்.44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in கிளை தொடர்பு எண் : 9498652620
அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திருமதி. மீனாகுமாரி.P - கைபேசி 9790960729
தொடர்புக்கு : நகர வழக்கு அலுவலர் பெயர்: திருமதி.M சத்தியவாணிமுத்து, உதவி மேலாளர் கைபேசி : 9884474857
**அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)**
2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. …
வ.எண்.1: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு. V.கோவிந்தராஜ், எண்.29/26, 3B, சுபம் அப்பார்ட்மெண்ட்ஸ், பாகீர்த்தியம்மன் தெரு, தி.நகர், சென்னை-600017, அலுவலக முகவரி: Megawin Leather India Pvt Ltd, எண்.1/2, அண்ணாச்சி கட்டிடம், முதல் தளம், சௌந்தரராஜன் தெரு, தி.நகர், சென்னை-600017. …
நிலுவைத் தொகை:15.09.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.36,29,825/- (ரூபாய் முப்பத்து ஆறு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். …
சுவாதீன நிலை: மெய்நிலை (Physical)
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 17,43,000/- | டேவணித் தொகை ₹ 1,74,300/- | ஏல உயர்வுத் தொகை ₹ 25,000/-
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 25.09.2025 - நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
வ.எண்.2: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு. மரியா அந்தோணி ராஜா, த/பெ. திரு. K. இராமசாமி, … சொத்தின் முகவரி: ஃப்ளாட் எண்.F-1, பிளாக் எண்.2, மனை எண்.51, சேக்கிழார் நகர், ஜகநாதபுரம், குன்றத்தூர், சென்னை - 600 069.
நிலுவைத் தொகை:15.09.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.58,65,141/- (ரூபாய் ஐம்பத்து எட்டு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நூற்று நாற்பத்தொன்று மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். …
சுவாதீன நிலை: ஆக்கப்பூர்வ (Constructive)
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 38,00,000/- | டேவணித் தொகை ₹ 3,80,000/- | ஏல உயர்வுத் தொகை ₹ 50,000/-
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 03.10.2025 - நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண். 1 & 2: **08.10.2025** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தாபப்படும்).
வ.எண்.3: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு.S.கோபால் த/பெ. திரு. ஸ்ரீனிவாசன், … சொத்தின் முகவரி: ஃபிளாட் எண்.G-1, தெற்கு முகம், தரைத்தளம், மனை எண். 160, அருள் நகர், கூடுவாஞ்சேரி கிராமம், சென்னை 603202.
நிலுவைத் தொகை:15.09.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.64,52,481/- …
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 25,20,000/- | டேவணித் தொகை ₹ 2,52,000/- | ஏல உயர்வுத் தொகை ₹ 25,000/-
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 25.09.2025 - நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண். 3: **09.10.2025**
தேதி: 15.09.2025, இடம்: சென்னை — அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB - II, சென்னை



**கனரா வங்கி** — **மண்டல அலுவலகம் சென்னை தாம்பரம்**
2-13, காமராஜர் தெரு, தாம்பரம் மேற்கு, சென்னை-600045 தொலைபேசி: 044- 2226 1462 மின்னஞ்சல்-recoveryrokpm@canarabank.com
**மின் ஏல விற்பனை அறிவிப்பு**
கடனீட்டு சொத்துக்களை பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI Act 2002) விதிகளின் கீழ் விதி 8(6)இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல். …

**1. கல்பாக்கம் - 044 - 2748 7712 / 94440 51440 / 94447 21440**

1. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: I. R. ரேவதி, க/பெ. K. ரவி (லேட்), எண் 213, W3, இந்திரா காந்தி நகர், … அனுபுரம் - 603127. …
நிலுவைத் தொகை: **17.09.2025** தேதிப்படி ரூ. **23,76,799.98** மேலும் **18.09.2025** தேதி முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
ரிசர்வ் விலை : ரூ. 50,00,000/- | டேவணித்தொகை : ரூ. 5,00,000/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ. 20,000/-

2. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி : 1) திரு. சங்கர் A. த/பெ. ஆதி (கடன்தாரர்), 100, … கல்பாக்கம்-603102. 2) திரு. ஏகலைவன் G த/பெ. கணேசன் (ஜாமீன்தாரர்), … கல்பாக்கம்-603102.
நிலுவைத் தொகை: **18.09.2025** தேதிப்படி ரூ. **37,95,705.98** மேலும் **19.09.2025** தேதி முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்
அசையா சொத்து விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் : உரிமையாளரின் பெயர் சங்கர் த/பெ. ஆதி

| சர்வே எண் | பரப்பளவு ச. அடி | சொத்து : வகை : வீடு - | எல்லைகள் |
|---|---|---|---|
| 1. பழைய ச.எண். 322/2 புதிய ச.எண். 443/6 | 545 | செங்கல்பட்டு பதிவு மாவட்டம் திருக்கழுக்குன்றம் சார்பதிவு மாவட்டத்தில் உள்ள 888 சதுர அடி RCC மேற்கூரையிடப்பட்ட வீட்டு கட்டிடம் மற்றும் 270 சதுர அடி போர்ட்டிகோ தரைதளத்தில் 590 சதுர அடி ACC தகடுகளால் மேற்கூரையிடப்பட்ட தரைதள கட்டிடம் முதல் தளத்தில் கட்டிடம் ஒரு போர்வெல், 1 HP மின்சார மோட்டார் மற்றும் அதன் மின் இணைப்பு எண் 511-066-221 மற்றும் அதன் வைப்புத்தொகை, மற்றும் வீட்டு வரி எண். 87 மேற்கூரையிடப்பட்ட பழைய கட்டிடம் மற்றும் தரைதளத்தில் கட்டப்படவுள்ள கட்டிடம் அதன் மின் இணைப்பு எண் 09-511-088-221 கொண்ட கட்டிடத்துடன் கூடிய நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். | வடக்கு : முனியன் நிலம், தெற்கு : சிமெண்ட் சாலை, மேற்கு : கஜேந்திரன் வீடு மற்றும் மனை, கிழக்கு : ஆதி வீடு மற்றும் மனை |
| 2. பழைய ச.எண். 322/2 புதிய ச.எண். 443/10 | 785 | | வடக்கு : சிமெண்ட் சாலை, தெற்கு : காரை வீடு மற்றும் மனை, மேற்கு : ஆதி காலி மனை, கிழக்கு : முனியன் வீடு மற்றும் மனை & காரை வீடு மற்றும் மனை, |
| 3. பழைய ச.எண். 322/2 புதிய ச.எண். 443/9 | 632 | | வடக்கு : சிமெண்ட் சாலை, தெற்கு : காரை காலி மனை, மேற்கு : ரத்தினம் காலி மனை, கிழக்கு : ஆதி காலி மனை |
| 4. பழைய ச.எண். 322/2 புதிய ச.எண். 443/1 ச.எண். 443/16 | 8284 | | வடக்கு : கன்னியப்பன் நிலம், தெற்கு : சிமெண்ட் சாலை, மேற்கு : ஆதி மனை, கிழக்கு : கிருஷ்ணன் நிலம் |

ரிசர்வ் விலை : ரூ. 18,27,000/- | டேவணித்தொகை : ரூ. 1,82,700/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ. 10,000/-

**2. பெருங்குடி - 94447 22617 / 044-2496 1426**

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: 1) திரு. R. வெங்கடேசன் … (கடன்தாரர்), எண்.858, LIG-I, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனி, சித்தாலப்பாக்கம், சென்னை – 600073. … 2) திரு.மகேஷ் V … (ஜாமீன்தாரர்), எண்.24, வடக்கு மடா தெரு, திருவான்மியூர், சென்னை – 600041, 3) திருமதி.V.உஷா, … (ஜாமீன்தாரர்), எண்.858, LIG-I, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனி, சித்தாலப்பாக்கம், சென்னை – 600073 .
நிலுவைத் தொகை: **12.09.2025** தேதிப்படி ரூ. **85,64,688.12** மேலும் **13.09.2025** தேதி முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
அசையா சொத்து விவரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: அடுக்குமாடி குடியிருப்பு : காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, சித்தாலப்பாக்கம் கிராமம் சர்வே எண்.5/1 பகுதி மனை எண்.858, கதவு எண்.3/262, LIG-I, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனி, சித்தாலப்பாக்கம், சென்னை-600073 உள்ள 60.00 சதுர மீட்டர் (646 சதுர அடி) கட்டிடம் மற்றும் நிலம் அதன் பகுதிகளும் … அதன் எல்லைகள் : வடக்கு : மனை எண்.857, தெற்கு : மனை எண்.859, கிழக்கு : 4.50 மீட்டர் சாலை, மேற்கு : மனை எண்.832 மற்றும் 833.
ரிசர்வ் விலை : ரூ. 46,60,000/- | டேவணித்தொகை : ரூ. 4,66,000/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ. 20,000/-

**3. ஊரப்பாக்கம் கிளை - தொலைபேசி : 044-2746 6055 / 94440 33751**

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: 1) திரு. ஸ்ரீனிவாசன் S த/பெ. சண்முகம் (கடன்தாரர்) மற்றும் 2) திருமதி. S. சங்கரி … (இணை கடன்தாரர்), … சென்னை-600 012. தற்போதைய முகவரி : திரு. ஸ்ரீனிவாசன் S … செங்கல்பட்டு மாவட்டம்-603 202.
நிலுவைத் தொகை: **18.09.2025** தேதிப்படி ரூ. **31,41,973.29** மேலும் **19.09.2025** தேதி முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
… ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, நீலமங்கலம் கிராமம், … S. எண் 43/3, பட்டா எண்கள் 1069, 1070, DTCP அங்கீகார எண். 155/99ன் மனை எண். 89 (கிழக்கு பகுதி) பிளாட் எண்: G1, தரை தளம், சுபாச்சந்திர போஸ் தெரு, ஸ்ரீ பாலாஜி அவென்யூ, 2ல் உள்ள 2000 சதுர அடி நிலத்தில் 303 சதுர அடி … எல்லைகள்: வடக்கு : மனை எண். 88, தெற்கு : 24 அடி அகல சாலை, கிழக்கு : மனை எண். 78 மற்றும் மேற்கு : மனை எண்.89 மேற்கு பகுதி, இச்சொத்து கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.
ரிசர்வ் விலை : ரூ. 18,20,000/- | டேவணித்தொகை : ரூ. 1,82,000/- | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ. 10,000/-

மின் ஏல நாள் மற்றும் நேரம் : **09.10.2025** , காலை 11:30 மணி முதல் 12:30 மணி வரை (கணக்கில்லா 5 நிமிட கால நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை)
டேவணித் தொகை 08.10.2025 மாலை 4.00 மணிக்குள்ளோ அதற்கு முன்னரோ செலுத்தப்பட வேண்டும்
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்டுள்ள "இ-ஏலம்" என்ற இணைப்பைப் பார்க்கவும் அல்லது அலுவலகத்தில் வ.எண்.1 : கிளை மேலாளர், கல்பாக்கம் கிளை, கனரா வங்கி, (கைபேசி எண் :9444051440, 9444721440, 044-27487712/ 9445459811) வ.எண்.2 : கிளை மேலாளர், கனரா வங்கி, பெருங்குடி கிளை (தொ. எண்: 9444722617/044-24961426/9445459811 வ.எண். 3 : மூத்த கிளை மேலாளர், கனரா வங்கி, ஊரப்பாக்கம் கிளை, கனரா வங்கி, (தொ. எண்: 044-27466055 / 94440 33751 / 9445459811), மின் ஏலத்தின் போர்டல்:https://baanknet.com பார்க்கவும்.
தேதி : 19.09.2025; இடம் : சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கனரா வங்கி

# தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

சனிக்கிழமை 20-9-2025
விசுவாவசு புரட்டாசி 4 ஹிஜ்ரி 1447 ரபீயுல் அவ்வல் 27


## காயம் ஆறிவிடவில்லை!

மணிப்பூர் மாநிலத்துக்கு இன்னும் ஏன் செல்லாமல் தவிர்க்கிறார் என்கிற கேள்விக்கு விடையளிக்கும் விதத்தில் அமைந்தது பிரதமர் நரேந்திர மோடியின் கடந்த வார மணிப்பூர் பயணம். கலவர பூமியாக இருந்த அந்த எல்லையோர மாநிலத்துக்குச் செல்லாமல் பிரதமர் தவிர்த்ததற்கு நிச்சயமாக வெளியில் சொல்ல முடியாத ஏதாவது காரணம் இருந்திருக்கலாம்; நமக்குத் தெரியாது.

குகி பழங்குடியினர் பெரும்பான்மையாக வாழும் சுராசந்த்பூரிலும், மைதேயி சமூகத்தினர் அதிகம் வாழும் மணிப்பூர் தலைநகர் இம்பாலிலும் பிரதமர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது இரண்டு தரப்பினர் இடையில் தனக்கு எந்தவித பாரபட்சமோ, வேறுபாடோ இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியது. இரண்டு இடங்களிலும் நிவாரண முகாம்களுக்கு விஜயம் செய்து, அங்கே இருக்கும் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தது, காயம்பட்ட நெஞ்சங்களுக்கு மிகப் பெரிய ஆறுதலாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சுராசந்த்பூரில் ரூ.7,300 கோடியில் 14 வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டங்களும், இம்பாலில் ரூ.1,200 கோடிக்கான 17 திட்டங்களும் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஓரளவுக்கு அமைதியை ஏற்படுத்திய பிறகு, பிரதமர் நேரில் சென்று பார்வையிட்டதேகூட தீர்வுக்கான தொடக்கம் என்றுதான் சொல்ல வேண்டும்.

2023 மே மாதம் 3-ஆம் தேதி மணிப்பூரில் கலவரம் தொடங்கியது. மணிப்பூர் மாநிலத்தின் பெரும்பான்மை சமூகத்தினரான மைதேயிகள் தங்களைப் பட்டியல் இனத்தில் இணைக்க வேண்டும் என்று முன்வைத்த கோரிக்கையை மணிப்பூர் உயர்நீதிமன்றம் அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியது போராட்டம் வெடிக்கக் காரணமாக அமைந்தது.

தொடக்கத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வன்முறை சற்று அடங்கியது. அவ்வப்போது 'பஃபர் ஜோன்' எனப்படும் பொதுப் பகுதியில் கைகலப்பும், தாக்குதலும் நடந்தாலும் அமைதி நிலை நாட்டப்பட்டது. கடந்த நவம்பர் மாதம் ஜிர்பாம் மாவட்டத்திலுள்ள நிவாரண முகாமில் இருந்து சில பெண்களும், குழந்தைகளும் கடத்திச் செல்லப்பட்டு, அவர்களில் சிலருடைய உடல்கள் ஆற்றில் மிதந்தபோது, மீண்டும் கலவரம் காட்டுத்தீயாகப் பரவியது.

இம்பால் பள்ளத்தாக்கும் அதைச் சுற்றிலும் மலைகளும் கொண்ட பகுதி மணிப்பூர். பள்ளத்தாக்கில் மைதேயி இனத்தவரும், சுற்றிலும் உள்ள மலைப் பகுதிகளில் குகி ஜோரோ உள்ளிட்ட ஆதிவாசியினரும் வசிக்கின்றனர். மாநிலத்தில் 10% மட்டுமே உள்ள சமவெளிப் பகுதி என்றாலும், அந்த மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் 65% எண்ணிக்கையுள்ள மைதேயி இனத்தவர்கள் அங்கே வசிக்கிறார்கள். ஏனைய 90% மலைப் பகுதிகளில் ஆதிவாசிகளான 35% குகி ஜோரோ சமூகத்தினர் வசிக்கிறார்கள்.

மக்களாட்சி என்பது எண்ணிக்கை அடிப்படையிலானது என்பதால் அதிகாரத்திலும், உயர் அரசுப் பதவிகளிலும் பெரும்பான்மை மைதேயியினர்தான் இருக்கிறார்கள். குகி உள்ளிட்ட ஆதிவாசிகளில் பெரும்பாலானோர் மதமாற்றம் காரணமாக கிறிஸ்தவ மதத்துக்கு மாறியவர்கள். அது மட்டுமல்லாமல், மியான்மர் எல்லையை ஒட்டிய மாநிலம் என்பதால் சர்வ சாதாரணமாக எல்லை கடந்து பயணிப்பதும், தங்களது உறவினர்களுடன் தொடர்பில் இருப்பதும் தடையின்றித் தொடர்கிறது.

மணிப்பூர் மலைப் பகுதியிலும், அதனுடன் இணைந்த மியான்மர் மலைப் பகுதியிலும் கஞ்சா உள்ளிட்டவை பயிரிடப்படுவதும், அவை கடத்தப்படுவதும் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்திருக்கின்றன. மத்திய அரசு எல்லையில் கட்டுப்பாடுகளை விதித்துப் பாதுகாப்பை அதிகரிக்க முற்பட்டதும்கூட கலவரம் தொடங்குவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த மாதத் தொடக்கத்தில், மத்திய, மாநில அரசுகளுக்கும் குகி உள்ளிட்ட ஆதிவாசி சமூக அமைப்புகளுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அமைதி தொடர வேண்டும் என்பதும், அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு மணிப்பூரின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது என்றும் முடிவு எட்டப்பட்டிருக்கிறது. தாங்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதியை யூனியன் பிரதேசமாகவோ அல்லது தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய பகுதியாகவோ அறிவிக்க வேண்டும் என்பதுதான் குகி ஜோரோ இனத்தவரின் கோரிக்கை.

அவர்களது கோரிக்கையை மைதேயிகள் ஒப்புக் கொள்வார்களா என்பது சந்தேகம்தான். சுராசந்த்பூரில் பிரதமரைச் சந்தித்த ஆதிவாசிக் குழுக்கள், தனி சட்டப்பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசக் கோரிக்கையை முன்வைத்தனர். மணிப்பூர் சட்டப்பேரவையின் உறுப்பினர்களாக உள்ள 10 குகி ஜோரோ பிரிவினில் ஏழு பேர் பாஜகவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போதும்கூட குகிக்கள் மணிப்பூர் தலைநகர் இம்பாலுக்கு வேலைக்காகவோ, கல்விக்காகவோ, மருத்துவத்துக்காகவோ போவதற்குப் பயப்படுகிறார்கள். தேசிய நெடுஞ்சாலை திறக்கப்பட்டும்கூட போக்குவரத்து முழுமையாக நடைபெறுவதில்லை.

இதுவரையில் 270-க்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 60,000 பேர் வீடுகளை இழந்து மணிப்பூரின் நிவாரண முகாம்களில் இரண்டரை ஆண்டுகளாகத் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

பேரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு ஓரளவுக்கு அமைதி திரும்பியிருந்தது. ஆனால், நிரந்தர அமைதி திரும்பிவிட்டதாகக் கூறிவிட முடியவில்லை. அவ்வப்போது சிறிய அளவில் கலவரங்கள் வெடிக்கின்றன.

**பிரதமரின் விஜயம் புண்ணுக்குத் தடவப்பட்டிருக்கும் மருந்து; காயம் ஆற நாளாகலாம்; தீர்வு எட்டப்படும் வரை அமைதி குலையாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்!**

**தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.**
காலந்தாழ்த்திச் செய்யத் தக்கவற்றைக் காலந் தாழ்ந்தே செய்ய வேண்டும்; காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்ய காலந்தாழ்த்தக் கூடாது.
**திருக்குறள் (எண் 672) அதிகாரம்: *வினைசெயல்வகை***

# இயந்திரங்களால் ஆனது உலகு!



முனைவர் பவித்ரா நந்தகுமார்

இன்றைய உலகம் இயந்திரங்களால் ஆனது. பெண்கள் செய்த கடினமான வீட்டு வேலைகள் பலவும் பல்வேறு நவீன இயந்திரங்களால் இன்று மிகச் சுலபமாகி விட்டன. அம்மி அரைப்பதிலிருந்தும் உரலில் இட்லிக்கு மாவு அரைப்பதிலிருந்தும் பெண்கள் பெரிய விடுதலையை எப்போதோ அடைந்தாகிவிட்டது. வீட்டைச் சுத்தமாக துடைத்து எடுக்க, பாத்திரங்களைக் கழுவி காயவைத்துக் கொடுக்கக்கூட இயந்திரங்கள் வந்துவிட்டன. பொத்தானை அழுத்தினால்போதும், கூடை நிறைய துணியை துவைத்துத் தள்ளி விடுகிறது. காபி போட்டு எடுக்க, தோசை வார்க்க, சப்பாத்தி சுட என எல்லாவற்றுக்கும் நவீன சாதனங்கள் வந்துவிட்டன.

எல்லாத் துறைகளிலும் இயந்திரங்களால் ஏற்பட்ட மறுமலர்ச்சிபோல்தான் சமையலறையிலும் இது பார்க்கப்பட்டது. பெண்கள் இவ்வரவுகளால் அடைந்த நன்மைகள் ஏராளம் ஏராளம். சமையலறை வேலைகளின் சிரமங்கள் குறைவதால், பெண்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் இது உதவுகிறது. வீடு, அலுவலகம் என மாறி மாறி உழன்ற பெண்களுக்கு இதுபோன்ற கண்டுபிடிப்புகள் மிகப் பெரிய வரப்பிரசாதங்கள் என்பதை மறுப்பதற்கு இல்லை.

சமையல் இயந்திரங்களைத் தாண்டி மருத்துவத் துறையில் வெளிவர இருக்கும் ஒரு புதிய கண்டுபிடிப்பு பெண்கள் மத்தியில் பேசுபொருளாகி இருக்கிறது. பெண்கள் மட்டுமல்லாது அனைவரின் புருவத்தையும் உயரச் செய்திருப்பது சமீபத்திய குழந்தை பெற்றெடுக்கும் ரோபோக்கள்தான். குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத பெண்களுக்கு இதுவரை வாடகைத்தாய் முறை ஒரு வரமாக இருந்த நிலையில், அதற்கு மாற்றாக செயற்கை கருப்பை சுமக்கும் ரோபோக்கள் சலசலக்கத் தொடங்கிவிட்டன.

ஆம், கர்ப்பம் தரித்து பத்து மாதங்கள் சுமந்து குழந்தை பெற்றெடுக்கும் ரோபோக்களை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இது அனைவரும் அறிந்ததே. இந்த வகை ரோபோக்கள் நவீன மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் 'இன்குபேட்டர்' சார்ந்த வடிவமைப்பு இல்லை. மாறாக, கருத்தரித்தல்முதல் 10 மாதங்கள் கழித்து பிரசவித்தல் வரையான அனைத்துச் செயல்முறைகளும் ரோபோவின் கருப்பையில் நடைபெறும். இந்த கர்ப்ப ரோபோக்களை மனித உருவ ரோபோக்களாக, அதாவது பெண் போலவே சீன விஞ்ஞானிகள் உருவாக்கி வருவதாக தகவல்.

'நான் யாங்' தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜாங் கெஃபெங் தலைமையிலான குழு உலகின் முதல் கர்ப்ப ரோபோக்களை உருவாக்கி வருகிறது. இந்த கர்ப்ப ரோபோக்கள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் செயற்கையாக உருவாக்கப்பட்ட கருப்பைகளைக் கொண்டுள்ளன. செயற்கை அம்னோடிக் திரவத்தால் நிரப்பப்பட்ட இந்த செயற்கை கருப்பை, மனித கருப்பைப் போலவே செயல்படுமாம். கருப்பையில் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் குழாய்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

உண்மையில் இந்த செயற்கை கருப்பை என்பது தற்போது புதிதாக வந்த முறை அல்ல என்றும், இது 'பயோ பேக்' மூலம் ஆடுகள் கருவில் இருந்து வளர்க்கப்பட்ட ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. இந்த 'பயோ பேக்' தொழில்நுட்பத்தை மேலும் மேம்படுத்துவதன் மூலம் கர்ப்ப ரோபோக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இந்த தொழில்நுட்பம் பல நெறிமுறைகள் மற்றும் உளவியல் சார்ந்த கேள்விகளை முன்னெடுத்துள்ளன. மனித இனப்பெருக்கத்தை ஓர் இயந்திரத்தின் மூலம் வளரச் செய்வதை எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்ற கேள்வி எழாமல் இல்லை. ஆனால், பெண்கள் மத்தியில் வரவேற்கப்படும் கண்டுபிடிப்பாக உள்ளது.

இந்த தொழில்நுட்பம் வெற்றி பெற்றால் குழந்தை பெற வாய்ப்பு இல்லாத தம்பதிகள் அல்லது உயிரியல் கர்ப்பத்தை விரும்பாதவர்களுக்கு இது உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒருபுறம் இருக்க, மருத்துவ உலகம் இன்னும் பல மைல்கல்களை எட்ட இருக்கிறது. பெண்கள் விரும்பி அணியும் 'டிசைனர் சாரீஸ்'போல் 'டிசைனர் பேபீஸ்'-ஐயும் உருவாக்கிக் கொள்ளலாம் என்ற நிலை வரும் என்கின்றனர். தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை எந்த நிறத்தில் இருக்க வேண்டும், சுருட்டை முடி வேண்டுமா அல்லது கோரை முடி வேண்டுமா, குழந்தையின் உயரம் எந்த அளவில் இருக்க வேண்டும், தாய் தந்தை இருவரில் யாருடைய முக அமைப்பு தேவை என சகலத்தையும் தனிப் பயனாக்கம் (கஸ்டமைஸ்) செய்து கொள்ள இயலுமாம். ஒரு கடைக்குச் சென்று அலசி ஆராய்ந்து நமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதுபோல், ஒரு சிற்பி பார்த்துப் பார்த்து சிலையைச் செதுக்குவதுபோல் குழந்தையை நாமே வடிவமைத்துக் கொள்ள இயலும். நினைக்கவே வியப்பாக இருக்கிறது!

இது மட்டுமல்ல, மருத்துவ உலகம் இன்று எண்ணற்ற புதுமைகளைக் கண்டு வருகிறது. ஒருவருடைய சிறுநீரகம் பழுதாகி விட்டால், இது நாள்வரை பழுதான நோயாளிக்கு பொருந்தக்கூடிய நபரிடம் இருந்து தானம் பெற்றுத் தருவார்கள். இனிவரும் காலங்களில் நம் திசுக்களை வைத்தே அதை வளர்த்து நமக்கான சிறுநீரகத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் என்கிறார்கள். இப்படி பல உறுப்புகளும் புது வடிவம் எடுக்க ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அதன் உச்சகட்ட நிலை மிகப் பெரிய மருத்துவப் புரட்சியில் முடியும் என்கின்றனர். உதாரணமாக ஒருவருடைய கணையத்தில் புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டால், திசு வளர்ப்பு மூலம் 2, 3 கணையங்களை உருவாக்கி அதில் அவ்வகை புற்று நோய் பாதிப்பை ஏற்படுத்தி, ஒரே நேரத்தில் மூன்று விதமான மருந்துகளை தனித்தனியே செலுத்தி, எதில் பூரண குணம் பெறலாம் என்ற தெளிவை மிக மிக குறுகிய கால நேரத்தில் பெறலாம். இதனால், நோயாளியின் உயிர் காக்கப்படும் வாய்ப்புகள் 100 சதவீதம் அதிகமாம். இதுபோன்ற பல முன்னெடுப்புகள் வரிசைகட்டி நின்று கொண்டிருக்கின்றன.

> **செயற்கை நுண்ணறிவுக் காலம் என்பது ஏதோ மாயாஜால உலகில் பயணிப்பதுபோல்தான் உள்ளது. புதுப்புது கண்டுபிடிப்புகள், அறிவியல் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இது கனவா, நினைவா என வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமோ என்னவோ!**

நம்மிடம் யாராவது வேலைகளைத் திணித்துக் கொண்டே இருந்தால், எனக்கு என்ன 10 கைகளா இருக்கு? ரெண்டு தானே இருக்கு!; பொறுமையா செய்றேன் இருங்க எனப் பேசிய பேச்சுகள்கூட இனி மலை ஏறிப் போகலாம். நம்முடைய கைகள் போலவே நமக்கே நமக்கென ஒரு நான்கு கைகளை நாமே உருவாக்கிக் கொள்ளலாம். அது, இறைவன் திருவுருவத்தில் இருப்பதுபோல் நம் உடலுடன் ஒட்டிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்.

நம்முடைய கைகள் போலவே நம் வீட்டு நாற்காலிகளின் மேல் இரண்டு கைகளை கிடத்தி வைக்கலாம். நாம் அவற்றுக்கு என்ன உத்தரவிடுகிறோமோ அதை அவை செய்யும். நாம் தரையில் உட்கார்ந்து குழந்தைக்கு உணவு ஊட்டிக் கொண்டிருக்கும் போது ஒரு செயற்கை கை குழந்தைக்கு கிலுகிலுப்பை ஆட்டிக் காட்டும். மற்றொரு செயற்கை கை குழந்தைக்குத் தேவையான தண்ணீரை சமையலறையில் இருந்து கொண்டுவந்து கொடுக்கும். இப்படி அந்த செயற்கை கைகளுக்கு நம்மால் உத்தரவிட இயலும். அவை நம்முடைய உத்தரவுக்கு கட்டுப்பட்டவை.

'பிரைன் கம்ப்யூட்டர் இன்டர்பேஸ்' எனும் செயல் திறன் மூலம் நம் மூளையில் இருந்து மின் அலைகளாக உருவாகி செயற்கை உறுப்புகளுக்கு உத்தரவு பிறப்பிக்கும். இராவணனுக்கு 10 கைகள் இருந்ததைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு மனிதனுக்கு எத்தனை எத்தனை செயற்கை கைகளை வேண்டுமானாலும் உருவாக்கி நம் இல்லத்தில் நமக்குத் தேவையான இடத்தில் வைத்துக்கொள்ள இயலும். பணியாட்களை நம்பியே இருக்க வேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கும் வீட்டில் தனியாக வசிக்கும் முதியவர்களுக்கும் இது நற்பலன்களை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மனிதனுக்குச் சவாலானது இரு காரணிகள். ஒன்று நோய், மற்றொன்று இறப்பு. இந்த இரண்டிலுமிருந்து மனிதனைப் பாதுகாக்கத்தான் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கண்டுபிடிப்புகள் எல்லாம் மக்களின் நன்மைக்காகவே இருக்க வேண்டும் என அறிவியலாளர்கள் தொடர்ந்து முன்னெடுத்து ஆய்வில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கும் அதே வேளையில், 2050-இல் இறப்பற்ற நிலையை ஏற்படுத்த முழுமூச்சாய் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் 50, 60 ஆண்டுகள் வாழ்ந்து பெற்ற அனுபவத்தை இறப்பின் மூலம் இந்த உலகம் இழந்து விடுகிறது. ஒவ்வொரு தனிமனித வாழ்விலும் இறப்பு என்பது எத்தனை துயர் மிகுந்ததாக இருக்கிறது. அதை இல்லாமல் செய்து விட்டால், மனிதன் எத்தனைக் காலம் விரும்புகிறானோ, அத்தனைக் காலம் அவனை உயிர் வாழ வைக்க இயலும் என்கிறார்கள்.

செயற்கை நுண்ணறிவுக் காலம் என்பது ஏதோ மாயாஜால உலகில் பயணிப்பது போல்தான் உள்ளது. புதுப்புது கண்டுபிடிப்புகள், அறிவியல் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இது கனவா, நினைவா என வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமோ என்னவோ!

இந்த நவீன காலத்தில் ஒருபுறம் போரால் மக்கள் அன்றாடம் கொத்துக் கொத்தாய் மாண்டு கொண்டே இருக்கிறார்கள்; மற்றொருபுறம் மனிதனின் வாழ்நாளை நீட்டிக்க புதுப் புது கோணத்தில் கண்டுபிடிப்புகள் தொடர்கின்றன. இரண்டுமே அதிநவீன கருவிகளின் உருவாக்கத்தில் ஏற்பட்ட, ஏற்படவிருக்கிற விளைவுகள்தான். நகை முரணாக இருக்கிறது!

இனி வரவிருக்கும் வேடிக்கைகளை சற்று பொறுத்திருந்துதான் பார்க்க இயலும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; இதுவரை பல தலைமுறைகளாக மனிதன் வாழ்ந்த வாழ்வை நம்முடைய அடுத்த தலைமுறையினர் அதே போன்றதொரு அலை வரிசையில் வாழப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்!

கட்டுரையாளர்:
**எழுத்தாளர்.**

# இணைய வரன்களில் எச்சரிக்கை!

முனைவர் என்.பத்ரி

நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் திருமணம் முக்கிய நிகழ்வாகும். திருமணம் செய்துகொள்ள சரியான வயது பெண்ணுக்கு 18 என்றும், ஆணுக்கு 21 என்றும் சட்டம் சொல்கிறது. முன்பெல்லாம் பெண்களுக்கு 25 வயதுக்குள் திருமணங்கள் நடைபெற்று விடும். ஆனால், தற்போதெல்லாம் இது 30 வயது முதல் 32 வரையாக அதிகரித்துள்ளது.

திருமணச் சந்தையில் ஆண்கள் பெண்களைவிட அதிகமாக இருப்பது, ஆண்களைவிட பெண்கள் படிப்பிலும், வருமானத்திலும் உயர்நிலையில் இருப்பது, மகளின் வருமானத்தில் வாழ்ந்து பழகிவிட்ட பெற்றோர், குடும்பப் பொறுப்பை எடுத்துக் கொள்ளத் தயங்கும் பெண்கள், ஆணாதிக்க குடும்ப வன்முறைகள், வழிகாட்டுதலில் குறைவுபட்ட பெரியவர்கள், சமூகத்தில் அடிக்கடி நிகழும் விவாகரத்துகள் போன்றவை பெண்களுக்கு திருமணத்தின் மேலான நாட்டத்தைக் குறைத்து வருகின்றன.

மேலும், பணியில் உள்ள பெண்கள் ஓரளவு வாழ்க்கையை அனுபவித்த பிறகு திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார்கள். இது அவர்களுக்கு திருமணம் நடைபெறுவதில் மேலும் காலதாமதத்தை ஏற்படுத்துகிறது. தற்போதைய தனிக் குடும்ப வாழ்க்கை முறையில் உதவிக்கு உறவுகள் எதுவும் இல்லாத நிலையில், இவ்வாறானவர்கள் தனக்கு இணக்கமான துணையைத் தேடிப்பிடிக்க திருமண இணையதளங்களில் உலா வருகிறார்கள். ஆனால், அவற்றில் பதிவிடப்படும் வரன்களின் பின்புலத்தின் நம்பகத்தன்மை தற்போதெல்லாம் கேள்விக்குறியாகி வருகின்றன.

பல ஆண்கள் போலியான சுய விவரங்களை இவ்வாறான திருமண இணையதளங்களில் பகிர்ந்து வரன் தேடும் பெண்களிடமிருந்து பணம் பறிக்கும் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன. மோசடிக் கும்பல்கள் சில போலியான இணையதளங்களை உருவாக்கி அதன் மூலம் பெண்களை ஏமாற்றுகின்றன. எனவே, சரியான வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வது பெண்களுக்கு தற்போது ஒரு சவாலான செயலாக மாறியுள்ளது.

தங்களின் இணையதளத்தில் பதிவு செய்யும் வரன்களைப் பற்றிய முழுமையான விவரத்தை திருமண இணையதளங்கள் வழங்குகின்றன. சரியான துணையைத் தேர்வு செய்வதற்கு இது பெரிய அளவில் உதவியாக உள்ளது. எனினும், ஒரு திருமண இணையதளம் நம்பத் தகுந்ததாக இல்லையென்றால் அங்கு மோசடிக்கான வாய்ப்புகள் பல இருக்கலாம்.

அண்மையில் தெலங்கானாவின் பெத்தப்பள்ளி மாவட்டத்தில் உள்ள என்டிபிசி காவல் நிலையப் பகுதியில் தயாளி உப்பல் என்பவர் வசித்து வந்தார். இவர் தனக்கு மணமகள் தேவை என்னும் விளம்பரத்தை திருமண இணையதளத்தில் பொய்யான சுய விவரங்களுடன் பதிவு செய்துள்ளார். இதற்காக, கடந்த ஆறு ஆண்டுகளாக இவர் மத்திய அரசின் ராணுவம், தேசியப் புலனாய்வு நிறுவனம், ஜம்மு-காஷ்மீர் காவல் துறை, மத்தியக் காவல் படை ஆகிய அமைப்புகளின் போலி அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி உள்ளார். தன்னை ராணுவ அதிகாரி என்றுகூறி மூன்று பெண்களை அவர் திருமணம் செய்துள்ளார். அந்த மூவரில் ஒருவர்தான் உத்தர பிரதேசம் வாரணாசி பகுதியைச் சேர்ந்த சந்தவுலி என்னும் பாதிக்கப்பட்ட பெண். இவர் தங்களது திருமணத்தைப் பதிவு செய்ய தேவையான ஆவணங்களைக் கேட்டபோது, அவரது கணவர் அவற்றைக் காட்டத் தயாராக இல்லை. தவறு எங்கோ நடப்பதை உணர்ந்த அந்தப் பெண், தன் கணவரின் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இந்த வழக்கை தனது நேரடிப் பார்வையில் விசாரணை செய்த தமிழரான வாரணாசியின் துணை காவல் ஆணையர் டி.சரவணன், தயாளி உப்பல் பெண்களை ஏமாற்றும் ஒரு குற்றவாளி என்பதை வெளிச்சத்துக்கு கொண்டுவந்தார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக மோசடியில் ஈடுபட்டு வந்த தயாளி உப்பல் மீது சிதைபூர் காவல் நிலையத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குகள் தற்போது பதிவாகி உள்ளன. குற்றஞ்சாட்டப்பட்ட தயாளி உப்பல் தெலங்கானா, ஆந்திரம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், உத்தர பிரதேசம், தில்லி, பஞ்சாப், உத்தரகண்ட், மேற்கு வங்கம் போன்ற பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 25 பெண்களிடமிருந்து சுமார் ரூ.40 லட்சம்வரை பெற்றுள்ளதாகஒப்புக்கொண்டிருப்பது அதிர்ச்சியைத் தருகிறது.

திருமண இணையதளங்களில் அறிமுகமாகும் நபர்கள் மீது பெண்கள் முழுமையான நம்பிக்கை வைக்கக் கூடாது. அதில் பதிவிடப்படும் விவரங்களை களத்தில் இறங்கி ஆய்வு செய்து உண்மைத் தன்மையை அறிந்து கொண்டு முடிவெடுப்பது நல்லது.

அரசின் இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவும் திருமண இணையதள மோசடிகள் குறித்து தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகிறது. இந்த மோசடிகளைத் தடுக்க, திருமண தகவல் இணையதளங்களை ஒழுங்குபடுத்துவது குறித்து நீதிமன்றங்களும் வலியுறுத்தி வருகின்றன. இத்தகைய சூழலில் இணையதளத்தில் தனக்கான துணையைத் தேடும் பெண்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது முக்கியம்.

முதலில் அவர்கள் இணையதளத்தின் பயனர்கள் வழங்கும், பின்னூட்டங்களை ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் தேர்வு செய்யும் திருமண இணையதளம் பாதுகாப்பானது என்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியம். இந்த மோசடிகளில் இருந்து தப்பிக்க, இணையதளத்தில் அறிமுகமாகும் நபர்களிடம் உடனடியாக நம்பிக்கை வைக்காமல், அவர்களின் பின்னணியைச் சரிபார்த்து எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

மொத்தத்தில் தெரிந்த உறவுகள், நட்புகள் வட்டாரத்தில் வரன்கள் அமைய வாய்ப்புகள் இல்லாத நிலையில் மட்டுமே, திருமண இணைய தளத்தின் உதவியை நாட வேண்டும். ஆயிரம் காலத்துப் பயிர் என்று அழைக்கப்படும் திருமணத்தில் அவசரமும் வேண்டாம்; பின்னர், வாழ்க்கையில் தேவையற்ற அல்லல்களும் வேண்டாம். இதேபோன்று பொய்யான சுயவிவரங்களையும், புகைப்படத்தையும் திருமண இணையதளத்தில் பதிவிடும் பெண்களும் இல்லாமல் இல்லை. எனவே, வாழ்க்கைத் துணையை இணையதளத்தில் தேடும் ஆண்களுக்கும் இந்த எச்சரிக்கை பொருந்தும்!

### முன்பே செய்திருக்கலாமே...

ஒரு நாட்டின் முதன்மை வளமான குழந்தைகளே நாட்டு மக்களின் ஆரோக்கியம். குழந்தை பிறந்து ஓராண்டுக்குள் ஏற்படும் மரண விகிதத்தில் சர்வதேச அளவில் இந்தியா குறைத்து மதிப்பிடப்பட்டது ('சோர்வடைதல் கூடாது...'- ஆசிரியர் உரை, 12.09.25). குழந்தை மரணம் 2013-இல்1000 குழந்தைகளுக்கு 40-ஆக இருந்தது. அது, 2023-இல் 25-ஆக குறைந்திருக்கிறது. இது விஷயத்தில் நமது சுகாதார, குடும்ப நல, சமூக நலக் கட்டமைப்புகளில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதை இது காட்டுகிறது. இதே முயற்சிகளைமுந்தைய நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து எடுத்திருந்தால் இன்றைய சீனாவின் நிலையை நம்மால் எட்டி இருக்க முடியும். இந்தியாவில் 25 என்ற நிலை சீனாவில் வெறும் 4.5 மட்டுமே என்றால், இன்னும் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

**சீ.காந்திமதிநாதன், கோவில்பட்டி.**

### அனைவரும் தெய்விகமானவர்கள்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவின் சிகாகோவில் ஆற்றிய உரை உலக மக்களிடம் ஆன்மிக விழிப்புணர்வைத் தூண்டியது ('உலகுக்கு இந்தியாவின் உத்தரவாதம்!'-கட்டுரை- சுவாமி விமூர்த்தானந்தர், 12.09.25). பிரிவினைவாதம், அளவுக்கு மீறிய மதப்பற்று, மதவெறி மனித இனத்துக்குத் தீங்கு என்பதைச் சுட்டிக்காட்டி, உதவி செய்; பகை வேண்டாம்; சமரசமும் சாந்தமும் தேவை எனக் கூறினார். மக்கள் அனைவரும் தெய்விகமானவர்கள் என்பதை ஆணித்தரமாகக் கூறிய முதல் துறவி சுவாமி விவேகானந்தரே. மக்களுக்கு அன்பும், கருணையும், மன உறுதியும், விவேகமும் தேவை. அதே வேளை செப்டம்பர் 11-ஆம் தேதியை 2001-இல் நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலுடன் தொடர்பு படுத்துவது உகந்ததல்ல.

**கே.அனந்தநாராயணன், கன்னியாகுமரி.**

## அன்புள்ள ஆசிரியருக்கு...
edit.dinamani@gmail.com

### பெறற்கரிய பேறு!

சுவாமி விவேகானந்தர் 1893 செப்டம்பர் 11-இல் நிகழ்த்திய சொற்பொழிவு, அமெரிக்காவின் பெறற்கரிய பேறாகும் ('உலகுக்கு இந்தியாவின் உத்தரவாதம்!'-கட்டுரை-சுவாமி விமூர்த்தானந்தர், 12.09.25). நிம்மதியற்றிருந்த கோடீஸ்வரர் ராக் பெல்லர், சுவாமிஜியின் அறிவுரையால்தான் கொடையாளியாகி நிம்மதியடைந்து மகிழ்வுற்றார். ரோட்டரி, அரிமா சங்கங்களுக்கு வித்திட்டதும் அவரது அறிவுரையே என்பதில் வியப்பொன்றுமில்லை. அவர் போதித்த உதவி செய்; சண்டையிடாதே; ஒன்றுபடுத்து; அழிக்காதே; சமரசமும் சாந்தமும் வேண்டும் என்பதையெல்லாம் மறந்ததால் 2001-இல் அதே செப்டம்பர் 11-ஆம் நாளில் அமெரிக்கா பேரழிவுக்கு உள்ளானது. அவர் உரையாற்றிய நாடுகள் ஆயுதத் தயாரிப்பு, விற்பனையை நிறுத்தும்போதுதான் அவரின் மாபெரும் கனவு மெய்ப்படும்.

**ஆர். தீனதயாளன், காரமடை.**

### அத்தனைக்கும் ஆதாரம்

அன்றைக்கு நம் முன்னோர் மண்ணை பொன் என்றார்கள் என்றால் அது விளைவித்து தரும் பொருள்களை மனதில் கொண்டு தான் ('மண் அல்ல, பொன்!'-ஆசிரியர் உரை, 13.09.25). இன்று அந்த மண்ணையே விற்று பொன்னாக்கிக் கொண்டிருக்கின்றனர். மண் இல்லை என்றால் உண்ண ஏதும் இல்லை என்பது இந்தத் தலைமுறைக்குப் புரியவில்லை. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதன் அனுபவிக்கும் அத்தனைப் பொருள்களுக்கும் ஆதாரம் மண்தான். மண் இன்று வியாபாரப் பொருளாகிவிட்டதால் அதை வைத்து மிகப் பெரிய அரசியல் நடக்கிறது. நாட்டில் ஓடும் பல ஆறுகளும் மண் அள்ளப்பட்டு வறண்டுள்ளதை நம் கண்ணெதிரே பார்க்கிறோம். இயன்ற அளவு மண்ணை மாசுபடுத்தாமல் பாதுகாக்க வேண்டும்.

**தி சேகர், பீர்க்கன்கரணை.**

### பணம்தான் வாழ்க்கையா?

முன்பு வேளாண்மையே உயர்ந்த தொழிலாகவும் எளிமையான வாழ்க்கையே இயல்பானதாகவும் இருந்தது ('மானுடவியலின் மகத்துவம்'- துணைக் கட்டுரை-பெ.சுப்பிரமணியன், 13.09.25). வேளாண்மையை வீழ்த்தி தொழில் துறை அவ்விடத்தைப் பெற்ற போது, கல்வி என்பது வேலைவாய்ப்பு, பொருளாதார உயர்வுக்காக மட்டுமேயானது எனும் எண்ணம் ஏற்பட்டு வலுப்பெறவும் செய்தது. அறிவியல், கணிதம், கணினி அறிவியல், பொறியியல், மருத்துவம் ஆகிய பாடங்கள் முதல் வரிசையில் அமர்த்தப்பட்டு கலைப் பாடப்பிரிவுகள் புறந்தள்ளப்பட்டன. மேல்நிலைக் கல்வியில் மெல்லக் கற்போருக்கான வாய்ப்புகளான கலை, தொழில் பாடப் பிரிவுகள் புறக்கணிப்புக்கு உள்ளாயின. பணமே வாழ்க்கை என்பதாக மக்களின் மனநிலையில் மாற்றம் ஆபத்தான எதிர்காலத்தை முன்னிறுத்துகிறது.

**த.முருகவேள், விழுப்புரம்.**

## தலையீடு வேண்டாமே...

நாட்டில் அத்தியாவசியமான துறை காவல் துறையாகும். காவல் துறை இல்லாவிடில் மக்கள் அமைதியாக வாழ இயலாது ('காவல் துறை எதிர்கொள்ளும் சவால்கள்'-கட்டுரை-பெ.கண்ணப்பன், 13.09.25). தமிழகத்தில் வருவாய்த் துறை, காவல் துறை, பத்திரப் பதிவுத் துறை மற்றும் உள்ளாட்சித் துறையில் அதிகமாக ஊழல் நடைபெறுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. காவல் துறை மாநிலத்தின் முதுகெலும்பு. அந்தத் துறை ஆளும் கட்சியின் தலையீடின்றி தனித்து இயங்க வேண்டும். காவல் துறையின் தலைமை இயக்குநர் நியமனம் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளதில் அரசின் தலையீடு உள்ளதைக் காட்டுகிறது. தமிழக காவல் துறைக்கு நாட்டிலேயே சிறந்த காவல் துறை என்றிருந்த பெயரை மீட்டெடுக்க வேண்டும்.

**தி.ரெ.ராசேந்திரன், திருநாகேச்சரம்.**


# சிறுபான்மையினர் நலத் திட்டங்களை ஆய்வு செய்ய சிறப்புக் குழு: அரசு உத்தரவு

**சென்னை, செப். 19:** சிறுபான்மையினர் நலத் திட்டங்களை ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த சிறப்புக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

இதற்கான உத்தரவை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை செயலர் எ.சரவணவேல் ராஜ் பிறப்பித்துள்ளார்.

அந்த உத்தரவு விவரம்: சிறுபான்மையினர் நலத் திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் தகுதிவாய்ந்த மக்களுக்குச் சென்று சேருவதை உறுதி செய்ய, மாவட்ட அளவிலான ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொண்டு சிறப்புக் குழுவை அமைத்து ஆணையிடுமாறு, சிறுபான்மையினர் நல ஆணையர் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை கவனமாகப் பரிசீலித்து, அதை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு சிறப்புக் குழுவை அமைத்து உத்தரவிடுகிறது. அதன்படி, திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி எம்எல்ஏ. த.இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர் அ.சுபேர்கான், ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் குழுவில் இடம் பெறுவர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 4 அணு உலைகள் கட்டுமானம்: இந்தியா–ரஷியா ஆய்வு

**மாஸ்கோ, செப்.19:** திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 4 அணு உலைகளின் கட்டுமானப் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இந்தியா–ரஷியா ஆய்வு செய்தன.

இதுதொடர்பாக ரஷிய அணு சக்தி கழகமான ரோசடோம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த செப்.15–ஆம் தேதி முதல் 6 நாள்களாக ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் சர்வதேச அணுசக்தி முகமையின் பொது மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டுக்கு இடையே இந்திய குழுவை ரோசடோம் இயக்குநர் அலெக்ஸி லிகாசோவ் சந்தித்துப் பேசினார். அப்போது ராணுவம் அல்லாத பிற பயன்பாட்டுக்கான அணுசக்தி உற்பத்தியில், இந்தியாவுடனான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்தியாவின் வலுவான தொழில் துறை திறன்களை கட்டியெழுப்ப பெரிய மற்றும் சிறிய அளவிலான அணுமின் நிலையத் திட்டங்களை உள்ளூர்மயமாக்குவதற்கு இந்தியாவுடன் பணியாற்ற ரோசடோம் தயாராக உள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 4 அணு உலைகளின் கட்டுமானப் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இருதரப்பும் ஆய்வு செய்தன என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே ரஷியா நிதியுதவியுடன் கூடங்குளத்தில் 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆணையப் பட்டியலில் இருந்து 474 கட்சிகள் நீக்கம்

**புது தில்லி, செப். 19:** தொடர்ந்து 6 ஆண்டுகளாக தேர்தலில் போட்டியிடாதது உள்பட தேர்தல் ஆணைய விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாத 474 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

முன்னதாக, கடந்த ஆகஸ்ட் 9–ஆம் தேதி 334 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் நீக்கம் செய்யப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் இந்த நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் தரப்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 'தொடர்ந்து 6 ஆண்டுகளாக தேர்தலில் போட்டியிடாதது உள்பட தேர்தல் ஆணைய விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாத அரசியல் கட்சிகளை நீக்கம் செய்யும் நடவடிக்கையின் இரண்டாம் கட்டமாக, 474 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த 2 மாதங்களில் மொத்தம் 808 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட நீக்கம் காரணமாக, தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் எண்ணிக்கை 2,520–லிருந்து, 2,046–ஆக குறைந்துள்ளது.

இவை தவிர, அங்கீகரிக்கப்பட்ட 6 தேசிய கட்சிகள் மற்றும் 67 மாநிலக் கட்சிகள் தேர்தல் ஆணைய பதிவுப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் ஆணையத்தில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951–இன் பிரிவு 29ஏ–இன் கீழ் அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் அமைப்புகளுக்கு வரிவிலக்கு உள்பட சில சலுகைகள் மற்றும் முன்னுரிமைகள் கிடைக்கும்.

கடந்த 2019–ஆம் ஆண்டுமுதல் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடாத அரசியல் கட்சிகளைப் பதிவிலிருந்து நீக்கும் நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொண்டது. தேர்தல் ஆணையத்தின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட கட்சிகள், தேர்தலில் அக் கட்சி சார்பில் வேட்பாளரை நிறுத்த முடியாது.

# மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு தனி ஆணையம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, செப். 19:** மாநில நெடுஞ்சாலைத் துறைக்கென அமைக்கப்பட்ட தனி ஆணையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மேலும், சென்னை கிண்டியில் நெடுஞ்சாலைத் துறைக்கென கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு கட்டடத்தையும் அவர் திறந்தார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைத் துறைக்கென தனி ஆணையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் போன்று முடிவுகளை கால தாமதமின்றி எடுக்கும் அதிகாரம் படைத்த அமைப்பாக, மாநில ஆணையம் விளங்கும்.

இந்த அமைப்பானது பொது மற்றும் தனியார் பங்களிப்பு போன்ற பல்வேறு முறைகளில் பணிகளைச் செயல்படுத்தும். தமிழ்நாட்டின் சாலை கட்டமைப்பை உலகத் தரத்தில் மேம்படுத்தும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில நெடுஞ்சாலை ஆணையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார். அதன்பின், அதற்கான இலச்சினையையும் அவர் வெளியிட்டார்.

இந்தப் புதிய ஆணையமானது, மேம்பட்ட தொழில்நுட்பங்கள், உயர்தரக் கட்டுப்பாடுகள், குறிப்பிட்ட காலம் மற்றும் மதிப்பீட்டில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படும். இதன்மூலம், சாலைப் பயனாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதுடன், பொருளாதார வளர்ச்சி, தொழில் துறை மேம்பாடு ஏற்படும்.

**நூற்றாண்டு கட்டடம்:** மாநில நெடுஞ்சாலை ஆணையத் தொடக்கத்துக்கு முன்னதாக, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைத் துறைக்கென கிண்டியில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு கட்டடத்தை முதல்வர் திறந்துவைத்து பார்வையிட்டார்.

இந்த புதிய கட்டடத்தில் மாநில நெடுஞ்சாலை ஆணைய அலுவலகம், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் அலுவலகம், தேசிய நெடுஞ்சாலை அலகின் தலைமைப் பொறியாளர் அலுவலகம், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் ஆகியவை இயங்கும் என்று தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, பொதுப்பணித் துறைக் கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைத் துறை செயலர் ஆர். செல்வராஜ், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய முதன்மைச் செயல் அலுவலர் பூஜா குல்கர்னி, சென்னை– கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் உள்பட பலர் பங்கேற்றனர்.




சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.29 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு கட்டடத்தை வெள்ளிக்கிழமை திறந்து வைத்து இலச்சினையை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அமைச்சர்கள் எ.வ.வேலு, எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மேயர் ஆர்.பிரியா உள்ளிட்டோர்.

# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கைக்கு எதிராக தீர்மானம்

## 18 தமிழ் அமைப்புகள் முடிவு

**புது தில்லி, செப். 19:** தமிழ் மக்களுக்கு எதிராக இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்களைச் செய்த இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60–ஆவது அமர்வில் வரும் செப்டம்பர் 24–ஆம் தேதி 18 தமிழ் அமைப்புகள் தீர்மானம் தாக்கல் செய்ய உள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60–ஆவது அமர்வு ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது. இதில், இலங்கைத் தீவுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்கள் மற்றும் பிற அமைப்புகள் கூட்டாக இணைந்து இந்தத் தீர்மானத்தை முன்வைக்க உள்ளதாக இந்த அமர்வில் பங்கேற்க உள்ள தில்லி தமிழ் வழக்குரைஞர்கள் சங்கப் பிரதிநிதியான வழக்குரைஞர் ராம்சங்கர் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் தமிழர் மன்றம், ஜெர்மன் தமிழர் ஆதரவு மன்றம், கொரியா தமிழ்ச் சங்கம், சுவிஸ் தமிழ் செயல் குழு, தில்லி தமிழ் வழக்குரைஞர் சங்கம், தில்லி தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட 18 தமிழ் அமைப்புகள் சார்பில் இந்தத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட உள்ளது.

தீர்மானத்தில் முன்மொழியப்பட்டுள்ளவை: கடந்த ஏழு தசாப்தங்களாக, தமிழ் மக்களுக்கு எதிராக இனப் படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களை இலங்கை செய்துள்ளது என்பதை மறுக்க முடியாதது. இதனால் 10 லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாக இலங்கை தீவைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தொடர்ச்சியான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 60–ஆவது அமர்வுக்கான வரைவுத் தீர்மானத்தை அறிவிக்க இந்த முன்மொழிவை சமர்ப்பிக்கிறோம். அதன்படி, சர்வதேச குற்றவியல் நீதி வழிமுறைகள் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு விரிவான இழப்பீடுகளை வழங்க வேண்டும்; இந்த மனித உரிமைகள் மீறல் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யும் அரசமைப்புச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்த வேண்டும்.

இலங்கையின் மனித உரிமைகள் மீறலை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும் அல்லது ஒரு தற்காலிக தீர்ப்பாயத்தை நிறுவ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையை நேரடியாகவோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் மூலமாகவோ வலியுறுத்த வேண்டும்.

கூட்டாட்சித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை மேற்பார்வையிட அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், கனடா ஆகிய நாடுகளை உள்ளடக்கி ஓர் உத்தரவாதக் குழுவை நிறுவ வேண்டும் என முன்மொழியப்பட உள்ளது.

# மைசூரு தசரா விழாவை பானு முஷ்தாக் தொடங்கி வைக்கத் தடையில்லை

**பெங்களூரு, செப். 19:** மைசூரு தசரா விழா கர்நாடக அரசு நடத்தும் விழா என்பதால், அந்த விழாவை யார் தொடங்கி வைப்பது என்பதில் பாகுபாடு பார்க்க முடியாது என உச்சநீதிமன்றம் தெரிவித்தது.



மைசூரு தசரா விழாவை தொடங்கி வைப்பதற்காக கன்னட எழுத்தாளர் பானு முஷ்தாக்குக்கு அரசு அழைப்பு விடுத்திருந்ததை எதிர்த்து பாஜக முன்னாள் எம்.பி. பிரதாப் சிம்ஹா தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் இவ்வாறு தெரிவித்தது.

மைசூரில் செப். 22–ஆம் தேதி தொடங்கவிருக்கும் உலகப் புகழ் பெற்ற தசரா திருவிழாவைத் தொடங்கி வைக்க சர்வதேச புக்கர் பரிசு பெற்ற கன்னட எழுத்தாளர் பானு முஷ்தாக்குக்கு கர்நாடக அரசு அழைப்பு விடுத்தது.

இதற்கு எதிராக கர்நாடக உயர்நீதிமன்றத்தில் செப். 6–ஆம் தேதி பாஜக முன்னாள் எம்.பி. பிரதாப் சிம்ஹா உள்பட 4 பேர் பொதுநல மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை கர்நாடக உயர்நீதிமன்றம் செப்.16–ஆம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து பிரதாப் சிம்ஹா, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த மனுவில், 'தசரா திருவிழாவைத்தொடங்கிவைப்பதற்காக சாமுண்டி மலையில் உள்ள சாமுண்டீஸ்வரி கோயிலில் நடத்தப்படும் விழா வெறும் அடையாளத்துக்காக நடத்தப்படுவதல்ல, மாறாக, மதச் சடங்குகளையும் உள்ளடக்கியது.

இந்த விழாவில் குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்படும். சாமுண்டீஸ்வரி அம்மனுக்கு குங்குமம், மஞ்சள், பழங்கள், பூக்கள் படைக்கப்பட்டு பூஜை செய்யப்படும். இதுபோன்ற ஹிந்து மதச் சடங்குகள் ஆகம விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படுகின்றன. இந்தச் சடங்குகளை ஹிந்து அல்லாதவர் செய்யக் கூடாது. இது அரசமைப்புச் சட்டத்தின் விதி 25–இன்கீழ் எங்கள் மத உரிமையை மீறும் செயலாகும்.

எனவே, கர்நாடக உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்வதோடு, தசரா திருவிழாவை எழுத்தாளர் பானு முஷ்தாக் தொடங்கிவைக்க அரசு எடுத்துள்ள முடிவைத் திரும்பப் பெற உத்தரவிட வேண்டும்' எனத் தெரிவித்திருந்தார்.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதி விக்ரம்நாத், நீதிபதி சந்தீப்மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மைசூரு தசரா விழா மாநில அரசு நடத்தும் விழா என்பதால், அதைத் தொடங்கி வைப்பவர்களிடையே அரசு பாகுபாடு பார்க்க முடியாது என்று கருத்து தெரிவித்தனர்.

மேலும், 2017–ஆம் ஆண்டு நடந்த தசரா திருவிழாவை கன்னட இலக்கியவாதி நிசார் அகமது தொடங்கிவைத்தார். அப்போது, அன்றைக்கு அவருடன் மனுதாரர் மேடையைப் பகிர்ந்துகொண்டிருந்தார். இது சரியா? தவறா? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் என்ன இருக்கிறது? என்றும் கேள்வி எழுப்பினர்.

அதைத் தொடர்ந்து மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

**முதல்வர் வரவேற்பு:** உச்சநீதிமன்றத்தின் உத்தரவை வரவேற்ற முதல்வர் சித்தராமையா, தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில், 'உச்சநீதிமன்றத்தின் உத்தரவை வரவேற்கிறேன். தசரா திருவிழாவை மத வரையறைக்குள் கொண்டுவர முடியாது. ஜாதி, மத பேதமில்லாமல் அனைவரும் மகிழ்ச்சியோடு கலந்துகொள்வதுதான் தசரா திருவிழா.

எனினும், சமுதாயத்தைப் பிளவுபடுத்த சிலர் பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த விவகாரத்தில் மாநில அரசின் நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது' என்றார்.

# இருதரப்பு நலன் கருதி சவூதி செயல்படும்

## பாகிஸ்தானுடனான ஒப்பந்தம் குறித்து இந்தியா கருத்து

**புது தில்லி, செப். 19:** பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள சவூதி அரேபியா, இந்தியாவுடனான இருதரப்பு உறவு, நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்படுமென எதிர்பார்ப்பதாக வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

அண்மையில் சவூதி அரேபியாவுக்குச் சென்ற பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், அந்நாட்டு பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகமது பின் சல்மானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டார். அதன்படி, பாகிஸ்தான்–சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளில் எந்த நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், அது மற்றொரு நாட்டின் மீதும் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு எதிராக சவூதி அரேபியாவை தங்களுடன் கூட்டு சேர்க்கும் நோக்கில் பாகிஸ்தான் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் கத்தாரில் ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதல் அரபு நாடுகள் மத்தியில் பதற்றத்தை அதிகரித்துள்ளது. இதுவரை அமெரிக்காவை பெரிதும் நம்பியிருந்த அரபு நாடுகள், இஸ்ரேல் தாக்குதல் விவகாரத்துக்குப் பின் அமெரிக்காவை மட்டுமே நம்பியிருப்பதை விரும்பவில்லை எனத் தெரிகிறது. எனவே, அணுசக்தி நாடான பாகிஸ்தானுடன் சவூதி அரேபியா பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'இரு நாடுகளும் இணைந்து பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும். இரு நாடுகளுக்கு எதிராக எந்த அச்சுறுத்தல் எழுந்தாலும் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும்' என்றும் பாகிஸ்தான்–சவூதி அரேபியா கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் பாகிஸ்தான் ராணுவத்தைப் பலப்படுத்த சவூதி பெருமளவில் நிதியுதவி வழங்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

**சவூதி அரேபியா விளக்கம்:** இந்த ஒப்பந்தம் தொடர்பாக சவூதி அரேபியா தரப்பு கூறுகையில், 'பாகிஸ்தானுடன் பல ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது எந்த ஒரு நாட்டுக்கு எதிரானதோ அல்லது எந்த ஒரு சம்பவத்தின் எதிர்விளைவாகவோ மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமோ அல்ல' என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தரப்பில் வியாழக்கிழமை கூறப்பட்டது. இந்நிலையில், தில்லியில் வெள்ளிக்கிழமை மீண்டும் செய்தியாளர்களைச் சந்தித்த வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:

இந்தியாவும், சவூதி அரேபியாவும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்பட்டு வருகின்றன. கடந்த சில ஆண்டுகளில் இரு நாட்டு உறவு மேலும் வலுவடைந்துள்ளது. இந்தியாவின் உத்திசார்ந்த கூட்டாளி நாடு சவூதி அரேபியா. இரு நாடுகளின் பொதுவான நலன், மற்றும் பொதுவான உணர்வுகளைப் புரிந்து செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

# வாக்குத் திருட்டு: ராகுல் மீண்டும் குற்றச்சாட்டு

**புது தில்லி, செப். 19:** 'தேர்தலைக் கண்காணிக்க வேண்டிய இந்திய தேர்தல் ஆணையம், அதற்குப் பதிலாக வாக்குத் திருட்டைக் கண்காணித்து, வாக்குத் திருடர்களைப் பாதுகாத்துள்ளது' என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெள்ளிக்கிழமை குற்றஞ்சாட்டினார்.

தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் பாஜக வாக்குத் திருட்டில் ஈடுபட்டது என்று தொடர்ந்து குற்றஞ்சாட்டி வரும் ராகுல் காந்தி, அதுதொடர்பாக சில ஆதாரங்களையும் வெளியிட்டு வருகிறார்.

கர்நாடக மாநிலத்தில் 2023 தேர்தலின் போது அலந்த் தொகுதியில் காங்கிரஸ் ஆதரவு வாக்காளர்கள் 6,018 பேரை பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றன. இதற்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. வாக்குத் திருடர்களை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பாதுகாக்கிறார் என்று ராகுல் காந்தி வியாழக்கிழமை குற்றஞ்சாட்டினார்.

ராகுல் காந்தியின் இந்தக் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் மறுத்தது. இணைய வழியில் எந்தவொரு வாக்காளரையும் பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய முடியாது என்று தேர்தல் ஆணையம் விளக்கமளித்தது.



இதற்குப் பதிலளிக்கும் வகையில் தனது எக்ஸ் பக்கத்தில் ராகுல் காந்தி வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

அதிகாலை 4 மணிக்கு எழுந்து, 36 விநாடிகளில் 2 வாக்காளர்களைப் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு, பின்னர் மீண்டும் தூங்கச் சென்றுவிடுவது என்ற அடிப்படையில்தான் வாக்குத் திருட்டு நடைபெற்றுள்ளது.

தேர்தலைக் கண்காணிக்க வேண்டிய இந்திய தேர்தல் ஆணையம், அதற்குப் பதிலாக வாக்குத் திருட்டைக் கண்காணித்து, வாக்குத் திருடர்களைப் பாதுகாத்துள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும், வாக்குத் திருட்டு தொடர்பாக வியாழக்கிழமை அளித்த பேட்டி தொடர்பான 36 விநாடி விடியோவையும் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவேற்றிய ராகுல், 'தேசத்தின் இளைஞர்களும், மாணவர்களும் அரசமைப்புச் சட்டத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்து, வாக்குத் திருட்டை தடுத்து நிறுத்த வேண்டும். நான் எப்போதும் உங்களுக்குத் துணை நிற்பேன்' என்று பதிவிட்டார்.


## தோல்வியை ராகுல் ஏற்றுக்கொள்ள வேண்டும்: கிரண் ரிஜிஜு

**புது தில்லி, செப். 19:** 'அரசமைப்பு நிறுவனங்கள் மீது குறை கூறுவதை விட்டுவிட்டு தொடர் தேர்தல் தோல்விகளுக்கான பொறுப்பை ராகுல் காந்தி ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று மத்திய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு விமர்சித்தார்.

தேர்தல் ஆணையத்தின் மீதான ராகுலின் தொடர் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறியதாவது:

தேர்தல்களில் தொடர்ச்சியாக தோல்வி அடைகிறீர்கள் என்றால், உங்களுடைய பலவீனத்தை ஒப்புக்கொண்டு தலைமைத்துவ தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை விடுத்து, தேர்தல் ஆணையம் மீது தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது சரியான நடைமுறையா?

தனது தொடர் தோல்விகளிலிருந்து மக்களின் கவனத்தைத்திசைதிருப்பவே இதுபோன்ற முயற்சிகளை ராகுல் மேற்கொண்டு வருகிறார். தனது தொடர் தோல்விகளுக்கு வேறு எந்த நிறுவனத்தையும் அவர் குறை கூற முடியாது. அதன் காரணமாகத்தான் தேர்தல் ஆணையத்தை அவர் குறிவைக்கிறார். மக்கள் இதை ஏற்க மாட்டார்கள்.



ராகுலின் குற்றச்சாட்டுகள் தேசத்துக்கு எதிரான பிரசாரத்தை பிரதிபலிப்பதாக உள்ளது. இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் என்னென்ன பிரசாரங்களைச் செய்கிறதோ, அதையே ராகுலும் இந்தியாவிலுள்ள அவருடைய நிறுவனமும் (காங்கிரஸ் கட்சி) பரப்புகின்றன. ராகுல் காந்தியும், அவரின் குழுவினரும் பல ஆண்டுகளாக முன்வைத்துவரும் குற்றச்சாட்டுகள், பாகிஸ்தானிலுள்ள இந்தியாவுக்கு எதிரான குழுக்கள் பயன்படுத்தும் கருத்துகள் என்பது கண்டறியப்பட்டுள்ளது என்றார்.

அமெரிக்காவில் சுட்டுக்கொல்லப்பட்ட இந்தியர்

## இனவெறி பாதிப்புக்குள்ளானதாக இறப்பதற்கு முன்பு பதிவு

**நியூயார்க்/ஹைதராபாத், செப்.19:** அமெரிக்காவில் காவல் துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தெலங்கானா இளைஞர், அந்நாட்டில் இன வெறி துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டதாக இறப்பதற்கு முன் சமூக ஊடகத்தில் பதிவிட்ட தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

தெலங்கானா மாநிலம் மஹபூப்நகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் முகமது நிஜாமுதீன் (30). அமெரிக்காவில் உயர்கல்வி முடித்து கலிஃபோர்னியா மாகாணம் சான்டா கிளாரா பகுதியில் தங்கி, மென்பொறியாளராகப் பணியாற்றி வந்தார்.

கடந்த செப்.3-ஆம் தேதி தன்னுடன் வீட்டில் தங்கியிருந்தவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை நிஜாமுதீன் கத்தியால் குத்தியதாகக் கூறப்படுகிறது. தகவலின் அடிப்படையில் நிகழ்விடம் விரைந்த காவல் துறையினர், நிஜாமுதீன் தாக்குவதை பார்த்து அவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில் பலத்த காயமடைந்த அவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், அவர் இனவெறி துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டதாக இறப்பதற்கு முன் சமூக ஊடகத்தில் பதிவிட்ட தகவல் தற்போது வெளியாகியுள்ளது. அந்தப் பதிவில், 'இன ரீதியான வெறுப்புணர்வு, பாகுபாடு, துன்புறுத்தல், சித்திரவதை, ஊதிய மோசடி, முறைகேடாகப் பணிநீக்கம், நீதி கிடைக்காமல் தடுத்தது ஆகியவற்றால் நான் பாதிக்கப்பட்டேன்.

விரோதத்தை எதிர்கொண்டேன், தாங்க முடியாத சூழலில் வாழ்ந்து வந்தேன். அத்துடன் இது நின்றுவிடவில்லை. இனவெறி கொண்ட துப்பறிவாளர் மற்றும் அவரின் குழுவின் உதவியுடன் நான் மிரட்டப்பட்டேன். எனது உணவில் விஷம் கலக்கப்பட்டது. அநீதியை எதிர்த்துப் பேசியதால், நான் வசித்து வந்த வீட்டில் இருந்து விரட்டப்பட்டேன். பெருநிறுவன கொடுங்கோலர்களின் அடக்குமுறை முடிவுக்கு வரவேண்டும். இதில் தொடர்புடைய அனைவரும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது மகனின் உயிரிழப்பில் உண்மையில் என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று ஹைதராபாதில் உள்ள நிஜாமுதீனின் தந்தை முகமது ஹஸ்னுதீன் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். தனது மகனின் உடலை சொந்த ஊர் கொண்டுவர உதவுமாறு அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம், சான் ஃப்ரான்சிஸ்கோவில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இந்திய வலிமையை எதிரிகளுக்கு உணர்த்திய ஆபரேஷன் சிந்தூர்

### ராஜ்நாத் சிங்

**புது தில்லி, செப். 19:** இந்தியாவின் ராணுவ வலிமையை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலமாக எதிரிகளுக்கு நிரூபித்தோம் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் வென்றதன் 60-ஆம் ஆண்டு நிகழ்ச்சி புது தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதில் பங்கேற்ற ராணுவ வீரர்களுடன் ராஜ்நாத் சிங் கலந்துரையாடினார். அப்போது அவர் பேசியதாவது:

நம்மால் எந்த அளவுக்கு வலுவான பதிலடியை எதிரிகளுக்குத் தர முடியும் என்பதை ஆபரேஷன் சிந்தூர் மூலம் எதிரிகளுக்கு நிரூபித்தோம். பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடைய எவரையும் விட்டுவைக்கக் கூடாது என்பதில் அரசு உறுதியாக இருந்தது.

பஹல்காமில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய கொடூரம் இப்போது நினைத்தாலும் இதயத்தை உலுக்குவதாக உள்ளது. எனவே தான் பயங்கரவாதிகளும், அவர்களை ஏவிவிட்டவர்களும் கற்பனையிலும் நினைத்துப் பார்த்திராத பாடத்தைக் கற்பிக்க பிரதமர் மோடி முடிவு செய்தார்.

நாட்டின் சுதந்திரத்துக்குப் பிறகு அண்டை நாடுகள் விவகாரத்தில் நாம் துரதிருஷ்டத்தையே எதிர்கொண்டோம். அவைமூலம் நாம் தொடர்ந்து சவால்களை எதிர்கொண்டு வருகிறோம்.

ஆனால், நாம் சோர்ந்துவிடப் போவதில்லை. இந்தியா பல சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெற்ற முன்னேறிய வரலாற்றை உடைய நாடு. எனவே, நாம் தொடர்ந்து கடுமையாக உழைத்து மேலும் பல சாதனைகளைப் படைக்க முடியும். நமக்கென்று சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கும் திறமை இந்தியர்களுக்கு உண்டு என்று ராஜ்நாத் சிங் பேசினார்.



1965-இல் பாகிஸ்தானுடனான போர் வெற்றி நினைவாக புது தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங். உடன் ராணுவ தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி உள்ளிட்டோர்.

## ஜம்மு-காஷ்மீரின் 2 குழுக்களுக்கு தடை: உறுதி செய்தது தீர்ப்பாயம்

**புது தில்லி, செப்.19:** ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த செல்வாக்குமிக்க இஸ்லாமிய மத குருவும் ஹுரியத் மாநாடு தலைவருமான மீர்வைஸ் உமர் ஃபரூக்கின் 'அவாமி செயல்பாட்டுக் குழு (ஏஏசி)' மற்றும் ஷியா முஸ்லிம் பிரிவு தலைவர் மஸ்ரூர் அப்பாஸ் அன்சாரி தலைமையிலான 'ஜம்மு-காஷ்மீர் இத்திஹதுல் முஸ்லிமீன் (ஜேகேஐஎம்)' ஆகிய 2 குழுக்களுக்கு மத்திய அரசு விதித்த தடையை தில்லி உயர்நீதிமன்றத்தின் 2 தீர்ப்பாயங்கள் வெள்ளிக்கிழமை உறுதி செய்தன.

இந்த இரண்டு தீர்ப்பாயங்களுக்கும் தலைமை வகித்த நீதிபதி சச்சின் தத்தா பிறப்பித்த உத்தரவில், 'மத்திய அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில், இந்த இரண்டு குழுக்களும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (யுஏபிஏ) 1967-இன் கீழ் சட்டவிரோத குழுக்கள் எனத் தீர்மானித்தது சரியே எனத் தெரிய வருகிறது.

யுஏபிஏ சட்டப் பிரிவு 3(1)-இன் கீழ் இந்த இரண்டு குழுக்களும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்பதைத் தீர்மானித்து தடை விதிக்க போதுமான ஆதாரங்கள் உள்ளன' என்று குறிப்பிட்டு, அவற்றுக்கு மத்திய அரசு விதித்த தடை உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த இரண்டு குழுக்களும் தேசத்தின் ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய வகையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டி, இந்த இரண்டு குழுக்களுக்கும் தடை விதிக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த மார்ச் 11-ஆம் தேதி அறிவிப்பு வெளியிட்டது.

ஜம்மு-காஷ்மீரில் பிரிவினைவாதிகள், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்ததோடு, சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி திரட்டு நடவடிக்கைகளிலும் இந்த இரு குழு உறுப்பினர்களும், தலைவர்களும் ஈடுபட்டனர் என்றும் மத்திய உள்துறை அமைச்சக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வீட்டுக் காவலில் மிர்வைஸ்?:** தான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக மிர்வைஸ் உமர் ஃபரூக் வெள்ளிக்கிழமை குற்றஞ்சாட்டினார். இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட அவர், 'ஹுரியத் மாநாடு முன்னாள் தலைவர் அப்துல் கனி பட் மறைவைத் தொடர்ந்து, கடந்த புதன்கிழமை இரவு முதல் அதிகாரிகள் என்னை வீட்டுக் காவலில் வைத்துள்ளனர்.

ஜாமா மசூதிக்குச் செல்வதற்கும் அனுமதி மறுத்துவிட்டனர். அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்துவதற்குக் கூட அனுமதி மறுக்கின்றனர். சர்வாதிகார ஆட்சியின் கீழ் நாம் வாழ்கிறோம் என்பதற்கு இதுவே சாட்சி. பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தி மக்களின் நம்பிக்கையை அதிகாரிகள் மெளனமாக்கிவிட முடியாது' என்று குறிப்பிட்டார்.

## பஹல்காம் தாக்குதல்: கைது செய்யப்பட்ட இருவரின் காவல், விசாரணைக் காலத்தை நீட்டித்தது நீதிமன்றம்

**ஜம்மு, செப். 19:** பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணையின் கால அவகாசத்தை மேலும் 45 நாள்களுக்கு நீட்டித்த ஜம்மு என்ஐஏ சிறப்பு நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரின் சிறப்பு புலனாய்வு முகமை (என்ஐஏ) காவலையும் நீட்டித்து உத்தரவிட்டது.

ஜம்மு-காஷ்மீரின்பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் ஈடுபட்டது தெரியவந்தது. நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் அமைந்திருந்த பயங்கரவாத முகாம்கள் மீது 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டு, அவற்றைத் தாக்கி அழித்தது.

இதனிடையே, பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக என்ஐஏ வழக்குப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியது.

இந்த விசாரணையில், பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு உதவியதாக அதே பகுதியைச் சேர்ந்த பர்வேஸ் அகமது, பஷீர் அகமது ஜோதாட் ஆகிய இருவரை கடந்த ஜூன் 22-இல் கைது செய்தது. அவர்கள் ஜம்முவில் உள்ள அம்பாலா சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்கிடையே, ஜம்மு-காஷ்மீர், ஸ்ரீநகரின் புறநகர் பகுதியில் உள்ள வனப் பகுதியில் கடந்த ஜூலை 28-ஆம் தேதி ராணுவம் மேற்கொண்ட 'ஆபரேஷன் மகாதேவ்' நடவடிக்கையில், பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலின் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் லஷ்கர்-ஏ-தொய்பா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த சுலேமான் ஷா உள்பட 3 பயங்கரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட அவர்கள் பயன்படுத்திய குண்டு உள்ளிட்ட பொருள்கள், கைப்பேசி எண்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் என்ஐஏ விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் பயங்கரவாதிகளுக்கு உடந்தையாக இருந்ததாக கைது செய்யப்பட்ட இரண்டு குற்றவாளிகளின் 90 நாள் காவல் வெள்ளிக்கிழமை நிறைவடைவதைத் தொடர்ந்து, அவர்கள் இருவரும் ஜம்மு என்ஐஏ சிறப்பு நீதிமன்றத்தில் வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது, பயங்கரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களில் மரபணு (டிஎன்ஏ) பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதோடு, சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாகிஸ்தான் கைப்பேசி எண்களின் தரவுகளையும் சேகரிக்க வேண்டியுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட இருவரும் தெரிந்தே பயங்கரவாதிகளுக்கு உதவியுள்ளனர். எனவே, இந்த விசாரணைக் காலத்தை நீட்டிப்பதோடு, சிறையில் உள்ள இருவரின் என்ஐஏ காவலையும் நீட்டிக்க வேண்டும்' என்று என்ஐஏ தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதை ஏற்ற என்ஐஏ சிறப்பு நீதிமன்ற நீதிபதி சந்தீப் கந்தோத்ரா, விசாரணைக் காலம் மற்றும் கைது செய்யப்பட்ட இருவரின் காவலையும் 45 நாள்கள் நீட்டித்து உத்தரவிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து சர்ச்சை பதிவு

## 'மன்னிப்பு கேட்டதால் மட்டும் மாணவி மீதான வழக்கை ரத்து செய்ய முடியாது'

**மும்பை, செப்.19:** ஆபரேஷன் சிந்தூர் குறித்து சமூக ஊடகத்தில் சர்ச்சைக்குரிய பதிவை வெளியிட்டதற்காக மன்னிப்பு கேட்டதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, 19 வயது கல்லூரி மாணவி மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்ய முடியாது என்று மும்பை உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

பாகிஸ்தானுக்கு எதிரான 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையைத் தொடர்ந்து, இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவியது. அதுகுறித்து மகாராஷ்டிர மாநிலம் புணே கல்லூரி மாணவி ஒருவர் சமூக ஊடகத்தில் சர்ச்சைக்குரிய வகையில், கருத்து பதிவிட்டார். இதைத்தொடர்ந்து கடந்த மே 9-ஆம் தேதி கைது செய்யப்பட்ட அந்த மாணவி, பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

அவர் மீது காவல் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்யக் கோரி, மும்பை உயர்நீதிமன்றத்தில் அந்த மாணவி மனு தாக்கல் செய்தார். இந்த மனு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஸ்ரீ சந்திரசேகர், நீதிபதி கௌதம் அன்கட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது மாணவியின் வழக்குரைஞர் வாதிடுகையில், 'சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவின் பின்னணியில் மாணவிக்கு எந்தக் கெட்ட நோக்கமும் இல்லை. அந்தப் பதிவை அவர் உடனடியாக நீக்கி மன்னிப்பும் கோரினார். ஜாமீன் பெற்ற பின்னர், அவர் கல்லூரி தேர்வுகளை எழுதி நல்ல மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இதைக் கருத்தில் கொண்டு அவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்ய வேண்டும்' என்று கோரினார்.

ஆனால் அவரின் வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள் அமர்வு, 'சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவை நீக்கி மன்னிப்பு கேட்டார், படிப்பில் சிறந்து விளங்குகிறார் என்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, மாணவி மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்ய முடியாது. அந்தப் பதிவை அவர் நீக்கியது வழக்கை மேலும் சிக்கலாக்கியுள்ளது' என்று தெரிவித்தது.

இதைத்தொடர்ந்து வழக்கின் அடுத்த விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்த நீதிபதிகள், இந்த வழக்கு குறிப்பேட்டை அரசுத் தரப்பு வழக்குரைஞர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## 'கர்நாடகத்தில் செப்.22 முதல் ஜாதிவாரி கணக்கெடுப்பு'

**பெங்களூரு, செப்.19:** கர்நாடகத்தில் செப்.22 முதல் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

கர்நாடகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோரின் கல்வி மற்றும் பொருளாதார கணக்கெடுப்பை (ஜாதிவாரி கணக்கெடுப்பு) செப்.22 முதல் அக்.7ஆம் தேதி வரை நடத்த கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது. இக்கணக்கெடுப்பை ரூ.420 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நடத்தவிருக்கிறது. கணக்கெடுப்பின்போது தங்களை ஹிந்து என்று குறிப்பிடாமல் வீரசைவர்கள் என்று பதிவு செய்யுமாறு அச்சமுதாய சங்கத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர். இதற்கு பாஜக கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இதுகுறித்து வியாழக்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. பெரும்பாலான அமைச்சர்கள், ஜாதிவாரி கணக்கெடுப்பை தள்ளிவைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். பிற்படுத்தப்பட்டோர் ஜாதிகளின் பட்டியலில் லிங்காயத்து கிறிஸ்தவர்கள், ஒக்கலிக கிறிஸ்தவர்கள், விஸ்வகர்மா பிராமண கிறிஸ்தவர்கள், கனிகா கிறிஸ்தவர்கள், மடிவாளா கிறிஸ்தவர்கள் என சேர்க்கப்பட்டுள்ளதற்கு சில அமைச்சர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.



இது தொடர்பாக பெங்களூரு, கிருஷ்ணா அரசு இல்லத்தில் வெள்ளிக்கிழமை முதல்வர் சித்தராமையா தலைமையில் மூத்த அமைச்சர்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஏற்கெனவே திட்டமிட்டப்படி செப்.22ஆம் தேதி முதல் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இதற்கு எதிராக பாஜக மேற்கொண்டிருக்கும் பிரசாரத்தை முறியடிக்க வேண்டும் என்று அமைச்சர்களை முதல்வர் சித்தராமையா அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் சித்தராமையா கூறுகையில், 'ஜாதிவாரி கணக்கெடுப்பை தள்ளி வைக்க மாட்டோம். பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், அரமைப்புச் சட்டத்தின் படி இயங்கும் தன்னாட்சி அமைப்பாகும். அந்த அமைப்புக்கு நாங்கள் வழிகாட்டுதல் வழங்க முடியாது. அவர்கள்தான் முடிவு செய்வார்கள்.

இந்த விவகாரத்தில் அமைச்சர்களுக்கு அதிருப்தி எதுவும் இல்லை. பாஜக அரசியல் செய்துவருகிறது.

காங்கிரஸை ஹிந்துக்களுக்கு எதிரானவர்கள் போல பாஜக சித்தரிக்கிறது. இதை கண்டித்து, பாஜகவுக்கு தகுந்த பதிலடி கொடுக்கும்படி அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டேன்' என்றார்.

## உத்தரகண்ட் நிலச்சரிவு: மேலும் 5 உடல்கள் மீட்பு

**கோபேஷ்வர், செப். 19:** உத்தரகண்ட் மாநிலத்தில் மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மேலும் ஐந்து பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

உத்தரகண்டில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள சமோலி மாவட்டத்தில் மழை, வெள்ளத்தைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. மீட்புப் பணியாளர்கள் மேற்கொண்ட மீட்புப் பணியின்போது இடிபாடுகளில் சிக்கியிருந்த இருவரின் உடல்களை வியாழக்கிழமை கண்டெடுத்தனர்.

இந்நிலையில், அங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்ற மீட்புப் பணியின்போது மேலும் 5 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றையும் சேர்த்து இதுவரை 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

## கூட்டுறவு வங்கிகளில் ஆதார் அடிப்படையில் பண சேவை

**புது தில்லி, செப்.19:** இந்திய தனித்துவ அடையாள ஆணையம் வெளியிட்ட திருத்தப்பட்ட செயல்திட்டத்தின் கீழ், கூட்டுறவு வங்கிகளில் ஆதார் எண் அடிப்படையில் பணம் செலுத்தும் சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த செயல்திட்டத்தின் கீழ், நாட்டில் உள்ள 34 மாநில கூட்டுறவு வங்கிகள், 351 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஊரக மற்றும் பகுதியளவு நகர்ப்புறமாக உள்ள பகுதிகளில் எண்ம (டிஜிட்டல்) நிதி சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது அனைத்துத் தரப்பினருக்கும் நிதி சேவைகள் கிடைப்பதை ஊரக மற்றும் பகுதியளவு நகர்ப்புறமாக உள்ள பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தும் என்று கருதப்படுகிறது.

## ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் மோதல்: ராணுவ வீரர் காயம்

**ஜம்மு, செப்.19:** ஜம்மு-காஷ்மீரின் உத்தம்பூர் மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படைகளுக்கும் இடையே வெள்ளிக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார்.

சியோஜ் தார் பகுதியின் எல்லையையொட்டி துடு காவல் நிலைய எல்லைக்குள்பட்ட பகுதியில் பயங்கரவாதிகளின் நடமாட்டம் தென்படுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து அந்தப் பகுதியை சுற்றி வளைத்து ராணுவ வீரர்கள், காவல் துறையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. பயங்கரவாதிகள் சுட்டதில் ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார். பாதுகாப்புப் படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையிலான மோதல் நீடித்து வருவதாக ஜம்மு காவல் துறை ஐஜி 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டார்.


பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda

**ஆவடி கிளை**

எண்.158, ஆவடி - பூந்தமல்லி பிரதான சாலை, ஆவடி, சென்னை - 600054 தொலைபேசி : 044-26555623

**அசையா சொத்துகளின் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI Act 2002) மற்றும் பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8 (6)-ன்கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பதாவது, ஈடுபெற்று கடன் வழங்கியுள்ள வங்கிக்குச் சேரவேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் பாக்கியை வசூலிப்பதற்காக கடன் வழங்கிய வங்கியிடம் அடமானம் / ஒப்படைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தினை ஈடுபெற்று கடன் வழங்கிய பேங்க் ஆஃப் பரோடாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். அந்தச் சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" எனும் அடிப்படையில் இ-ஏல விற்பனை மூலம் விற்கப்படும். கடன்தாரர்கள் அடமானதாரர் / ஜாமீன்தாரர்கள் / அசையா சொத்துக்கள் / நிலுவைத்தொகை / குறைந்தபட்ச நிர்ணய விலை / இ-ஏல தேதி மற்றும் நேரம், டேவணித்தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: செல்வி.தாயம்மாள்கண்ணி எம், சி-18, 2வது தளம், 3/148, சோலை அபார்ட்மெண்ட், மவுண்ட் பூந்தமல்லி உயர் சாலை, நந்தம்பாக்கம், மணப்பாக்கம், சென்னை - 600 089. (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)

**19.09.2025** தேதிப்படி நிலுவைத் தொகை : ரூ.**54,69,522.32** மேலும் முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் இதில் சேரும். (ஆக்கபூர்வ சுவாதீனம்)

ஏதேனும் இருப்பின்அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: ஷெட்யூல் A: காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா செங்கல்பட்டு மாவட்டம் தற்போது வண்டலூர் தாலுகா, நந்திவரம் கிராமம் பழைய சர்வே எண். 378/1A, பழைய பட்டா எண். 5380, புதிய பட்டா எண். 9279 படி புதிய ச.எண். 378/7ன் பாலாஜி அவென்யூ" என பெயர் கொண்ட மனைப்பிரிவின் அங்கீகார எண்.C.S.A.R/D.T.P.M-87-494/L.P/341 மனை எண் 56ன் நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். ஷெட்யூல் B: மனை எண் 56 பிளாட் எண். F-1, முதல் தளத்தில் 1004 சதுர அடி கட்டுமான பரப்பு அதனுடன் பொதுபகுதிகள் ( ஒரு கார் நிறுத்தும் அதனுடன் பொது பகுதி (மின் இணைப்பு எண் 09-583-003-1796) இணைந்த) மொத்தம் 4155 சதுர அடி காலி நிலத்தில் 403.50 சதுர அடி பிரிந்தும் பிரிக்கப்படாத பங்குநிலம் / நிலத்தில் உரிமையுள்ள நிலம். இச்சொத்து தாம்பரம் பதிவு மாவட்டம் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.

குறைந்த பட்ச நிர்ணய விலை : ரூ. **40,64,000/-** | டேவணித் தொகை : ரூ. **4,06,400/-** | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ.**25,000/-**

2. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: செல்வி.விஜயலட்சுமி கண்ணன், எண் 23 மாணிக்கவாசகர் தெரு, விவேகானந்தபுரம், அருள் நகர், கூடுவாஞ்சேரி, சென்னை - 603 202. (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)

**19.09.2025** தேதிப்படி நிலுவைத் தொகை : ரூ.**55,72,729.35** மேலும் முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் இதில் சேரும். (ஆக்கபூர்வ சுவாதீனம்)

ஏதேனும் இருப்பின்அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி: ஷெட்யூல் A: காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நந்திவரம் கிராமம் தற்போது செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் தாலுக்கா, பழைய சர்வே எண் 378/1A பழைய பட்டா எண் 5380, புதிய பட்டா எண் 9279ன்படி புதிய ச.எண் 378/7 அங்கீகார எண். C.S.A.R/D.T.P.M-87-494/L.P/341, "பாலாஜி அவென்யூ" மனை எண் 56A-ன் செயல் அலுவலர் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர பஞ்சாயத்து 19.05.2017 தேதியிட்ட Ka.Vu. எண்.235/2017, Ka.Vu. எண் 22/2017-2018, மற்றும் மனை எண் 56B-ன் கட்டிட அங்கீகார எண். 31.05.2017 தேதியிட்ட Ka.Vu. எண் 231/2017, Ka.Vu. எண் 13/2017-2018, அவர்களால் வழங்கப்பட்ட கட்டிட அங்கீகார எண்கள். சொத்து அதன் துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள் : வடக்கு: 23 அடி சாலை, தெற்கு: மனை எண் 57 & 58, கிழக்கு: காலி நிலம், மேற்கு: 40 அடி சாலை. அளவுகளில்: வடக்கு: 65 அடி, தெற்கு: 73 ½ அடி, கிழக்கு: 60 அடி, மேற்கு: 60 அடி. ஆகமொத்தம் 4155 சதுர அடி. ஷெட்யூல் B: மனை எண் 56 பிளாட் எண் F-3 முதல் தளம் கட்டுமானப் பரப்பு 1088 சதுர அடி அதனுடன் பொதுப்பகுதிகள் (ஒரு கார் நிறுத்தும் அதனுடன் பொது பகுதிகள் இணைந்த (மின் இணைப்பு எண். 09-583-003-1804) மொத்தம் 4155 சதுர அடி காலி நிலத்தில் 437 சதுர அடி பிரிந்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம் / நிலத்தில் உரிமையுள்ள நிலம். இச்சொத்து தாம்பரம் பதிவு மாவட்டம் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.

குறைந்த பட்ச நிர்ணய விலை : ரூ. **44,10,000/-** | டேவணித் தொகை : ரூ. **4,41,000/-** | ஏலத் தொகையை அதிகரித்தல் : ரூ.**25,000/-**

மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : **07.10.2025** பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் : **03.10.2025** பிற்பகல் 12.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் https://ibapi.in பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தொலைபேசி எண். 044 26555623 Mobile: 8609812544 அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

இடம் : சென்னை; தேதி : 19.09.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாங்க் ஆ·ப் பரோடா



ஞாயிற்றுக்கிழமைதோறும்

**தினமணி கதிர்**

இளமை! புதுமை! இனிமை!



**கடன் வசூல் தீர்ப்பாயம் - III, சென்னை**

6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

**TRC எண். 2251 / 2023**

கனரா வங்கி, SAM கிளை ... சான்றிதழ் வைத்திருப்பவர்

- எதிரிடை -

M/s. EON இன்டர்நேஷனல் மற்றும் 4 பிறநபர்கள் ... சான்றிதழ் கடன்தாரர்கள்

**கேட்பு அறிவிப்பு**

(1961ம் வருடத்திய வருமான வரி சட்டம் இரண்டாம் அட்டவணை விதி 2-ன் கீழ் மற்றும் 1993-ம் வருடத்திய கடன் வசூல் மற்றும் திவால் சட்டம் (அந்தந்த காலத்திற்கு ஏற்ப திருத்தப்பட்டுள்ளது) பிரிவுகள் 25 முதல் 28 -ன் கீழ் அறிவிப்பு)

பெறுநர்

1). **M/s. EON இன்டர்நேஷனல்** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் (i) திரு. B. சையத் சாதிக் பாஷா, (ii) திருமதி.B. ரியானா & (iii) திருமதி.K.அஜீசுன்னிஷா எண்.11/6, 1வது தளம், வாலா குட்டி தெரு, பெரியமேடு, சென்னை - 600 003. & **M/s. EON இன்டர்நேஷனல்** தொழிற்சாலை முகவரி: எண்.703/3, MBT சாலை, V.C. மோட்டூர், ராணிப்பேட்டை, வேலூர் - 632 401.

2) **திரு. B. சையத் சாதிக் பாஷா**, த/பெ. திரு. J.பாபுலால், பழைய எண்.4/56A, புதிய எண்.15, அணைக்கட் சாலை, தெரு ஒடந்தாங்கல் கிராமம், பூண்டி அஞ்சல், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம், வேலூர் - 632 513.

3) **திருமதி.B. ரியானா** த/பெ.திரு.J.பாபுலால், பழைய எண்.4/56A, புதிய எண்.15, அணைக்கட் சாலை, தெரு ஒடந்தாங்கல் கிராமம், பூண்டி அஞ்சல், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம், வேலூர் - 632 513.

4) **திருமதி. K.அஜீசுன்னிஷா** க/பெ. (லேட்) சையத் கலீம், பழைய எண்.4/56A, புதிய எண்.15, அணைக்கட் சாலை, தெரு ஒடந்தாங்கல் கிராமம், பூண்டி அஞ்சல், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம், வேலூர் - 632 513.

5) **திருமதி.தாஜுன்னிசா** க/பெ. திரு.J.பாபுலால், பழைய எண்.4/56A, புதிய எண்.15, அணைக்கட் சாலை, தெரு ஒடந்தாங்கல் கிராமம், பூண்டி அஞ்சல், வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம், வேலூர் - 632 513.

**சென்னை, கடன் வசூல் தீர்ப்பாயம் - 2-ன் மாண்புமிகு முன்னிலை அதிகாரி அவர்களால்** 1993-ம் வருடத்திய கடன் வசூல் மற்றும் திவால் சட்டம் (அந்தந்த காலத்திற்கு ஏற்ப திருத்தப்பட்டுள்ளது) பிரிவு 19 மற்றும் துணை பிரிவுகள் 7 மற்றும் 22-ன் கீழ் **30.06.2022** தேதியிட்ட உத்தரவின் படி அசல் விண்ணப்ப எண்.935/2018-ல் குறிப்பிட்டுள்ள **ரூ.4,39,41,416/- (ரூபாய் நான்கு கோடியே முப்பத்து ஒன்பது லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து நானூற்று பதினாறு மட்டும்)** இதில் ரூ.4,30,68,922/- அதனுடன் 28.11.2018 அன்று முதல் முழு தொகையும் வசூல் ஆகும் தேதி வரையிலான வருடத்திற்கு 11.30% கூட்டு வட்டி மற்றும் மாதாந்திர வட்டியுடன் சேர்த்து மற்றும் ரூ.8,72,494/- அதனுடன் 28.11.2018 அன்று முதல் முழு தொகையும் வசூல் ஆகும் தேதி வரையிலான வருடத்திற்கு 12.40% வட்டி மற்றும் அரையாண்டு வட்டியுடன் கணக்கிட்டு சேர்த்து கட்டணங்கள் கடன் வசூல் சான்றிதழின்படி செலுத்த வேண்டியது / தங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியது என கடன் வசூல் சான்றிதழ் எண்.185/2022, **07.12.2022** அன்று வழங்கப்பட்டுள்ளது.

2. தாங்கள் மேற்படி தொகையை இந்த அறிவிப்பு பெறப்பட்ட **15 தினங்களுக்குள்** சான்றிதழ் வைத்திருக்கு வங்கிக்கு செலுத்துமாறு கேட்டுகொள்ளப்படுகிறீர்கள், தவறும்பட்சத்தில் தற்போதுள்ள விதிகளின் படி கடன் வசூல் மேற்கொள்ளப்படும்.

3. வரிசை எண். 1 முதல் 4 வரையிலான சான்றிதழ் கடன்தாரர்களுக்கு அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பு பட்டுவாடா ஆகமால் திரும்ப பெறப்பட்டுள்ளது.

4. ஆகையால் தீர்ப்பாயம் மாற்று சேவை மூலமாக கேட்பு அறிவிப்பு சேவையை முடிக்கப்பட ஆங்கிலம் நாளிதழ் (வேலூர்) மற்றும் தமிழ் நாளிதழ் (வேலூர்/ராணிபேட்டை) மூலம் விளம்பரப்படுத்த உத்தரவிட்டுள்ளது. தாங்கள் ஆஜராவதற்காக அடுத்த விசாரணை தேதி **22.10.2025 அன்று காலை 11.30 மணிக்கு** நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**18.09.2025 அன்று எனது கையொப்பமும் மற்றும் தீர்ப்பாயத்தின் முத்திரையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.**

(P. பிரேம் குமார்)
வசூல் அதிகாரி



**கடன் வசூல் தீர்ப்பாயம் - III, சென்னை**

6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006

**DRC No. 79/2025**

பாங்க் ஆஃப் பரோடா, செப்புதாஸ் கிளை, சென்னை ...... சான்றிதழ்தாரர்

-எதிர்-

M/s. கோல்டன் டெக்ஸ்டைல் மற்றும் ரெடிமேட்ஸ் & மற்றொருவர் ...... சான்றிதழ் கடன்தாரர்கள்

**கோரிக்கை அறிவிப்பு**

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கடன் வசூல் சட்டம் 1993 பிரிவுகள் 25 TO 28 மற்றும் வருமான வரி சட்டம் 1961ன் 2வது அட்டவணை விதி 2ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு.

பெறுநர்:

1) M/s. கோல்டன் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. M. மொஹிதீன் சீனி, புதிய எண்.30, பழைய எண்.61/1, முருகப்ப முதலி தெரு, புரசைவாக்கம் சென்னை-600 007. 2) திரு. மொஹிதீன் சீனி, த/பெ. முகமது முஸ்தபா, எண். 7, வடக்கு அரசமரம் தெரு, அயனாவரம், சென்னை-600 029.

1. மாண்புமிகு தலைமை அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம் - III, சென்னை அவர்கள் வழங்கிய கடன் வசூல் சான்றிதழ் எண். **79/2025** நாள் 28.02.2025 கடன் வசூல் மற்றும் திவால சட்டம் 1993 (அவ்வப்போது மாற்றப்பட்ட விதிமுறைகளின்படி) பிரிவு 19 மற்றும் உப பிரிவுகள் 7 மற்றும் 22ன் விதிமுறைகளின்படி 11.03.2025 தேதியிட்ட அசல் விண்ணப்ப எண். **1342/2023** ஆணைக்கிணங்க DRC-ல் குறிப்பிடப்பட்டுள்ள **ரூ. 1,09,95,128.48 (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து நூற்று இருபத்தெட்டு மற்றும் நாற்பத்தெட்டு காசுகள் மட்டும்)** இதில் ரூ. **91,32,350.49** அதனுடன் மேலும் கூட்டு வட்டி வருடத்திற்கு 10.40% மாதாந்திர கணக்கிலும் மற்றும் 18.02.2020 முதல் வருடத்திற்கு 2% சாதாரண அபராத வட்டி செலுத்தப்படும் நாள் வரையிலானது & ரூ. **18,62,777.99** அதனுடன் மேலும் கூட்டு வட்டி வருடத்திற்கு 10.90% மாதாந்திர கணக்கிலும் மற்றும் 18.02.2020 முதல் வருடத்திற்கு 2% சாதாரண அபராத வட்டி செலுத்தப்படும் நாள் வரையிலானது. அதனுடன் தங்களிடமிருந்து நிலுவைத்தொகை வசூலிக்கும் வரை ஆகும் செலவுகளை DRC விதிகளின்படி வசூலிக்கப்படும்.

2. நீங்கள் இந்த தொகையை இந்த அறிவிப்பு கிடைத்த **15 நாட்களுக்குள்** செலுத்த வேண்டும், தவறும்பட்சத்தில் சட்டப்படி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

3. வரிசை எண் 1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் கடன்தாரருக்கு அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பு பெறப்படாமல் திரும்ப வந்து விட்டது.

4. எனவே ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் கோரிக்கை அறிவிப்பை பிரசுரிப்பதின் மூலம் அறிவிப்பு வழங்கி இந்த நடவடிக்கையை பூர்த்தி செய்ய கடன் வசூல் தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது. இதன் அடுத்த விசாரணை **07.10.2025** காலை **11.30** மணிக்கு வருகிறது. நீங்கள் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**15.09.2025** தேதியன்று இந்த தீர்ப்பாயத்தின் என்னுடைய கையொப்பம் மற்றும் முத்திரையுடன் இது வழங்கப்பட்டுள்ளது.

(P. பிரேம்குமார்)
மீட்பு அதிகாரி

# பிரிட்டன் அரசர் பரிசளித்த மரக்கன்றை இல்லத்தில் நட்டார் பிரதமர்



பிரிட்டன் அரசர் சார்லஸ் பிறந்தநாள் பரிசாக அளித்த மரக்கன்றை புதுதில்லியில் தனது வீட்டுத் தோட்டத்தில் வெள்ளிக்கிழமை நட்டு நீரூற்றிய பிரதமர் நரேந்திர மோடி.

**புது தில்லி, செப். 19:** தனது பிறந்த நாளுக்கு பிரிட்டன் அரசர் மூன்றாம் சார்லஸ் பரிசளித்த கடம்ப மரக்கன்றை, புது தில்லியில் உள்ள அதிகாரபூர்வ இல்லத்தில் வெள்ளிக்கிழமை நட்டார் பிரதமர் நரேந்திர மோடி.

கடந்த செப்டம்பர் 17-ஆம் தேதி, பிரதமர் மோடியின் 75-ஆவது பிறந்த நாளையொட்டி, உலகத் தலைவர்கள் பலரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். பிரிட்டன் அரசர் மூன்றாம் சார்லஸ், பிரதமர் மோடிக்கு கடம்ப மரக்கன்றை பரிசளித்தார். அரசரின் சார்பில் இந்தியாவில் உள்ள பிரிட்டன் தூதரகம் பிரதமரிடம் சிறப்புப் பரிசை வழங்கியது.

'பிரதமர் மோடியின் முன்னெடுப்பான 'தாயின் பெயரில் ஒரு மரம்' பிரசார இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு இப்பரிசை பிரிட்டன் அரசர் வழங்கியுள்ளார். இரு நாட்டு பிரதமர்களின் தொலைநோக்குத் திட்டம்-2035-இன் கீழ், பிரிட்டன்-இந்தியா கூட்டாண்மையின் முக்கியத் தூணாக பருவநிலை மற்றும் பசுமை எரிசக்திக்கான ஒத்துழைப்பு விளங்குகிறது' என்று பிரிட்டன் தூதரகம் தெரிவித்தது.

பிரிட்டன் அரசர் பரிசளித்த கடம்ப மரக்கன்றை தில்லியில் உள்ள தனது அதிகாரபூர்வ இல்லத்தில், பிரதமர் மோடி வெள்ளிக்கிழமை நட்டார். இது தொடர்பான விடியோவை சமூக ஊடகத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், இருதரப்பு நட்புறவு மற்றும் நீடித்த சுற்றுச்சூழலுக்கான பகிரப்பட்ட மாண்பின் அடையாளமிது என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, கடந்த ஜூலையில் பிரிட்டன் பயணத்தின்போது அரசருக்கு 'தாயின் பெயரில் ஒரு மரம்' இயக்கத்தின்கீழ் மரக்கன்றை பிரதமர் மோடி பரிசாக வழங்கினார்.

# விண்வெளி, இணையவழி போர்த் தளவாட உற்பத்திக்கு முன்னெடுப்பு

## முப்படை தலைமைத் தளபதி அனில் செளஹான்

**ராஞ்சி, செப். 19:** விண்வெளி, இணையவழி (சைபர்) போர்க் களங்களுக்கான தளவாட உற்பத்திக்கு கொள்கை ரீதியில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் செளஹான் தெரிவித்தார்.

ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியில் இந்திய ராணுவத்தின் கிழக்கு மண்டலப் பிரிவு, இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் (எஸ்ஐடிஎம்), இந்திய தொழிலக கூட்டமைப்பு (சிஐஐ) ஆகியவை சார்பில் கிழக்கு தொழில்நுட்பக் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இக்கருத்தரங்கில் முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் செளஹான் பங்கேற்றுப் பேசியதாவது:

போர்க் களங்களுக்கு ஏற்ப வியூக அடிப்படையிலான ஆயுதத் தேர்வு மிக முக்கியமானதாகும். நவீன தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆராய்ச்சி-மேம்பாடு அதிகரிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு உற்பத்தித் கட்டமைப்பை விரிவுபடுத்துவது அவசியம். அந்த அடிப்படையில், செயற்கை நுண்ணறிவு மற்றும் இதர நவீன தொழில்நுட்பங்கள் ஆராயப்பட வேண்டும்.

இந்திய பாதுகாப்புத் துறையில் உள்நாட்டு உற்பத்தி தாமதமாகத் தொடங்கப்பட்ட போதிலும், சரியான பாதையில் தேசம் பயணித்துக் கொண்டிருக்கிறது. பாதுகாப்புத் துறையின் தற்சார்பு மற்றும் மத்திய அரசின் கிழக்கு நோக்கிய செயல்பாட்டுக் கொள்கையின் நோக்கங்கள் நிறைவேற வேண்டுமெனில், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களின் துடிப்பான பங்களிப்பு அவசியம். தற்போது போர் என்பது அறிவியல்நுட்பமாக மாறியுள்ளது. எனவே, போர் வீரர்களுக்கு படைப்புத்திறனும் புத்தாக்கமும் அவசியம் என்றார் அவர்.

**'புதிய வகையான போர்க் களம்':** முன்னதாக, ராஞ்சியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வியாழக்கிழமை பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடிய அனில் செளஹான், 'பாகிஸ்தான் மீதான இந்திய ராணுவத்தின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, புதிய வகையான போர்க் களத்தை பிரகடனம் செய்துள்ளது. பாரம்பரியப் போர் போல அல்லாமல், நிலம், வான்வெளி, கடல், மின்காந்த விண்வெளி, சைபர் என பன்முகக் களங்களிலும் போர் நடந்தது. செயற்கைக் கோள், மின்னணு புகைப்படங்கள் மற்றும் சமிக்ஞை நுண்ணறிவு உதவியுடன் எதிரியை வென்றிகொண்டோம். இந்த நடவடிக்கையில் கற்றுக் கொண்ட விஷயங்கள், முப்படைகளின் தயார் நிலை மற்றும் ஒருங்கிணைப்பின் உயர் அளவை உறுதி செய்துள்ளது' என்றார்.



ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கையொட்டி காட்சிப்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் பரிசோதித்த வீரர்கள்.

### 'அணுஆயுத தயாரிப்புக்குப் பங்களிக்க முடியும்'

கிழக்கு தொழில்நுட்பக் கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசிய ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், 'யுரேனியம் நிறைந்த ஜார்க்கண்ட் மாநிலம், நாட்டின் அணு ஆயுதத் தயாரிப்பில் கணிசமாகப் பங்களிக்க முடியும். அந்த வகையில், நாட்டின் பாதுகாப்புத் துறையை தற்சார்புடையதாக மாற்ற மத்திய அரசுடன் ஒத்துழைக்க மாநில அரசு தயாராக உள்ளது' என்றார். அணு ஆயுதத் தயாரிப்பில் யுரேனியம் முக்கிய அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# 'ஆட்சியைக் கவிழ்க்க' இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறார் ராகுல்

## மத்திய அமைச்சர் கண்டனம்

**மும்பை, செப் 19:** நேபாளத்தில் இளைஞர்கள் (ஜென்-இஸட்) போராட்டம் நடத்தி ஆட்சியைக் கலைத்தது போல இந்திய இளைஞர்களும் போராட்டம் நடத்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அழைப்பு விடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் ஜென்-இஸட் எனப்படும் (1990-கள் முதல் 2000-கள் இடையிலான ஆண்டுகளில் பிறந்தவர்கள்) இளைய தலைமுறையினரின் போராட்டத்தால் அங்கு ஆட்சி கவிழ்ந்து, புதிய இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. இந்நிலையில், இந்தியத் தேர்தலில்களில் வாக்குத் திருட்டு, முறைகேடுகள் அதிகம் நடைபெறுவதாக தேர்தல் ஆணையம், மத்திய பாஜக அரசு மீது ராகுல் காந்தி தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார்.

இது தொடர்பாக அவர் 'எக்ஸ்' வலைதளத்தில் வெளியிட்ட பதிவு ஒன்றில், 'நாட்டில் உள்ள இளைஞர்கள், மாணவர்கள், ஜென்-இஸட் தலைமுறையினர் அரசியல் சாசனத்தைக் காக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும். வாக்குத் திருட்டை தடுத்து நிறுத்த வேண்டும். நான் எப்போதும் உங்களுடன் இருப்பேன்' என்று கூறியிருந்தார். இதன் மூலம் ராகுல் காந்தி நேபாளத்தில் நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்பை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி கலகத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்ற கருத்து எழுந்துள்ளது.



பிரல்ஹாத் ஜோஷி

இது தொடர்பாக மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'ஜனநாயகமற்ற முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது இந்தியாவில் ஒருபோதும் நடக்காது. வாக்குத் திருட்டு என்று ராகுல் காந்தி கூறும் குற்றச்சாட்டுகள் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாதவை. குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கம் மட்டுமே அதில் உள்ளது.

இந்தியாவில் தேர்தல் முறை சிறப்பாக உள்ளது. காங்கிரஸ் கட்சியை மக்கள் தொடர்ந்து புறக்கணித்து வருவதே அக்கட்சியின் தோல்விக்குக் காரணம்.

வன்முறையால் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்த இலங்கை, நேபாளம் போல இந்தியாவில் நிகழ வேண்டும் என்று ராகுல் விரும்புகிறார். அதற்காக அழைப்பும் விடுக்கிறார்.

தேர்தல் மூலம் ஆட்சிக்கு வர முடியாது என்பது தெரிந்ததால், இது போன்று ராகுல் பேசி வருகிறார். இந்தியாவில் இளைஞர்கள் உள்பட அனைத்துத் தரப்பு மக்களும் விரும்பும் தலைவராக பிரதமர் மோடி உள்ளார். அதுவே பாஜகவுக்கு வெற்றி தேடித் தருகிறது' என்று கூறியுள்ளார்.

# நகர்ப்புற மாவோயிஸ்ட்டுகள் போல பேசுகிறார் ராகுல்

## மகாராஷ்டிர முதல்வர் ஃபட்னவீஸ் குற்றச்சாட்டு

**மும்பை, செப். 19:** ஜனநாயக முறையில் தேர்தெடுக்கப்பட்ட அரசைத் தூக்கிவீச வேண்டும் என்று இளைய தலைமுறையினரிடம் வேண்டுகோள் விடுத்ததன் மூலம் நகர்ப்புற மாவோயிஸ்டுகள்போல எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசியுள்ளார் என மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' வலைதளத்தில் ஃபட்னவீஸ் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'ராகுல் காந்திக்கு அரசமைப்புச் சட்டத்தின் மீதும் நாட்டின் ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கையில்லை என்பது தெரிகிறது. இளைய தலைமுறையினர் (ஜென்- இஸட்) ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியில் தேர்வு செய்த அரசைத் தூக்கிவீச வேண்டுமென்று ராகுல் காந்தி அழைப்புவிடுத்துள்ளார்.



ராகுல் காந்தி கூறுவது போல இங்கு வாக்குத் திருட்டு ஏதும் நடைபெறவில்லை. உண்மையில், ராகுல் காந்தியின் மூளையைத்தான் யாரோ திருடிவிட்டார்கள். எனவேதான், நகர்ப்புற மாவோயிஸ்டுகளைப் போல பேசுகிறார்.

அவருக்கு இது போன்ற யோசனைகளைத் தருபவர்களும் மாவோயிஸ சிந்தனையாளர்கள் என்று தெரிகிறது.

ஆனால், இந்தியாவில் இளைஞர்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் நாட்டின் வளர்ச்சியையே விரும்புகிறார்கள்.

உண்மையில் ராகுலுக்கு இளைஞர்கள், மாணவர்கள், நடுத்தர மக்கள், மூத்த குடிமக்கள் என யாருடைய கருத்தும் புரியவில்லை' என்று கூறியுள்ளார்.


கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் – II, முன்னிலையில்
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600006.
O.A. எண்.346/2025

M/s. IDBI வங்கி லிமிடெட்,
பிரதிநிதி அதன் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்
எண். 259, TNHB, ஜோதி நகர் அஞ்சல், அரக்கோணம்-631003
...விண்ணப்பதாரர்

-எதிர் -

1. திருமதி.V.P. தீபா, க/பெ.V. சிவா.
2. திரு. V. சிவா, த/பெ. வீராசாமி
இருவரின் வசிப்பிடம்:1/83, விஜயாநகர் கோயில் தெரு, சின்னகடம்பூர், மோட்டூர் கிராமம், கேசவராஜ்பெட் (அஞ்சல்), திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
... பிரதிவாதிகள்

பிரதிவாதிகளுக்கான மாற்றுச்சேவை மூலம் அழைப்பாணை

மேற்கூறிய பெயருடைய மனுதாரர் பிரதிவாதிகளிடம் இருந்து ரூ.21,68,664/- (ரூபாய் இருபத்தோரு இலட்சத்து அறுபத்து எட்டு ஆயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு மட்டும்) வசூலிக்க வேண்டி இந்த தீர்ப்பாயத்தில் மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர், தாக்கல் செய்துள்ளனர்.
வழக்கமான முறையில் அனுப்பிய அழைப்பாணை/ அறிவிப்பு பலன் அளிக்காத காரணத்தால், பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பாயம் மாற்றுச்சேவைக்கு ஆணையிட்டுள்ளதால் அதன்படி இந்த அறிவிப்பு நாளிதழ் வாயிலாக வெளியிடப்படுகிறது.
அதனால் தீர்ப்பாயம் முன்பாக நீங்கள் நேரடியாகவோ அல்லது உங்களால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ 21.10.2025 அன்று காலை 11.30 மணிக்கு ஆஜராகி, கோரப்பட்டுள்ள நிவாரணங்களை ஏன் வழங்கக் கூடாது என்பதற்கான காரணத்தை எழுத்து பூர்வமாக சமர்ப்பிக்குமாறு தீர்ப்பாயத்தினால் உத்தரவிடப்படுகிறீர்கள். அவ்வாறு நீங்கள் ஆஜராகத் தவறினால், மனுவானது நீங்கள் இல்லாமலேயே சட்டப்படி விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் எனது கைப்பட 18.09.2025 அன்று வழங்கப்பட்டது.
தீர்ப்பாயத்தின் முத்திரை பதிவாளர் கையொப்பம்



இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி
மறைமலைநகர் கிளை
எண்.28A, திருவள்ளுவர் சாலை, தேசிய நெடுஞ்சாலை-1, மறைமலைநகர் - 603 209. தொலைபேசி : 044 - 2745 2241. மின்னஞ்சல் : maraimalainagar@indianbank.co.in
பிற்சேர்க்கை IV-A [விதி 8(6) நிபந்தனை பார்க்கவும்]

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் உடன் வாசிக்கவேண்டிய கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதி 9(1)-ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியான மின்னணு ஏல அறிவிப்பு (E-auction)

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் ஈட்டு கடனாளருக்கு அளிக்கப்பட்டுள்ள, கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான/பிணைய சொத்துக்களை ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, மறைமலைநகர் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் அடையாள சுவாதீனம் எடுத்து கொண்டதையடுத்து, கடன் நிலுவைத்தொகையான ரூ.2,88,41,012/- (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து எட்டு லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து பன்னிரெண்டு மட்டும்) (18.09.2025-ன்படி) மேலும் 19.09.2025 தேதி முதல் மேலதிக வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் செலவுகள் சேர்த்து வசூலிப்பதற்காக, "எங்கு உள்ளதோ அங்கு அப்படியே", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எப்படியிருந்தாலும் அப்படியே" என்ற அடிப்படையில், ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, மறைமலைநகர் கிளையால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் 06.10.2025 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி (1) M/s. Masonkart பிரைவேட் லிமிடெட், (கடன்தாரர்), பிரதிநிதியாக இதன் இயக்குனர்கள் : திரு. K. தேவேந்திரன் மற்றும் திருமதி. D. சசிகலா, பதிவு அலுவலகம் : S-2, 2வது தளம், 1/44, பார்வதி அப்பார்ட்மென்ட்ஸ், முகப்பேர் கிழக்கு, சென்னை - 600 037, அலுவலக முகவரி : சந்தா'ஸ் வில்லா, 2வது அவென்யூ, 6வது தெரு, AE-3362R, 1வது தளம், அண்ணா நகர் மேற்கு, அண்ணா நகர், சென்னை, தமிழ்நாடு - 600 040. (2) திரு. K. தேவேந்திரன், (இயக்குனர் & ஜாமீன்தாரர்), த/பெ திரு. குப்பன், 1502, R பிளாக், மெட்ரோ சோன், 44, பிள்ளையார் கோயில் தெரு, அண்ணா நகர், சென்னை - 600 040. (3) திருமதி. D. சசிகலா, (இயக்குனர், ஜாமீன்தாரர் & அடமானதாரர்), க/பெ திரு. K. தேவேந்திரன், 1502, R பிளாக், மெட்ரோ சோன், 44, பிள்ளையார் கோயில் தெரு, அண்ணா நகர், சென்னை - 600 040.

சொத்தின் சுருக்கமான விவரம் மின்னணு ஏல முறையில் விற்பனைக்கு கொண்டுவரப்படவுள்ள சொத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :

சொத்து 1 : GT சோலயில் ரெசிடென்சி, கதவு எண்.80, பிள்ளையார் கோயில் தெரு, கோயம்பேடு, சென்னை - 600 107-ல் உள்ள திருமதி. D. சசிகலா, க/பெ K. தேவேந்திரன் அவர்களுக்கு சொந்தமான ஃபிளாட் எண்.2B, ரிசவர்டு திறந்த கார் நிறுத்தம் உட்பட, ச. எண்.247/2A-ல் (பட்டாவின்படி ச. எண். 247/2A1B, 247/2A5 மற்றும் 247/2A6) அடங்கியுள்ளது. அத்துடன் 92613 சதுர அடியிலிருந்து UDS 503 சதுர அடி மற்றும் பிளிந்த் அளவு 930 சதுர அடி, பொது பகுதி உட்பட கொண்டது. இது திருமதி. D. சசிகலா, க/பெ K. தேவேந்திரன் அவர்களின் பெயரில் உள்ளது. சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சொத்து ID எண். : IDIB6624658833A

| ரிசர்வ் விலை : ரூ.75.00 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.7.50 லட்சங்கள் |
|---|---|---|

| வங்கி இணையதளம் | மின்னணு ஏல இணையதளம் | சொத்தின் இருப்பிடம் | சொத்தின் காணொளி |
|---|---|---|---|

சொத்து 2 : மண்ணிவாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது திருமதி. D. சசிகலா மற்றும் திரு. K. தேவேந்திரன் அவர்களின் பெயரில் உள்ள 194 சதுர அடி பரப்பளவு கொண்ட கடை S1 மற்றும் 199 சதுர அடி பரப்பளவு கொண்ட கடை S2, அத்துடன் "DCC ஸ்ரீஜித் கண்மணி" கட்டிடத்தில் 3892 சதுர அடியிலிருந்து முறையே 73 சதுர அடி மற்றும் 75 சதுர அடி UDS கொண்டது. 1912 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.27 மற்றும் 1980 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.28, பழைய ச. எண்.273/1A-ல் அடங்கியுள்ளது. சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சொத்து ID எண். : IDIB6624658833B

| ரிசர்வ் விலை : ரூ.15.00 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.1.50 லட்சங்கள் |
|---|---|---|

சொத்து 3 : மண்ணிவாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது திருமதி. D. சசிகலா, க/பெ திரு. K. தேவேந்திரன் அவர்களின் பெயரில் உள்ள 865 சதுர அடி கட்டிட பரப்பளவு கொண்ட ஃபிளாட் எண்.S3, அத்துடன் "DCC ஸ்ரீஜித் கண்மணி" கட்டிடத்தில் 3892 சதுர அடியிலிருந்து 390 சதுர அடி UDS கொண்டது. 1912 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.27 மற்றும் 1980 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.28, பழைய ச. எண்.273/1 மற்றும் புதிய சர்வே எண்.273/1A-ல் அடங்கியுள்ளது. சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சொத்து ID எண். : IDIB6624658833C

| ரிசர்வ் விலை : ரூ.32.00 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.3.20 லட்சங்கள் |
|---|---|---|

| வங்கி இணையதளம் | மின்னணு ஏல இணையதளம் | சொத்தின் இருப்பிடம் | சொத்தின் காணொளி |
|---|---|---|---|

சொத்து மற்றும் அதன் தொடர்பான ஆவணங்கள் ஆய்வு தேதி மற்றும் நேரம் : 29.09.2025 - 30.09.2025 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 06.10.2025 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டெண்டர் படிவம்/EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 06.10.2025

ஏலதாரர்கள் ஆன்லைன் ஏலத்தில் பங்கேற்பதற்கு எங்களது மின்னணு ஏல சேவை வழங்குநர் PSB அலையன்ஸ் பி. லிட்.-ன் இணையதளத்தை (https://www.baanknet.com) பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிக்கு PSB அலையன்ஸ் பி. லிட். உதவி மைய எண்.8291220220, மின்னஞ்சல் :- support.baanknet@psballiance.com மற்றும் சேவை வழங்குநரின் உதவி மையத்தில் உள்ள பிற உதவி எண்களுக்கு அழைக்கவும். PSB அலையன்ஸ் பி. லிட். உடன் ஆன பதிவு நிலை மற்றும் EMD நிலை பற்றி அறிய, தயவுசெய்து support.baanknet@psballiance.com தொடர்பு கொள்ளவும்.
சொத்து விவரங்கள் மற்றும் சொத்தின் புகைப்படம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com பார்வையிடவும் மற்றும் இந்த போர்ட்டல் தொடர்பான விவரங்களுக்கு தயவுசெய்து உதவிமைய எண்.8291220220 தொடர்பு கொள்ளவும்.
ஏலதாரர்கள் https://www.baanknet.com இணையதளத்தில் உள்ள சொத்து தேடுதலின்போது, மேலே குறிப்பிட்டுள்ள சொத்து ID எண்ணைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
தேதி : 19.09.2025
இடம் : மறைமலை நகர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் வங்கி.



யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா
சோத்துப்பாக்கம் AB கிளை
39, GST சாலை, சோத்துப்பாக்கம்- 603 319 மேல்மருவத்தூர் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம். மின்னஞ்சல் : ubin0913081@unionbankofindia.bank.in

SARFAESI சட்டம் 2002, பிரிவு 13 (2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

பெறுநர்,
1. M/s. Sriram Motors (விண்ணப்பதாரர் / நிறுவனம்) எண்.7, ஜெயசக்தி நகர், சோத்துப்பாக்கம், செய்யூர், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் -603301.
2. திருமதி. உமா க/பெ. திரு. அமாவாசையான், (விண்ணப்பதாரர்/ உரிமையாளர்) 26, மாரியம்மன் கோயில் தெரு, உத்தமநல்லூர், சீதாபுரம், செங்கல்பட்டு மாவட்டம் -603309.
3. திரு. C. அமாவாசையான், த/பெ. திரு. சிதம்பரம் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்), 26, மாரியம்மன் கோயில் தெரு, உத்தமநல்லூர், சீதாபுரம், செங்கல்பட்டு மாவட்டம் -603309.
ஐயன்மீர்/ அம்மையீர்,
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் 2002, பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு பிரிவு 13 (3)ன் உடன் படிக்கவும்.
முகவரியில் மேற்குறிப்பிட்டுள்ள தாங்கள் சோத்துப்பாக்கம் கிளையிலிருந்து பின் வரும் கடன்வசதிகளைப் பெற்றுள்ளீர்கள். மேலும் நிலுவைத் தொகையைச் செலுத்தாமல் மற்றும் தங்கள் கணக்குகளை திருப்திகரமாக இயக்க தவறிவிட்டீர்கள். எனவே RBI மற்றும் Prudential Accounting Norms வழிகாட்டுதலின்படி (NPA) நிலுவைத் தொகை/ தவணை/ வட்டியைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம், தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். 27/07/2025 அன்றுள்ளபடி நிலுவைத்தொகையான ரூ.17,82,488.73 (ரூபாய் பதினேழு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து நானூற்று எண்பத்து எட்டு மற்றும் பைசா எழுபத்து மூன்று மட்டும்) கீழே கொடுக்கப்பட்டுள்ள தங்கள் கணக்கில் நிலுவையில் உள்ளது.
மேற்குறிப்பிட்ட கணக்குகள் தொடர்பாக கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வசதி / கடன் | அனுமதிக்கப்பட்ட வரம்பு | NPA அன்றுள்ளபடி நிலுவைத் தொகை | வட்டி (URI) | 27.07.2025 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | ரொக்கக்கடன் | ரூ.25,00,000/- | ரூ.17,82,488.73 | ரூ.56857.00 | ரூ.18,39,345.73 |

வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகை அல்லது தொகையை திருப்பி செலுத்துவதற்காக திரு. C. அமாவாசையான், த/பெ. திரு. சிதம்பரம் அவர்களுக்கு குறிப்பிட்டுள்ள 27.04.2023 அன்று ஆவணங்களை செயல்படுத்தியுள்ளீர்கள் மற்றும் இதன் மூலம் கடனீட்டு வட்டி வழிகாட்டுதல் :
கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமானத்தில் உள்ள அசையாச் சொத்து: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், அச்சரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, V.எண்.118, உத்தமநல்லூர் கிராமத்தின் கிராம நத்தம் பட்டா எண்:31 இன்கீழ் கிராம நத்தம் பழைய சர்வே எண்.109/1, புதிய சர்வே எண்.117/13 இல் அடங்கிய திரு. அமாவாசையான் அவர்களின் உரிமைப்பெற்ற பரப்பளவு 4000 சதுர அடி (0367 சதுர மீட்டர்கள்) விஸ்தீரணங்கொண்ட நிலம் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி மற்றும் E. B. S. எண்.09586003468 (அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள வீட்டுக் கட்டிடம்)
நிலத்தின் பின்வருமாறு எல்லைகள்: வடக்கில் : திரு. இராமதாஸ் அவர்களின் உரிமைப்பெற்ற வீடு; தெற்கில்: தெரு; கிழக்கில்: தெரு; மேற்கில்: சுப்பராயன் அவர்களின் உரிமைப்பெற்ற வீடு; நாற்புறப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 24 மீட்டர்கள்; கிழக்கு மேற்காக தென் புறம் 24மீட்டர்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் 15.6மீட்டர்கள்; வடக்குத் தெற்காக மேற்கு புறம் 15.2மீட்டர்கள்; மொத்தம் = 4000சதுர அடி அல்லது 0367சதுர மீட்டர்கள் (அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள வீட்டுக் கட்டிடம்).
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் பிரிவு 13(2)-ன் படி, கடன் ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி, கடன் நிலுவைத் தொகையான 27.07.2025 அன்றுள்ளபடி ரூ.18,39,345.73 (ரூபாய் பதினெட்டு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து முன்னூற்று நாற்பத்து ஐந்து மற்றும் பைசா எழுபத்து மூன்று மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, ஒப்பந்த அடிப்படையிலான மாதாந்திர வட்டி செலுத்துமாறு இதன் மூலம் உங்களை அழைக்கிறோம் இந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் உங்கள் கடன்பாக்கித் தொகையை முழுமையாகச் செலுத்துங்கள், தவறினால், வங்கியானது மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் அல்லது அனைத்து உரிமைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.
சட்டப் பிரிவு 13(13) இன் படி, இந்த அறிவிப்பைப் பெற்ற பிறகு, வங்கியின் அனுமதியின்றி வழக்கமான வணிகத்தைத் தவிர, நீங்கள் மேற்குறிப்பிட்ட சொத்துக்களை கையாள்வதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளீர்கள்.
மேலும், கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கு SARFAESI சட்டப்பிரிவு 13 துணைப்பிரிவு (8) இன் கீழ் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.
தேதி : 18.08.2025, இடம்: சென்னை அதிகாரபூர்வ அதிகாரி / யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா



கனரா வங்கி
தலைமை அலுவலகம் - பெங்களூரு - சென்னை வட்டார அலுவலகம்
மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
பிராந்திய அலுவலகம் சென்னை வடக்கு
781-785, தரை தளம், ராயலா டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை - 600 002. மின்னஞ்சல் : recro2chn@canarabank.com

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்கள் மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணைநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாள / ஆக்கப்பூர்வ சுவாதீனம் (Symbolic/Constructive possession) செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, "உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 27.10.2025 ஆம் தேதியன்று (காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

தண்டையார்பேட்டை கிளை, போன்: 9444040931, 044-25957874, மின்னஞ்சல்:cb0931@canarabank.com

கடன்தாரர் பெயர் & முகவரி: 1) M/s CORAL STEEL, எண்.25/15, 6வது தெரு, காந்தி நகர், கொடுங்கையூர், சென்னை – 600118. 2) திரு.S. ஜோசஃப் செல்வராஜ் (பங்குதாரர்), மனை எண்.99, 5வது குறுக்குத் தெரு, M. K. B. நகர், வியாசர்பாடி, சென்னை - 600039. 3) திருமதி. J. சர்மிளாதேவி க/பெ. திரு. S. ஜோசஃப் செல்வராஜ் (பங்குதாரர்), மனை எண்.99, 5வது குறுக்குத் தெரு, M. K. B. நகர், வியாசர்பாடி, சென்னை - 600039

கடன் நிலுவைத் தொகை : 31.08.2025 அன்றுள்ளபடி ரூ. 4,54,70,264.16 (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து எழுபதாயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா பதினாறு மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்

சொத்தின் விவரம்: மூல ஆவணதாரர் பெயர்: CERSAI Security Interest Id: 400067903941: திருமதி.J.சர்மிளாதேவி: அட்டவணை 'A' சொத்து: மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மயிலாப்பூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை -600004, கிழக்கு அபிராமபுரம், காவாங்கரை சாலை, கதவு எண்.1, மனை எண்.51, மயிலாப்பூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.3337, பட்டாவின்படி பிளாக் எண்.66, சர்வே எண்.3337/8 – இன் 3358.34ச.அடி மற்றும் பிளாக் எண்.71, சர்வே எண்.3568/26 – இன் 1286.28ச.அடி ஆகியவற்றில் அடங்கிய சமமாக 4644.62ச.அடி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.52; தெற்கில்: தனியார் நிலம், கிழக்கில்: 40அடி சாலை, மேற்கில்: மனை எண்.80, நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்: 78அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 75அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 42அடி மற்றும் 38அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 40அடி; அனைத்தின் கூட்டுப்பரப்பளவு மொத்தம் 4658ச.அடி விஸ்தீரணம். அட்டவணை 'B' சொத்து (பவர் ஏஜெண்ட் பங்கு): அட்டவணை A இல் பிரிக்கப்படாத 2/6 பங்கு (1552.66ச.அடி) நிலம். அட்டவணை 'C' சொத்து: (கடன்தாரர் திருமதி. J. சர்மிளா தேவி அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து) மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை 'A' இன் கூட்டுப்பரப்பளவு 4658ச.அடியில் அட்டவணை B இல் பிரிக்கப்படாத 1/6 பங்கு (776.33 ச.அடி) அதனுடன் (ஸ்டில் தளத்தில் மூடிய கார் நிறுத்தம் மற்றும் பொதுப் பங்குகள் மற்றும் பொதுப் பரப்புகள் உட்பட) அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் பரப்பளவு 1860ச.அடி சூப்பர் அடித்தளப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.F2.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 2,61,00,000/- | டேவணித்தொகை | ₹ 26,10,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 1,00,000/- |
|---|---|---|---|---|---|

சொத்தினை பார்வையிடும் தேதி : 10.10.2025; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் 27.10.2025 காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாகவோ அல்லது Challan எடுத்து Challan இல் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/NEFT மூலமாகவும் 24.10.2025 அன்று மாலை 5 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) "E-Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, தண்டையார்பேட்டை கிளை (கைபேசி எண்.9444040931, மின்னஞ்சல்: cb0931@canarabank.com) அலுவலக வேலை நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். (அல்லது) சேவை முகவர் baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No.7046612345/ 6354910172/ 8291220220/ 9892219848/ 8160205051, Email :support.baanknet@psballiance.com/ support.baanknet@procure247.com) தொடர்பு கொள்ளலாம்.
Portal of E-Auction:https://baanknet.com
தேதி : 18.09.2025;
இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி





# ஓமனை போராடி வென்றது இந்தியா




**அபுதாபி, செப். 19:** ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் 12-ஆவது ஆட்டத்தில், இந்தியா 21 ரன்கள் வித்தியாசத்தில் ஓமனை வெள்ளிக்கிழமை வென்றது.

முதலில் இந்தியா 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 188 ரன்கள் சேர்க்க, ஓமன் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழந்து 167 ரன்கள் எடுத்து போராடி வீழ்ந்தது.

முன்னதாக டாஸ் வென்ற இந்தியா, பேட்டிங்கை தேர்வு செய்தது.

இந்தியா இன்னிங்ஸில் சஞ்சு சாம்சன் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உள்பட 56, அபிஷேக் சர்மா 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 38 ரன்கள் விளாசி வீழ்ந்தனர்.

திலக் வர்மா 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 29, அக்ஸர் படேல் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸரோடு 26 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

எஞ்சியோரில், ஷுப்மன் கில் 5, ஹார்திக் பாண்டியா 1, ஷிவம் துபே 5, அர்ஷ்தீப் சிங் 1 ரன்களுக்கு நடையைக் கட்டினர்.

ஓவர்கள் முடிவில் ஹர்ஷித் ராணா 13, குல்தீப் யாதவ் 1 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஓமன் பௌலர்களில் ஷா ஃபைசல், ஜிதென் ராமானந்தி, ஆமிர் கலீம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் எடுத்தனர்.

பின்னர் 189 ரன்களை நோக்கி விளையாடிய ஓமன் பேட்டர்கள், இந்திய பௌலர்களுக்கு சவால் அளித்தனர். கேப்டன் ஜதிந்தர் சிங் 5 பவுண்டரிகளுடன் 32, ஆமிர் கலீம் 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 64, ஹம்மத் மிர்ஸா 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 51 ரன்கள் விளாசி வீழ்ந்தனர்.

விநாயக் சுக்லா 1 ரன்னுக்கு ஆட்டமிழக்க, ஓவர்கள் முடிவில் ஜிதென் ராமானந்தி 3 பவுண்டரிகள் உள்பட 12 ரன்களுடனும், ஜிக்ரியா இஸ்லாம் ரன்னின்றியும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்திய தரப்பில் ஹர்ஷித் ராணா, குல்தீப் யாதவ், ஹார்திக் பாண்டியா, அர்ஷ்தீப் சிங் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.

### புள்ளிகள் பட்டியல்

(இந்தியா – ஓமன் ஆட்டம் (12) வரை)

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| குரூப் 'ஏ' | | | | |
| இந்தியா | 3 | 3 | 0 | 6 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| அமீரகம் | 3 | 1 | 2 | 2 |
| ஓமன் | 3 | 0 | 3 | 0 |
| குரூப் 'பி' | | | | |
| இலங்கை | 3 | 3 | 0 | 6 |
| வங்கதேசம் | 3 | 2 | 1 | 4 |
| ஆப்கன் | 3 | 1 | 2 | 2 |
| ஹாங்காங் | 3 | 0 | 3 | 0 |

### இன்றைய ஆட்டம்

சூப்பர் 4

இலங்கை - வங்கதேசம்

நேரம்: இரவு 8 மணி
நேரலை: சோனி ஸ்போர்ட்ஸ்

# பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விதிகளை மீறியது: ஐசிசி குற்றச்சாட்டு

**துபை, செப். 19:** ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், பாகிஸ்தான் – ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான ஆட்டத்துக்கு முன்பான நிகழ்வுகளில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விதிகளை மீறிச் செயல்பட்டதாக ஐசிசி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அந்த வாரியத்துக்கு மின்னஞ்சலும் அனுப்பியுள்ளது.

முன்னதாக, இந்தியா – பாகிஸ்தான் ஆட்டத்தின்போது இரு அணி வீரர்களும் பரஸ்பரம் கை குலுக்கிக் கொள்ளாத விவகாரத்தில், பிரதான நடுவர் ஆண்டி பைகிராஃப்ட் மீது பாகிஸ்தான் வாரியம் குற்றம்சாட்டியது. போட்டியிலிருந்து அவரை நீக்குமாறு அந்த வாரியம் இருமுறை விடுத்த கோரிக்கையை ஐசிசி நிராகரித்தது.

இந்த விவகாரத்தால் அதிருப்திக்குஉள்ளான பாகிஸ்தான், கடந்த புதன்கிழமை அமீரகத்துக்கு எதிரான ஆட்டத்துக்காக மைதானத்துக்கு வராமல் தாமதித்தது. சம்பந்தப்பட்ட விவகாரத்தில் தீர்வு காண, அமீரகத்துக்கு எதிரான ஆட்டத்தின் டாஸுக்கு முன்பாக பாகிஸ்தான் அணியின் கேப்டன் சல்மான் அகா, அதன் மேலாளர் நவீத் அக்ரம்சீமா ஆகியோரை பைகிராஃப்ட் சந்திப்பார் என பாகிஸ்தான் வாரியத்திடம் ஐசிசி தெரிவித்தது. பின்னர் சுமார் 1 மணி நேரம் தாமதமாக பாகிஸ்தான் அணி மைதானத்துக்கு வந்து சேர்ந்தது.

இந்நிலையில், அதன் பிறகு நடந்ததாக போட்டி வட்டாரங்கள் கூறியதாவது:

இந்தியா – பாகிஸ்தான் ஆட்டத்தின்போது நிகழ்ந்த தவறான புரிதல்கள் மற்றும் தகவல் பரிமாற்றத் தவறுகளை சரிசெய்துகொள்ளவே, பைகிராஃப்ட், சல்மான் அகா, நவீத் அக்ரம் சீமா இடையேயான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அவர்கள் சந்திப்பு மைதானத்தில், 'வீரர்கள் மற்றும் போட்டி அதிகாரிகள் பகுதி'யில் (பிஎம்ஓஏ) நடைபெற்றது. அதற்கு பாகிஸ்தான் வாரியம், தனது ஊடக மேலாளர் நயீம் கிலானியை அழைத்து வந்தது. பிஎம்ஓஏ பகுதிக்கு வீரர்கள், போட்டி அதிகாரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அங்கு ஊடக மேலாளரை அனுமதிப்பது விதி மீறிய செயல் என்றும் கூறி, கிலானிக்கு ஐசிசி ஊழல் தடுப்பு மேலாளர் அனுமதி மறுத்தார்.

கிலானியை அந்தச் சந்திப்புக்கு அனுமதிக்கவில்லையென்றால் போட்டியிலிருந்து விலகுவதாக பாகிஸ்தான் வாரியம் அச்சுறுத்தியது. அந்தச் சூழலில் வேறு வழியின்றி கிலானியும் பிஎம்ஓஏ பகுதிக்கு அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து பைகிராஃப்ட், சல்மான், நவீத் இடையேயான சந்திப்பை ஒலியின்றி செல்லிடப்பேசியில் விடியோ பதிவு செய்யவும் கிலானியிடம் பாகிஸ்தான் வாரியம் கூறியது.

அந்த விடியோ பதிவின் பயன்பாடு குறித்தும் ஐசிசிக்கு தெரிவிக்கப்படாத நிலையில், அந்தப் பதிவு சமூக வலைதளங்களில் பரவியது. அதுதொடர்பாக பல்வேறு ஊகங்களும் நிலவுகின்றன. இந்த விவகாரத்தில்தான் பாகிஸ்தான் வாரியம் விதிகளை மீறியதாக ஐசிசி அந்த வாரியம் மீது குற்றம்சாட்டியுள்ளது என்று அந்த வட்டாரங்கள் கூறின.

**விதி மீறல் இல்லை: பாக். வாரியம்...** ஆண்டி பைகிராஃப்ட், சல்மான் அகா, நவீத் அக்ரம் சீமா இடையேயான சந்திப்பின்போது தங்களின் ஊடக மேலாளர் உடனிருந்ததும், அதை விடியோ பதிவு செய்ததும் விதி மீறல் இல்லை என பாகிஸ்தான் வாரியம் கூறியுள்ளது.

இது ஐசிசி-யால் வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கு உள்பட்டதே என்றும், ஊடக மேலாளர் தங்கள் அணியின் ஒரு அங்கமே என்றும் தெரிவித்துள்ளது.

# வெண்கலம் வென்றார் அன்டிம் பங்கால்

**ஜாக்ரெப், செப். 19:** குரோஷியாவில் நடைபெறும் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் அன்டிம் பங்கால் வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியில் இந்தியாவுக்கு இது முதல் பதக்கமாகும்.


அன்டிம் பங்கால்

மகளிருக்கான 53 கிலோ பிரிவில் களம் கண்ட அன்டிம் பங்கால், அரையிறுதிச் சுற்று வரை முன்னேறி அதில் தோற்று, வெண்கலப் பதக்கச் சுற்றுக்கு வந்தார். 23 வயதுக்கு உள்பட்டோருக்கான உலக சாம்பியனும், ஸ்வீடனைச் சேர்ந்தவருமான எம்மா ஜோனா டெனிஸ் மால்கிரெனை அதில் எதிர்கொண்டார்.

தனது பலமான தடுப்பு ஆட்டத்தாலும், துல்லியமான தாக்குதலாலும் அன்டிம் 9-1 என்ற புள்ளிகள் கணக்கில் எம்மாவை வீழ்த்தி வெண்கலத்தைக் கைப்பற்றினார். ஏற்கெனவே, 2023-ஆம் ஆண்டு போட்டியிலும் வெண்கலம் வென்ற அன்டிமுக்கு, உலக சாம்பியன்ஷிப்பில் இது 2-ஆவது பதக்கமாக அமைந்தது.

இதனிடையே, ஆடவர் 60 கிலோ பிரிவில் சூரஜ் வஷிஸ்த், முதல் சுற்றில் 3-1 என மெக்ஸிகோவின் ஏஞ்செல் டெல்லெஸை வீழ்த்தினார். அடுத்த சுற்றில் அதே புள்ளிகள் கணக்கில் மால்டோவாவின் விக்டர் சியோபனுவை சாய்த்தார்.

அவ்வாறு அசத்தலாக முன்னேறி காலிறுதி வரை வந்த சூரஜ், அதில் 1-4 என செர்பியாவின் ஜார்ஜி டிபிலோவிடம் தோல்வியுற்றார். 97 கிலோ பிரிவில் நிதேஷ் முதல் சுற்றில் 3-2 என குரோஷியாவின் ஃபிலிப் ஸ்மெட்கோவை வென்றபோதும், அடுத்த சுற்றில் 0-4 என உலகின் நம்பர் 1 வீரரான ஈரானின் முகமதாதி சராவியிடம் தோல்வி கண்டார்.

77 கிலோ எடைப் பிரிவின் ரெபிசேஜ் சுற்றில் அமன் – உக்ரைனின் இஹோர் பிச்கோவிடம் தோற்று, பதக்க வாய்ப்பை இழந்தார். 72 கிலோ பிரிவில் அங்கித் குலியா தகுதிச்சுற்றிலேயே வட கொரியாவின் யோங்குன் நோவிடம் வீழ்ந்தார்.

# அரையிறுதியில் சாத்விக்/சிராக் இணை

## சிந்து மீண்டும் சறுக்கினார்

**சென்ஸென், செப். 19:** சீனா மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி/சிராக் ஷெட்டி இணை, அரையிறுதிச் சுற்றுக்கு வெள்ளிக்கிழமை முன்னேறியது. நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து காலிறுதியில் தோல்வியுற்றார்.


சாத்விக்/சிராக்


சிந்து

முன்னதாக, ஆடவர் இரட்டையர் காலிறுதியில் போட்டித் தரவரிசையில் 8-ஆம் இடத்திலிருக்கும் சாத்விக்/சிராக் கூட்டணி 21-14, 21-14 என்ற நேர் கேம்களில் சீனாவின் ரென் யு ஜியாங்/ஜி ஹானோன் ஜோடியை 38 நிமிஷங்களில் வீழ்த்தியது.

அரையிறுதியில் இந்த இந்திய கூட்டணி, போட்டித்தரவரிசையில் 2-ஆம் இடத்திலிருக்கும் மலேசியாவின் ஆரோன் சியா/சோ வூய் யிக் இணையை எதிர்கொள்கிறது.

இதனிடையே மகளிர் ஒற்றையர் காலிறுதியில், இருமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற சிந்து 14-21, 13-21 என்ற நேர் கேம்களில், உலகின் நம்பர் 1 வீராங்கனையாக இருக்கும் தென் கொரியாவின் ஆன் செ யங்கிடம் தோல்வி கண்டார். இந்த ஆட்டம் 38 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது.

நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான ஆன் செ யங்கை இத்துடன் 8-ஆவது முறையாக சந்தித்திருக்கும் சிந்து, அனைத்திலுமே தோல்வி கண்டுள்ளார். அண்மைக் காலமாக தடுமாற்றத்துடன் விளையாடி வரும் அவர், பல்வேறு போட்டிகளில் காலிறுதி அல்லது அதற்கும் முந்தைய சுற்றுகளிலேயே தோல்வி கண்டு வெளியேறி வருகிறார்.

# ஹரியாணாவுக்கு 5-ஆவது வெற்றி


ஹரியாணா – புணேரி ஆட்டம்.

**ஜெய்பூர், செப். 19:** புரோ கபடி லீக் போட்டியின் 41-ஆவது ஆட்டத்தில், நடப்பு சாம்பியன் ஹரியாணா ஸ்டீலர்ஸ் 34-30 புள்ளிகள் கணக்கில் புணேரி பால்டனை வெள்ளிக்கிழமை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் ஹரியாணா அணி 21 ரெய்டு, 8 டேக்கிள், 2 ஆல் அவுட், 3 எக்ஸ்ட்ரா புள்ளிகள் கைப்பற்றியது. அந்த அணி தரப்பில் ரெய்டர் வினய் 13 புள்ளிகள் வென்றெடுத்தார்.

மறுபுறம் புணேரி அணி 18 ரெய்டு, 6 டேக்கிள், 2 ஆல் அவுட், 4 எக்ஸ்ட்ரா புள்ளிகள் வென்றது. அந்த அணிக்காக ரெய்டர் பங்கஜ் மொஹிதே 14 புள்ளிகள் கைப்பற்றி அசத்தினார்.

இதனிடையே மற்றொரு ஆட்டத்தில் தெலுகு டைட்டன்ஸ் 43-29 புள்ளிகள் கணக்கில் தமிழ் தலைவாஸை வென்றது. இதையடுத்து புள்ளிகள் பட்டியலில், புணேரி பால்டன் 12 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஹரியாணா ஸ்டீலர்ஸ் 10 புள்ளிகளுடன் 3-ஆம் இடத்திலும், தெலுகு டைட்டன்ஸ் 8 புள்ளிகளுடன் 4-ஆம் இடத்திலும், தமிழ் தலைவாஸ் 6 புள்ளிகளுடன் 8-ஆம் இடத்திலும் உள்ளன.

## துளிகள்...

- உலக தடகள சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் ஈட்டி எறிதல் வீராங்கனை அன்னு ராணி 29-ஆம் இடமும் (55.18 மீட்டர்), ஆடவருக்கான 5,000 மீட்டர் ஓட்டத்தில் குல்வீர் சிங் 27-ஆம் இடமும் (13:42.34') பிடித்து வெளியேறினர்.
- இந்தியா – ஆஸ்திரேலியா மகளிர் அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் கடைசி ஆட்டம் சனிக்கிழமை (செப். 20) நடைபெறுகிறது. இதுவரை இரு அணிகளும் தலா 1 வெற்றியுடன் சமநிலையில் உள்ளன.
- இலங்கை கிரிக்கெட் வீரர் துனித் வெலாலகேவின் தந்தை சுரங்கா வியாழக்கிழமை காலமானதை அடுத்து, அவர் ஆசிய கோப்பை போட்டியிலிருந்து விலகி நாடு திரும்பினார்.
- உலகக் கோப்பை போட்டிக்குத் தயாராகும் வகையில், இந்திய ஜூனியர் மகளிர் ஹாக்கி அணி 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் ஆஸ்திரேலியாவுடன் செப்டம்பர் – அக்டோபரில் விளையாடவுள்ளது.
- இந்தியாவின் பிரதான கால்பந்து லீக் போட்டியான ஐஎஸ்எல்-ஐ, அகில இந்திய கால்பந்து சம்மேளனமே நிர்வகிக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்மேளன சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியா – ஆஸ்திரேலியா 'ஏ' அணிகள் ஆட்டம் 'டிரா'




**லக்னௌ, செப். 19:** இந்தியா 'ஏ' – ஆஸ்திரேலியா 'ஏ' அணிகள் இடையே நடைபெற்ற அதிகாரபூர்வமற்ற டெஸ்ட், வெள்ளிக்கிழமை 'டிரா'-வில் முடிந்தது.

கடந்த 16-ஆம் தேதி தொடங்கிய இந்த ஆட்டத்தில், டாஸ் வென்ற ஆஸ்திரேலியா, பேட்டிங்கை தேர்வு செய்தது. முதல் இன்னிங்ஸில் அந்த அணி 98 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 532 ரன்கள் எடுத்து புதன்கிழமை 'டிக்ளேர்' செய்தது.

அதிகபட்சமாக, ஜோஷ் ஃபிலிப் 18 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உள்பட 123*, சாம் கான்ஸ்டஸ் 10 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உள்பட 109 ரன்கள் விளாசினர். இந்திய தரப்பில் ஹர்ஷ் துபே 3, குர்நூர் பிரார் 2 விக்கெட்டுகள் எடுத்தனர்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸை விளையாடி வந்த இந்தியா, கடைசி நாளான வெள்ளிக்கிழமை 141.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 531 ரன்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. தேவ்தத் படிக்கல் 14 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 150, துருவ் ஜுரெல் 13 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உள்பட 140 ரன்கள் குவித்தனர்.

ஆஸ்திரேலிய பௌலர்களில் கோரி ரோஷிசியோலி 3 விக்கெட்டுகள் சாய்த்தார். இதையடுத்து 1 ரன் முன்னிலையுடன் 2-ஆவது இன்னிங்ஸை விளையாடிய ஆஸ்திரேலியா, விக்கெட் இழப்பின்றி 56 ரன்கள் எடுத்திருந்த நிலையில், கடைசி நாள் ஆட்டம் முடிவடைந்தது.

# நபோலியை வீழ்த்தியது மான்செஸ்டர் சிட்டி

**மான்செஸ்டர்/நியூகேஸில், செப். 19:** சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில், மான்செஸ்டர் சிட்டி 2-0 கோல் கணக்கில் நபோலியை வெள்ளிக்கிழமை சாய்த்தது.

அந்த அணிக்காக எர்லிங் ஹால்ந்த் 56-ஆவது நிமிஷத்திலும், ஜெரிமி டோகு 65-ஆவது நிமிஷத்திலும் கோலடித்தனர்.

சாம்பியன்ஸ் லீக் போட்டியில் எர்லிங் ஹாலந்த், மான்செஸ்டர் சிட்டிக்காக தனது 50-ஆவது கோலை ஸ்கோர் செய்துள்ளார். 49-ஆவது முறையாக களமிறங்கியபோது இந்த மைல் கல்லை எட்டியிருக்கும் ஹாலந்த், சாம்பியன்ஸ் லீக் போட்டியில் அதிவேகமாக 50-ஆவது கோல் அடித்தவராக சாதனை படைத்தார்.

இதற்கு முன், மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் ரியல் மாட்ரிட் அணிகளுக்காக விளையாடிய முன்னாள் வீரர் ரூட் வான் நிஸ்டெல்ரூய் 62-ஆவது ஆட்டத்தில் 50-ஆவது கோல் அடித்ததே சாதனையாக இருந்தது.

மறுபுறம் நபோலி அணி, அந்நிய மண்ணில் இத்துடன் 13 ஆட்டங்களில் விளையாடியிருக்கும் நிலையில், எதிலுமே வென்றதில்லை.

இதனிடையே, மற்றொரு ஆட்டத்தில் பார்சிலோனா 2-1 கோல் கணக்கில் நியூகேஸிலை வீழ்த்தியது.

பார்சிலோனாவுக்காக மார்கஸ் ராஷ்ஃபோர்டு, முதலில் 58-ஆவது நிமிஷத்திலும், பிறகு 67-ஆவது நிமிஷத்திலும் கோலடித்தார். விறுவிறுப்பான கடைசி நிமிஷத்தில் (90') நியூகேஸிலுக்காக ஆண்டனி கோர்டான் ஆறுதல் கோல் ஸ்கோர் செய்தார்.

## எர்லிங் ஹாலந்த் சாதனை


எர்லிங் ஹாலந்த்

சாம்பியன்ஸ் லீக் போட்டியில் பார்சிலோனா அணி, இங்கிலாந்து கிளப்பை வீழ்த்தி சீசனை தொடங்குவது கடந்த 2001-க்குப் பிறகு இதுவே முதல் முறையாகும்.

மறுபுறம் நியூகேஸில், கடந்த 2023 அக்டோபரில் பிஎஸ்ஜி அணியை வென்ற பிறகு, தனது சொந்த மண்ணில் நடைபெற்ற சாம்பியன்ஸ் லீக் ஆட்டங்களில் இதுவரை வென்றதில்லை.

இந்த ஆட்டத்தில் 2 கோல்கள் அடித்த மார்கஸ் ராஷ்ஃபோர்டு, பார்சிலோனாவுக்காக அறிமுக ஆட்டத்தில் 2 அல்லது அதற்கு மேல் கோல்கள் அடித்த 5-ஆவது வீரராக பெருமை பெற்றார்.

இதர ஆட்டங்களில், ஸ்போர்டிங் – கைராட்டையும் (4-1), எய்ன்டிராட் ஃப்ராங்க்ஃபர்ட் – கலாடசரேவையும் (5-1) வென்றன.

# சபரிமலையில் 4 கிலோ தங்கம் மாயமானதாக சர்ச்சை

## பேரவையில் விவாதிக்க மறுப்பு; எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

**திருவனந்தபுரம், செப். 19:** சபரிமலை ஐயப்பன் கோயிலில் 4 கிலோவுக்கும் மேல் தங்கம் மாயமானதாக எழுந்துள்ள சர்ச்சை குறித்து கேரள சட்டப் பேரவையில் விவாதம் கோரும் நோட்டீஸை பேரவைத் தலைவர் வெள்ளிக்கிழமை நிராகரித்தார். இதைக் கண்டித்து, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் கருவறைக்கு இருபுறமும் உள்ள துவார பாலகர் சிலைகள் மற்றும் பீடங்களின் தங்க முலாம் பூசப்பட்ட கவசங்கள் கடந்த 2019-ஆம் ஆண்டில் கழற்றப்பட்டு, சென்னையில் மறுஉருவாக்கம் செய்யப்பட்டு மீண்டும் பொருத்தப்பட்டன.


சபரிமலை சந்நிதானத்தில் உள்ள துவாரபாலகர் சிற்பங்கள் (கோப்புப் படம்).

இப்பணியில், கவசங்களின் எடை 4.5 கிலோ குறைந்துவிட்டதாக தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தை தாமாக முன்வந்து விசாரித்துவரும் கேரள உயர்நீதிமன்றம், சபரிமலை கோயிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியத்துக்கு கடந்த புதன்கிழமை சரமாரியாக கேள்வியெழுப்பியது.

மேலும், ஊழல் கண்காணிப்பு பிரிவு விசாரணைக்கும் உத்தரவிட்டது.

கேரளத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இவ்விவகாரம் குறித்து சட்டப் பேரவையில் விவாதிக்க வேண்டுமென காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் வெள்ளிக்கிழமை ஒத்திவைப்பு நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

ஆனால், நோட்டீஸை நிராகரித்த பேரவைத் தலைவர் ஏ.என். ஷம்சீர், இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், பேரவை விதிகளின்கீழ் விவாதிக்க முடியாது என்றார்.

அதேநேரம், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள விவகாரங்களை பேரவையில் விவாதித்த முன்னுதாரணம் இருப்பதாக காங்கிரஸ் உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான வி.டி.சதீசன் கூறினார்.

மேலும், 'சபரிமலையில் 4 கிலோ தங்கம் மாயமானதாக பக்தர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்; இது மிகத் தீவிரமான விவகாரம்' என்று அவர் கூறினார்.

ஆனால், 'விதிமுறைகளைவிட முன்னுதாரணங்கள் மேலானதல்ல' என்று குறிப்பிட்டு, விவாதத்தை அனுமதிக்க பேரவைத் தலைவர் மறுத்தார். இதைக் கண்டித்து, எதிர்க்கட்சி எம்எல்ஏக்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

அண்மையில் துவார பாலகர்களின் கவசங்கள் செப்பனிடுவதற்காக கழற்றப்பட்டு, சென்னைக்கு அனுப்பப்பட்டன.

சபரிமலை சிறப்பு ஆணையரிடம் உரிய அனுமதி பெறாமல் இந்தக் கவசங்கள் கழற்றப்பட்டதாக கூறி, தேவஸ்வம் வாரியத்துக்கு கண்டனம் தெரிவித்த கேரள உயர்நீதிமன்றம், கவசங்களை மீண்டும் கொண்டுவர உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், அந்தக் கவசங்கள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் உத்தரவிட்டது.


# ஆப்கன் விமான தளம் மீண்டும் வேண்டும்: டிரம்ப்

**வாஷிங்டன், செப். 19:** ஆப்கானிஸ்தானின் மிகப் பெரிய விமான தளமான பக்ராம் தளத்தை அமெரிக்க கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்

இது குறித்து அவர் கூறியதாவது:

பக்ராம் விமான தளத்தைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளை அமெரிக்க அரசு மேற்கொண்டுவருகிறது. அந்தவிமான தளத்தை தலிபான் அமைப்பிடம் நாங்கள் ஒப்படைத்ததில் எந்தப் பலனும் இல்லை.

அந்த விமான தளம் சீனாவுக்கு மிக நெருக்கத்தில் உள்ளதால் அது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அணு ஆயுதம் ஏந்தி தாக்குதல் நடத்தக்கூடிய தனது ஏவுகணைகளை சீனா தயாரிக்கும் இடத்தை வெறும் ஒரு மணி நேரத்தில் அடையக்கூடிய தொலைவில் அந்த விமான தளம் அமைந்துள்ளது என்றார் அவர்.



கடந்த 2001-ஆம் ஆண்டில் நியூயார்க் இரட்டை கோபுரத் தாக்குதலை நடத்திய அல்-காய்தா தலைவர் பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்க, அப்போது ஆப்கனை ஆண்டு வந்த தலிபான் அமைப்பினர் மறுத்துவிட்டனர்.

அதையடுத்து, ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்து, தலிபான்களை ஆட்சியிலிருந்து அகற்றியது. அதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட புதிய அரசுக்கும் தேசிய ராணுவத்துக்கும் ஆதரவாக அமெரிக்கப் படையினர் அந்த நாட்டில் தங்கியிருந்தனர்.



பக்ராம் விமான தளம் (கோப்புப் படம்).

இந்த நிலையில், பாகிஸ்தானின் அபோட்டாபாத் நகரில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்க சிறப்பு அதிரடிப் படையினர் கடந்த 2011-ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றனர். அதையடுத்து, ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக இருந்த அமெரிக்கப் படையினர் அனைவரும் கடந்த 2021-ஆம் ஆண்டு திரும்ப அழைக்கப்பட்டனர். ஆப்கன் அரசை தலிபான் அமைப்பினர் மீண்டும் கைப்பற்றினர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் இருந்தபோது, காபூலுக்கு அருகே பக்ராம் பகுதியில் உள்ள விமான தளத்தை முக்கிய மையமாகப் பயன்படுத்தின. படை வெளியேற்றத்தின் போது அந்த விமான தளத்தில் இருந்தும் அமெரிக்க வீரர்கள் வெளியேறினர்.

இந்தச் சூழலில், பக்ராம் விமான தளத்தை மீண்டும் கைப்பற்ற விரும்புவதாக டிரம்ப் கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தலிபான் திட்டவட்ட மறுப்பு

**காபூல், செப். 19:** தங்கள் நாட்டின் பக்ராம் விமான தளத்தை அமெரிக்கா மீண்டும் கைப்பற்ற அனுமதிக்க முடியாது என்று தலிபான் அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது குறித்து சமூக ஊடகத்தில் ஆப்கன் வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி ஸாஹிர் ஜலால் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:

அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு உறவைப் பேணுவதை வரவேற்கிறோம். ஆனால், அத்தகைய உறவு ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் நிறுத்தப்படாமல் பேணப்பட வேண்டும்.

அமெரிக்காவுடன் அரசியல், பொருளாதார ரீதியிலான உறவை மேம்படுத்த ஆப்கன் அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்று தனது பதிவில் ஸாஹிர் ஜலால் குறிப்பிட்டுள்ளார்.

## 'ஆப்கானிஸ்தானே முடிவெடுக்க வேண்டும்'

**பெய்ஜிங், செப். 19:** பக்ராம் விமான தளத்தை அமெரிக்க படைகளுக்கு விட்டுக்கொடுப்பது குறித்து ஆப்கன் அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்று சீனா கூறியுள்ளது.

இது குறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் கூறியதாவது:

ஆப்கானிஸ்தானின் இறையாண்மையையும், எல்லை மாண்பையும் சீனா பெரிதும் மதிக்கிறது. அந்த நாட்டின் எதிர்காலம் குறித்து அந்த நாட்டு மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும். எனவே, பக்ராம் விமான தளத்தில் அமெரிக்கப் படையினரை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் ஆப்கன் அரசின் முடிவில்தான் உள்ளது. சீனாவுக்கு நெருக்கமான அந்தத் தளத்தில் படைகளை நிறுத்தி பிராந்திய பதற்றத்தை அதிகரிக்கும் அமெரிக்காவின் முயற்சிக்கு யாரும் ஆதரவு தர மாட்டார்கள் என்றார் அவர்.

## ரஷியாவில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்




**மாஸ்கோ, செப். 19:** ரஷியாவின் கிழக்குக் கடலோரப் பகுதியான காம்சட்காவில் வெள்ளிக்கிழமை மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது குறித்து அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறியதாவது:

பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-கம்சட்ஸ்கி நகருக்கு 127 கி.மீ. கிழக்கே வெள்ளிக்கிழமை அதிகாலை 6.58 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.8 அலகுகளாகப் பதிவான அந்த நிலநடுக்கம் 19.5 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று அந்த ஆய்வு மையம் கூறியது.

இருந்தாலும், இதில் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல் இல்லை.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்தது. இருந்தாலும் சிறிது நேரத்தில் அந்த எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது.

முன்னதாக, இதே காம்சட்காவில் 8.8 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கம் கடந்த ஜூலை 29-ஆம் தேதியும் 7.4 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கம் கடந்த 12-ஆம் தேதியும் ஏற்பட்டது நினைவுகூரத்தக்கது.

## அணுசக்தி நிலையங்களைத் தாக்கத் தடை: தீர்மானத்தை திரும்பப் பெற்றது ஈரான்



**வியன்னா, செப். 19:** அணுசக்தி மையங்கள் மீது தாக்குதல் நடத்த நாடுகளுக்குத் தடை விதிப்பது தொடர்பாக ஐ.நா. அணுசக்தி அமைப்பான ஐஏஇஏவில் முன்வைத்த வரைவுத் தீர்மானத்தை ஈரான் கடைசி நேரத்தில் திரும்பப் பெற்றது.

இது குறித்து ஐஏஇஏ பொதுக் கூட்டத்தில் பேசிய ஈரான் தூதர் ரெஸா நஜாஃபி, நட்பு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அந்த வரைவுத் தீர்மானத்தை அடுத்த ஆண்டு கூட்டம் வரை நிறுத்தி வைப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையே, ரஷியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் முன்வைக்கப்பட்ட அந்த வரைவுத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்காக அமெரிக்கா திரைமறைவில் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டதாக ஐஏஇஏ வட்டாரங்கள் கூறின. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலோ, ஐஏஇஏ-வில் இஸ்ரேலுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டாலோ அந்த அமைப்புக்கு வழங்கும் நிதியுதவியைக் குறைக்கவும் அமெரிக்கா திட்டமிட்டிருந்ததாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சூழலில், வாக்கெடுப்புக்கு சிறிது நேரத்துக்கு முன்னதாக அந்த வரைவுத் தீர்மானத்தை ஈரான் திரும்பப் பெற்றது.

ஈரானின் அணுசக்தித் திட்டங்களை நிரந்தரமாக முடக்கும் நோக்கில் இஸ்ரேல் அங்கு கடந்த ஜூலை மாதம் தாக்குதல் நடத்தியது. அதில் அமெரிக்காவும் பங்கேற்று ஈரான் அணுசக்தி மையங்கள் மீது சக்திவாய்ந்த குண்டுகளை வீசியது.

இதற்குப் பதிலடியாக, தங்கள் அணுசக்தித் திட்டங்களைக் கண்காணிக்க ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான ஐஏஇஏ-வுக்கு அளித்துவந்த ஒத்துழைப்பை ஈரான் திரும்பப் பெற்றது. இதனால், ஈரானின் அணுசக்தி திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கு கண்டனம் தெரிவித்த பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள், ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமல்படுத்துவதற்கான நடைமுறையைத் தொடங்கி கடந்த மாத இறுதியில் அறிவித்தது நினைவுகூரத்தக்கது.

### சூடான்

## துணை ராணுவ தாக்குதலில் 43 பேர் உயிரிழப்பு

**கெய்ரோ, செப். 19:** வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் மசூதி மீது துணை ராணுவப் படையான ஆர்எஸ்எஃப் வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில் 43 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு உள்நாட்டுப் போரைக் கண்காணித்துவரும் மருத்துவக் குழு தெரிவித்தது.

வடக்கு டார்ஃபர் மாகாணத் தலைநகரான அல்-பஷீரை ஆர்எஸ்எஃப் படை முற்றுகையிட்டு, தொடர்ந்து எறிகணைகளை வீசி வருகிறது. இந்த நிலையில், அந்நகரில் வெள்ளிக்கிழமை சிறப்புத் தொழுகை நடைபெற்றுக்கொண்டிருந்த மசூதி மீது ட்ரோன் மூலம் ஆர்எஸ்எஃப் படை தாக்குதல் நடத்தியதாக அந்தக் குழு கூறியது.

சூடானில் அல்-புர்ஹான் தலைமையிலான ராணுவத்துக்கும், முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படைக்கும் இடையே அதிகாரப் போட்டி காரணமாக கடந்த 2023 ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் சண்டை நடந்து வருகிறது. இதில் லட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை.

| கரன்சி நிலவரம் (இந்திய ரூபாயில்) | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| | டாலர் 88.09 | யூரோ 103.48 | பவுண்ட் 118.73 | ரிங்கிட் 20.95 | டாலர் 68.57 |

| | |
|---|---|
| தங்கம் (24 கேரட்) 1 கிராம் | ரூ.11,160 |
| தங்கம் (22 கேரட்) 1 கிராம் | ரூ.10,230 |
| வெள்ளி 1 கிலோ | ரூ.1,43,000 |
| வெள்ளி 1 கிராம் | ரூ.143.00 |
| சென்செக்ஸ் | 82,626 ▼ 388 |
| நிஃப்டி | 25,327 ▼ 97 |

## யெஸ் வங்கியின் பங்குகள்: பந்தன் வங்கி விற்பனை



**மும்பை, செப். 19:** தங்களிடம் இருந்த யெஸ் வங்கியின் 0.49 சதவீத பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் அந்த முதலீட்டை பொதுத் துறை வங்கியான பந்தன் வங்கி திரும்பப் பெற்றுள்ளது.

இது குறித்து வங்கி வெளியிட்டுள்ள ஒழுங்காற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யெஸ் வங்கியின் 0.49 சதவீத பங்குகளை சுமிடமோ மிட்சுயி பேங்கிங் கார்ப்பரேஷனுக்கு விற்பனை செய்ததன் மூலம் முதலீட்டைத் திரும்பப் பெறும் நடவடிக்கை நிறைவடைந்தது. பங்கு ஒன்றுக்கு ரூ.21.50 வீதம் பங்குகள் விற்பனை செய்யப்பட்டன. மொத்தம் ரூ.15.39 கோடிக்கு இந்தப் பரிமாற்றம் நடைபெற்றது.

இந்த விற்பனையைத் தொடர்ந்து, பந்தன் வங்கியின் கைவசம் உள்ள யெஸ் வங்கி பங்குகள் 0.70 சதவீதத்தில் இருந்து 0.21 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜூலையில் குறைந்த உள்நாட்டு விமானப் போக்குவரத்து

**மும்பை, செப். 19:** கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவின் உள்நாட்டு விமானப் போக்குவரத்து எண்ணிக்கை முந்தைய 2024-ஆம் ஆண்டின் அதே மாதத்தோடு ஒப்பிடுகையில் 2.94 சதவீதம் குறைந்துள்ளது.

இது குறித்து பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:




நாட்டின் உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் கடந்த ஜூலை மாதத்தில் 1.26 கோடி பயணிகளை ஏற்றிச் சென்றன. முந்தைய 2024-ஆம் ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 2.94 சதவீதம் குறைவு. அப்போது உள்நாட்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை 1.29 கோடியாக இருந்தது.

ஏர் இந்தியாவின் அகமதாபாத்-லண்டன் விமானம் ஜூன் 12-இல் விபத்துக்குள்ளாகி 260 பேர் உயிரிழந்த சம்பவத்தின் பின்னணியில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மதிப்பீட்டு மாதத்தில், இண்டிகோ நிறுவனம் மொத்தம் 82.15 லட்சம் பயணிகளை ஏற்றிச் சென்று 65.2 சதவீத சந்தைப் பங்குடன் முன்னிலை வகிக்கிறது. இது முந்தைய ஜூன் மாதத்தின் 64.5 சதவீத சந்தைப் பங்கைவிட உயர்ந்தது என்றாலும், மாதாந்திர அடிப்படையில் 87.74 லட்சம் பயணிகளை ஏற்றிச் சென்றதைவிட குறைவாக உள்ளது.

அடுத்ததாக, ஏர் இந்தியா குழுமம் (முழு சேவை விமான நிறுவனமான ஏர் இந்தியா மற்றும் குறைந்த கட்டண விமான நிறுவனமான ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்) 33.08 லட்சம் பயணிகளை ஏற்றிச் சென்று 1 சதவீத சந்தைப் பங்கை இழந்துள்ளன.

இதன் லோட் ஃபாக்டர் (விமானத்தில் இருக்கைகள் நிரம்பிய சதவீதம்) 81.5 சதவீதத்திலிருந்து 78.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

மற்ற இரண்டு முக்கிய விமானப் போக்குவரத்து நிறுவனங்களான ஆகாசா ஏர், ஸ்பைஸ்ஜெட் ஆகியவை கடந்த ஜூலை மாதத்தில் முறையே 5.5 சதவீதம் மற்றும் 2 சதவீதம் சந்தைப் பங்கைப் பெற்றுள்ளன. இது முந்தைய மாதத்தோடு ஒப்பிடுகையில் மிதமான உயர்வாகும்.

கடந்த ஜூலை மாதத்தில் இண்டிகோ நிறுவனம், தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகிய ஆறு மெட்ரோ விமான நிலையங்களில் 91.4 சதவீதம் சரியான நேரத்தில் விமானங்களை இயக்கியதன் மூலம், நேரம் தவறாமையில் அனைத்து உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கிடையே முதலிடத்தில் இருந்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பைக் விற்பனை

## ஃபிளிப்கார்ட்டுடன் ராயல் என்ஃபீல்ட் ஒப்பந்தம்



**புது தில்லி, செப். 19:** தங்களது 350 சிசி பைக்குகளை விற்பனை செய்வதற்காக, இணையவழி வர்த்தக நிறுவனமான ஃபிளிப்கார்ட்டுடன் முன்னணி இருசக்கர வாகன நிறுவனங்களில் ஒன்றான ராயல் என்ஃபீல்ட் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

350 சிசி மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்காக ஃபிளிப்கார்ட்டுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் கீழ், புல்லட் 350, கிளாசிக் 350, ஹன்டர் 350, கோவன் கிளாசிக் 350, மிடியோர் 350 ஆகிய பைக்குகளை வாடிக்கையாளர்கள் ஃபிளிப்கார்ட் தளத்தில் வாங்கலாம்.

தற்போது பெங்களூரு, குருகிராம், கொல்கத்தா, லக்னௌ, மும்பை ஆகிய ஐந்து நகரங்களில் மட்டுமே இந்த பைக்குகள் இணையவழியில் விற்பனை செய்யப்பட்டாலும், விரைவில் சென்னை உள்ளிட்ட பிற நகரங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னையில்

## தங்கமயிலின் மேலும் இரு புதிய கிளைகள்

**சென்னை, செப். 19:** சென்னையில் மேலும் இரு புதிய கிளைகளை தங்கமயில் ஜுவல்லரி நிறுவனம் திறக்கிறது.

இது குறித்து நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மதுரையை தலைமையிடமாகக் கொண்ட தங்கமயில் நிறுவனம் கடந்த 33 ஆண்டுகளாக தங்க நகை விற்பனையில் தனக்கென தனியொரு அடையாளத்தைப் பதித்துள்ளது.

தற்போது 35 லட்சத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன் தமிழகம் முழுவதும் 64 கிளைகளைக் கொண்டு நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்தச் சூழலில், சென்னை ஆவடியில் தனது 65-ஆவது கிளையையும், கீழ்கட்டளையில் 66-ஆவது கிளையையும் நிறுவனம் ஞாயிற்றுக்கிழமை (செப். 21) திறக்கவுள்ளது.

இந்த திறப்பு விழாவின் முக்கிய அம்சமாக, தங்கமயில் ஜுவல்லரி காட்சியகத்துக்குள்ளேயே தனது பிரத்யேக 'பிரைடல் ஸ்டோரை' அறிமுகப்படுத்தி அதில் 'தங்க மாங்கல்யம்' என்னும் தனித்துவமான திருமண நகை கலெக்ஷன்களையும் நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# தினமணி

சனிக்கிழமை, 20 செப்டம்பர் 2025







# வேலூர் காவல் பயிற்சிப் பள்ளிக்கு வேலுநாச்சியார் பெயர்

## சென்னையில் சிலையை திறந்து வைத்து முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, செப். 19:** வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிக்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

முன்னதாக, சென்னை கிண்டியில் வேலுநாச்சியாரின் சிலையை அவர் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்தி: விடுதலைப் போராட்ட வீராங்கனை வேலுநாச்சியாரின் வீரத்தை வருங்காலத் தலைமுறையினர் அறிந்து போற்றும் வகையில், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் வேலுநாச்சியார் சிலை நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ரூ.50 லட்சம் செலவில் புதிதாக நிறுவப்பட்ட வேலுநாச்சியாரின் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர், சிலைக்கு அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



சென்னை காந்தி மண்டப வளாகத்தில் ரூ.50 லட்சத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை ராணி வேலுநாச்சியார் சிலையை வெள்ளிக்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டி.ஆர்.பி.ராஜா, மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, எஸ். ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டி.ஆர்.பி. ராஜா, மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா உள்பட பலர் பங்கேற்றனர்.

வேலுநாச்சியார் சிலை திறப்புக்குப் பிறகு, எக்ஸ் தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய முதல் பெண் போராளி, ஆங்கிலேயரை வெற்றி கொண்ட வீரமங்கை வேலுநாச்சியாரின் பெயர் வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளிக்குச் சூட்டப்படும். மண், மானம் காக்கப் புயலெனப் புறப்பட்ட அவரது வரலாறும், அவருக்குத் துணை நின்ற மருது சகோதரர்கள் உள்ளிட்ட தீரமிக்க தமிழர்களின் வரலாறும் இந்த மண் யாருக்கும் தலைகுனியாது எனும் வரலாற்றை உரக்கச் சொல்லும் என தனது பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

---

அரசுப் பள்ளிகளில்

## சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்கள் விவரம் சேகரிக்க உத்தரவு

**சென்னை, செப்.19:** அரசுப் பள்ளிகளில் 9 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களின் விவரங்களை சேகரித்து எமிஸ் தளத்தில் பதிவேற்ற பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

உயர் கல்வி வழிகாட்டி திட்டத்தின்கீழ் 2025-2026-ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 9-ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி தொடர்பாக பல்வேறு முன்னெடுப்புகளை பள்ளிக்கல்வித் துறை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர்புடைய வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கும், உயர் கல்வி சேர்க்கையை உறுதி செய்யும் வகையிலும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய மாணவர்களின் விவரங்களை பள்ளிக் கல்வித் துறையின் 'எமிஸ்' தளத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிக் கல்வித் துறை சார்பில், அனைத்துப் பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை:

மாவட்டங்களில் ஆசிரியர்கள் பதிவிடக்கூடிய தகவல்களின் அடிப்படையில் மட்டுமே இனிவரும் நாள்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய மாணவர்களின் உயர்கல்வி வழிகாட்டுதல்கள் மற்றும் உயர் கல்வி சேர்க்கையை உறுதிசெய்ய வழிவகுக்கும். ஆகவே, ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களின் விவரங்களை முழுமையாகப் பதிவு செய்வதை தலைமை ஆசிரியர்கள் உறுதிசெய்யவேண்டும்.

அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களின் விவரங்களை எமிஸ் தளத்தில் அக். 20-ஆம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யப்படுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'படையாண்ட மாவீரா' திரைப்படத்தை வெளியிட தடை கோரி வீரப்பன் மனைவி வழக்கு

**சென்னை,செப்.19:** 'படையாண்ட மாவீரா' திரைப்படத்தை வெளியிட தடை விதிக்கக் கோரி சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் மனைவி தாக்கல் செய்த வழக்கில் படத் தயாரிப்பு நிறுவனம் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழகம் முழுவதும் 'படையாண்ட மாவீரா' என்ற படத்தின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் எனது கணவரை சித்தரிக்கும் வகையில் மீசையுடன் உள்ள நபரின் படங்கள் இடம்பெற்றுள்ளன.

எனது கணவரை பிரதிபலிக்கும் புகைப்படங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு என்னிடம் அனுமதி பெற வேண்டும். இந்த திரைப்படம் எனது கணவரை மையப்படுத்தியதாக இருக்கும் என கருதுகிறேன். எனவே, வி.கே.புரொடக்‌ஷன் நிறுவனம் தயாரித்துள்ள இந்த திரைப்படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான சுவேதா ஸ்ரீதர், இந்த திரைப்படத்தை வெளியிட்டால், மனுதாரர் கணவரின் புகழுக்கு களங்கம் ஏற்படும். எனவே, திரைப்படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு படத் தயாரிப்பு நிறுவனம் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை செப்.26-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## 'தமிழரசு' இதழை பள்ளி நூலகங்கள் மூலம் பெற நடவடிக்கை

கல்வித் துறை உத்தரவு

**சென்னை, செப். 19:** தமிழக அரசின் அறிவிப்புகள், நலத் திட்டங்கள், போட்டித் தேர்வுகள் குறித்த தகவல்களை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், அனைத்து வகைப் பள்ளிகளின் நூலகங்களுக்கும் 'தமிழரசு' மாத இதழின் ஆயுள் சந்தாவைப்பெற நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 'தமிழரசு' தமிழ் மற்றும் ஆங்கில மாத இதழ் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

இதில் தமிழக ஆளுநரின் உரைகள், முதல்வர் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், துறை சார்ந்த அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், அரசு நலத் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்களுடன் கூடிய வெற்றிக் கதைகள், இலக்கிய கட்டுரைகள் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வினா- விடைகள் போன்ற பல்வேறு தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

எனவே, 'தமிழரசு' மாத இதழ் மாணவர்களுக்கு எளிமையாகக் கிடைக்கும் வகையில் ஆயுள் சந்தாக்களை அனைத்துப் பள்ளி நூலகங்களிலும், இதர கல்வி நிறுவனங்களின் நூலகங்களிலும் பெறத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை செயலர் வே.ராஜாராமன் பள்ளிக் கல்வித் துறைக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியிருந்தார்.

இதைத் தொடர்ந்து, அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்குமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன் உத்தரவிட்டுள்ளார்.

## தங்கம் பவுனுக்கு ரூ.80 உயர்வு



**சென்னை, செப். 19:** சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வெள்ளிக்கிழமை பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.81,840-க்கு விற்பனையானது.

சென்னையில் தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வரும் நிலையில், வியாழக்கிழமை பவுனுக்கு ரூ.400 குறைந்து ரூ.81,760-க்கு விற்பனையானது.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை தங்கம் விலை சற்று உயர்ந்தது. அதன்படி, கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ரூ.10,230-க்கும், பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.81,840-க்கும் விற்பனையானது.

இதேபோல் வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ரூ.143-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1.43 லட்சத்துக்கும் விற்பனையானது.

## தமிழகத்தின் ஒருசில இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு

**சென்னை, செப். 19:** தமிழகத்தின் ஒருசில இடங்களில் சனிக்கிழமை (செப்.20) மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், சனிக்கிழமை (செப்.20) முதல் செப்.25 வரை வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த காற்று மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். சென்னை நகரின் ஒரு சில பகுதிகளில் சனிக்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. எனினும், அதிகபட்ச வெப்பநிலை 91.4 டிகிரியையொட்டி இருக்கும்.

**மழை அளவு:** தமிழகத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டத்தில் 190 மி.மீ. மழை பதிவானது. திருப்பத்தூர், வடபுதுப்பட்டு (திருப்பத்தூர்) - 160 மி.மீ., வாணியம்பாடி (திருப்பத்தூர்) - 150 மி.மீ, திருப்பத்தூர் தாலுகா அலுவலகம்-140 மி.மீ., ஜமுனாமரத்தூர் (திருவண்ணாமலை), வனமாதேவி, பண்ருட்டி (கடலூர்) - 130 மி.மீ., வளவனூர் (விழுப்புரம்), மணம்பூண்டி, சூரப்பட்டு, நாட்டறம்பள்ளி (திருப்பத்தூர்), மணலூர்பேட்டை (கள்ளக்குறிச்சி), முகையூர், கோயிலனூர் (விழுப்புரம்), ஆம்பூர் (திருப்பத்தூர்) 110 மி.மீ. மழை பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரிக்கடலில் சூறாவளிக் காற்று மணிக்கு 55 கி.மீ.வேகத்தில் வீசக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

குவிந்த பக்தர்கள்...



சபரிமலை ஐயப்பன் கோயிலில் தரிசனத்துக்காக வெள்ளிக்கிழமை காத்திருந்த பக்தர்கள் கூட்டம்.

## உருளைக்கிழங்கு கொள்முதல்: உ.பி. – தமிழகம் இடையே ஒப்பந்தம்

**சென்னை, செப்.19 :** உத்தரபிரதேச மாநிலத்திலிருந்து 2,700 மெட்ரிக் டன் உருளைக்கிழங்குகளை கொள்முதல் செய்வதற்கு தமிழக, உத்தரபிரதேச வியாபாரிகள், ஏற்றுமதியாளர்களிடையே 9 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இரு மாநில அரசுகளுக்கிடையே மத்திய வர்த்தக துறையின் கீழ் உள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அப்தா) இதற்கான ஒருங்கிணைப்பை மேற்கொண்டது.

இதுகுறித்து அப்தா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

உத்தரபிரதேசத்தில் ஏராளமான உருளைக்கிழங்கு ரகங்கள் விளைவிக்கப்படுகின்றன. இவற்றை வணிகம் செய்ய ஊக்குவிக்கவும், தமிழகத்துக்கான நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்கான அடையாளம் காணவும் உத்தரபிரதேச மாநில தோட்டக்கலை கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பையும், தமிழக வேளாண் துறையின் தோட்டக்கலைத் துறையும் ஒருங்கிணைக்கப்பட்டன.

இதன்படி அப்தா மற்றும் இருமாநில அரசுகளின் வணிக அமைப்புகளும் இணைந்து சென்னையில் உருளைக்கிழங்கு நுகர்வோர் விற்பனையாளர் சந்திப்பு வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

உத்தரப்பிரதேச மாநில தோட்டக்கலை கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு அதிகாரிகள், அந்த மாநில விவசாயிகளும், தமிழகத்தின் ஈரோடு, கோயம்பேடு சந்தை வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

உத்தரப் பிரதேச மாநில தோட்டக்கலை கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பின் மேலாண் இயக்குநர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அப்தாவின் சென்னை மண்டலத் தலைவர் சோபன குமார், தமிழக தோட்டக்கலைத் துறையின் கூடுதல் இயக்குநர் முத்தையா, இந்திய தகவல் பணி சேவை துணை இயக்குநர் அருண்குமார், வேளாண் துறை துணை இயக்குநர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் இருமாநில விவசாயிகள், வியாபாரிகள், ஏற்றுமதியாளர்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு சுமார் 2,700 மெட்ரிக் டன் உருளைக்கிழங்கு கொள்முதல் செய்வதற்கு 9 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.










DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Chennai. Vol. 92, No. 262



COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.